பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 19 திங்கட்கிழமை (02-02-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:68

# கூட்டணித் தேர்தல் நியமனக் குழு தெரிவு

# சங்கரி முன்னிலையில் எதிர்க் குழு சாதனை

## பொதுச்சபை கூட்ட நாள் குறித்துப் பின்னர் முடிவு

கொழும்பு,பெப்ரவரி2

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் வீ.ஆனந்தசங்கரி எம்.பியின் தலைமையில் கொழும்பில் குழப்பம் ஏதுமின்றி நேற்று முற்பகல் நடைபெற்று முடிந்தது. அக்கூட்டத்தில் தேர்தல் நியமனக்குழு உத்தியோக பூர்வமாகத் தெரிவுசெய்யப்பட்டது. இத்தெரிவு ஆனந்தசங்கரிக்கு எதிரான குழுவின் சாதனை எனக் கூறப்பட்டது.**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைத்துவம் தொடர்பான இழுபறி நீதிமன்றத்தில் இருக்கத்தக்கதாக, தேர்தல் நியமனக் குழுவை சட்டரீதியாகத் தெரிவுசெய்து முடித்தமை, ஆனந்தசங்கரிக்கு எதிரான கூட்டணியின் ஏனைய தரப்பினரின் சாணக்கிய நடவடிக்கை என அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

ஆனந்தசங்கரிக்கு எதிராகக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதாகத் தெரிவித்து, அவரது தலைமையை நிராகரித்து, கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தை சிரேஷ்ட உப தலைவர் ஜோசப் பரராஜசிங்கத்தின் தலைமையில் நடத்துவதற்கு கட்சியின் ஏனைய நிர்வாகிகளினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதனை ஆட்சேபித்து ஆனந்தசங்கரி நீதிமன்றத்துக்குச் சென்றார். கட்சியின் மத்திய குழு உட்பட சகல அமைப்புக்களின் கூட்டங்களையும் தனது ஆலோசனையின்றி நடத்தக் கூடாது என்று நீதிமன்றிடம் இடைக் காலத்தடை உத்தரவும் பெற்றார்.

நீதிமன்றத் தடை உத்தரவு இருக்கத்தக்கதாக - மறுபுறத்தில் கட்சியின் நியமனக் குழுவும் தெரிவுசெய்யப்படாத நிலையில் - பொதுத் தேர்தல் ஒன்று திடீரென அறிவிக்கப்படுமானால் தமிழர் விடுதலைக் கூட்டணி

(16ஆம் பக்கம் பார்க்க)



நெதர்லாந்துக்கு சென்றுள்ள யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சின் ஆசிய விவகாரங்களுக்கான பிரதிநிதி வில் பிரெட்மோரை சந்தித்தபோது....

## தேர்தல் நியமனக் குழுவில் ஒருவர் மட்டுமே மாற்றம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் நியமனக் குழுவில் ஏழு பேரில் ஒரேயொருவர் மட்டும் மாற்றப்பட்டிருக்கிறார். ஏனைய 6 பேரும் தொடர்ந்து அக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

நேற்று நடந்த கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்நியமனக் குழு தெரிவுசெய்யப்பட்டது.

கட்சித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம், செயலாளர்நாயகம் இரா.சம்பந்தன், இணைப்பொருளாளர்கள் மாவை சேனாதிராசா, எஸ். தியாகராஜா (எஸ்ரி.ஆர்.) ஆகிய ஐவரும் பதவி வழி உறுப்பினர்களாகத் தொடர்ந்தும் நியமனக் குழுவில் இடம்பெறுவர்.

முன்னர் இக்குழுவில் இடம்பெற்ற ஐயம்பிள்ளை என்பவர் அப்பதவியை விட்டு விலகிவிட்டதால் அவரது இடத்துக்கு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த டேவிட் நாகநாதன் தெரிவு செய்யப்பட்டார். அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஏகாம்பரம் இந்தக் குழுவுக்கு மீண்டும் இம்முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்.

### அமைதி முயற்சிகள் அஸ்தமிக்கும் கட்டத்தை அடைந்துவிட்டதால்

## இந்தியாவின் தலையீட்டை கோருகின்றார் கதிர்காமர்

புதுடில்லி,பெப்.2

"இலங்கையின் சமாதான முயற்சிகள் அஸ்தமிக்கும் கட்டத்தை அடைந்துவிட்டன. இலங்கை விடயத்தில் தனது சிரத்தையை இந்தியா வெளிப்படுத்தவேண்டிய வேளையும் வந்துவிட்டது. இந்தியா இனிமேலும் இவ்விவகாரத்தில் கண்ணை மூடிக் கொண்டு இருக்கமுடியாது. பின்வழியாகவோ அல்லது கீழ் மட்டத்திலோ - அது எந்த வழி முறையிலாவது இருக்கலாம் - எங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இந்தியா உரிய சமிக்ஞைகளை அனுப்பவேண்டும்."

- இவ்வாறு கூறியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வெளிவிவகார ஆலோசகரும் இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர்.

இந்தியாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் பங்குபற்றுவதற்காக புதுடில்லி வந்திருக்கும் கதிர்காமர், இங்கு இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஸ்ரா, பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளையும் சந்தித்தார்.

இதேசமயம், மேற்படி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கை வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும் புதுடில்லி வந்திருந்தார்.

அவ்வேளை, செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ "ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், பிரதமர் ரணில் வக்கிரமசிங்கவும் தங்களுக்கு இடையிலான பிணக்குகளை சமரசமாகத் தீர்க்கும் முயற்சியில் குறிப்பிடத்தக்க சாதகமான நிலையை எட்டும் கட்டம் வந்துள்ளது." - என்று தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சுதந்திரதினத்தன்று ஏ-9 வீதியை மறித்துப் போராட்டம்

வவுனியா,பெப்.2

சுதந்திர தினமான நாளைமறுதினம் புதன்கிழமை ஏ-9 வீதியூடான போக்குவரத்தைத் தடை செய்யும் வகையில் வவுனியாவில் வீதி மறியல் நடத்தப்படவுள்ளது.

தமிழ் மக்களின் வேதனைகளையும், உணர்வுகளையும் வெளிக் கொண்டுவரும் நோக்கில் இந்த வீதி மறியல் நடத்தப்படவுள்ளது என்றும்-

அன்றையதினம் போக்குவரத்தினைத் தவிர்த்து வாகன உரிமையாளர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் -

மறியல் போராட்டத்தின் ஏற்பாட்டாளர்களான வவுனியா வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் துக்கதினமாக அனுஷ்டிக்கவேண்டும் என்றும் - ஒன்றியம் கோரியுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சு.க. மத்திய செயற்குழு இன்று கூடும்; முன்னணியில் 'நுஆ' இணைய ஒப்பந்தம்

ஸ்ரீல.சு.கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும் என்று கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து இச்செயற்குழுக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்படுமென்றும் அவர் சொன்னார்.

இதற்கிடையே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனிக்கும் தேசிய ஐக்கிய முன்னணிக்குமிடையிலான ஒப்பந்தம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

## நாடு சென்றுகொண்டிருந்த ஆரோக்கியமான பாதை அபாயப்பாதையாக மாறியிருக்கிறது என்கிறார் பிரதமர்

### கட்சிப் பொதுக்கூட்டத்தில் தெரிவிப்பு

பதுளை,பெப்.2

"ஆரோக்கியமான சூழ்நிலையில் நாடு சென்றுகொண்டிருந்த வேளையில், கடந்த நவம்பர் 4ஆம் திகதி ஏற்பட்ட அரசியல்ரீதியான நடவடிக்கைகளால் நாடு பாரிய பிரச்சினைக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இதனால், மீண்டும் ஒரு யுத்த சூழ்நிலை ஏற்பட்டுவிடுமோ என மக்கள் அஞ்சுகின்றார்கள்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலி எலவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய போது தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆலி எல அமைப்பாளரும், மனிதவள அபிவிருத்தி, கல்வி, கலாசார சபை ஆலோசகருமான ஆர்.எம்.ரட்நாயக்க இக்கூட்டத்திற்கு தலைமைவகித்தார்.

பெருந்திரளான தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் பிரதமர் மேலும் கூறியதாவது:- (16ஆம் பக்கம் பார்க்க)

ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது
40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.

— 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
— 2வது பரிசு 1.6மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
— 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
— 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
— 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
— 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.

இச்சலுகை 2004 ஜனவரி 15 முதல் 2004 ஏப்ரல் 15 வரை மட்டுமே.

NSB தேசிய சேமிப்பு வங்கி

# புதிய முன்னணியின் நிர்வாகிகள் தெரிவு இழுபறியைத் தீர்க்க ஜனாதிபதி முயற்சி!

## 5ஆம் திகதி எம்.பிக்கள், அமைப்பாளர்கள் கூட்டம்

கொழும்பு,பெப்.2

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிர்வாகிகள் தெரிவில் ஏற்பட்டுள்ள இழுபறியை முடிவுக்குக் கொண்டுவர ஜனாதிபதி எதிர்வரும் 5ஆம் திகதி பொ.ஐ.முன்னணியின் எம்.பிக்கள், தொகுதி அமைப்பாளர்கள் ஆகியோரின் கூட்டத்தைக் கூட்டியுள்ளார்.

சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. இணைந்து உருவாக்கிய ஐ.ம.சு.முன்னணியின் நிர்வாகிகள் தெரிவு குறிதது சுதந்திரக் கட்சிக்குள் பெரும் இழுபறி நிலை தொடர்ந்து புதிய முன்னணியின் தேசிய அமைப்பாளராக அநுர பண்டாரநாயக்கவும், செயலாளராக மங்கள சமரவீரவும் நியமிக்கப்படுவதை ஜே.வி.பி. விரும்புகின்றது. இருந்தும் சுதந்திரக் கட்சிக்குள் ஒரு பகுதியினர் நிமால் சிறிபால டி சில்வாவை செயலாளராக நியமிக்கும்படி அழுத்தம் கொடுக்கின்றனர்.

இதேவேளை - பொ.ஐ.முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம். ஜயரட்ணவும் புதிய முன்னணியின் செயலாளர் பதவியைப் பெற முயன்று வருகின்றார் எனக் கூறப்படுகிறது.

புதிய முன்னணியின் தவிசாளராக நநதன குணதிலகவை நியமிக்க ஜே.வி.பி. ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

சு.க. - ஜே.வி.பி. கூட்டின் மூலம் உருவாகியுள்ள புதிய முன்னணிக்குள் சுதந்திரக்கட்சியின் செயற்பாடுகள் அதிருப்தியளிப்பதாக கட்சி முக்கியஸ்தர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

புதிய முன்னணியின் முதலாவது பொதுக்கூட்டத்துக்கு அச்சிடப்பட்ட சுவரொட்டிகளை ஜே.வி.பியினர் நாடு முழுவதும் ஒட்டியுள்ளனர். சுதந்திரக் கட்சியினருக்கு விநியோகிக்கப்பட்ட இச்சுவரொட்டிகள் இன்னும் சுதந்திரக் கட்சியின் டார்லி வீதியிலுள்ள தலைமையகத்தில் குவிந்து கிடப்பதாகவும் சு.க. முக்கியஸ்தர்கள் தெரிவிக்கின்றனர்.

# சு.க. - ஜே.வி.பி. கூட்டு முன்னணியுடன் இ.தொ.ஐ. முன்னணி இணைந்து போட்டி!

## சென்னன் தலைமையிலான குழு ஜனாதிபதியுடன் பேச்சு

கொழும்பு,பெப்.2

மாகாண சபை, பொதுத் தேர்தல் ஆகியவற்றில் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் (சு.க.-ஜே.வி.பி.கூட்டு) இணைந்து போட்டியிடும். நுவரேலியா மாவட்டத்தில் மாத்திரம் தனித்துப் போட்டியிடும்.

இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவர் டி.வி.சென்னன் தலைமையிலான குழு, கடந்த வியாழக்கிழமை இரவு ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்திய போது இவ்வாறு முடிவு செய்யப்பட்டது என்று டி.வி.சென்னன் தெரிவித்தார்.

தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதும் இட ஒதுக்கீடுகள் தொடர்பாகத் தீர்மானிக்கப்படும் என்றும் இச்சந்திப்பின் போது முடிவானது.

இதற்கிடையே, இந்திய கடவுச் சட்டு பெற்றவர்கள் இலங்கைப் பிரஜா உரிமை பெறுவதற்கு உதவிபுரிய மாகாண ரீதியில் தமிழ் உத்தியோகத்தர்களை நியமிக்க ஜனாதிபதி இச்சந்திப்பில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்திய கடவுச்சீட்டு பெற்றோர் இலங்கை பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்க கால .அவகாசம் வழங்கப்பட வேண்டுமெனவும், இவர்களுக்கு உதவ மாகாண ரீதியில் தமிழ் உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டுமெனவும், இக்குழுவினர் கேட்டுக்கொண்டனர். எதிர்வரும் மார்ச் மாதம் வரை கால அவகாசம் வழங்கவும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார். - என்று சென்னன் கூறினார்.

## பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டவர் மரணம்!

யாழ்ப்பாணம்,பெப்.2

இனந்தெரியாத நபர்களினால் பெற்றோல் ஊற்றிக் கொளுத்தப்பட்டார் எனத் தெரிவித்து உடல் பூராகவும் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் கடந்த 28ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் 5 நாள்களின் பின் நேற்று அங்கு மரணமானார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்தவரும் ஒரு பிள்ளையின் தந்தையுமான தெய்வேந்திரம் ஜெசிந்தன்(வயது 21) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-15)

# ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப்புலவர் கழகம் நேற்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,பெப்.2

"ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம்" என்ற பெயரில் புதிய அமைப்பொன்று நேற்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இதன் அங்குரார்ப்பண வைபவம் நேற்று வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.

நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். தொடக்கவுரையினை யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் நிகழ்த்தினார்.

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சித்துறையின் யுனெஸ்கோ ஆலோசகர் எஸ்.அருள் செல்வன் வாழ்த்துரை வழங்கினார்.

தமிழ்ப்புலவர் கழகத்தின் அமைப்பாளர் தமிழவேள் இ.க. கந்தசுவாமி, யாழ் சைவபரிபாலன சபையின் தலைவரும் சபையின் பரீட்சைச் செயலாளருமான சைவப் புலவர் வ.கந்தசாமி, ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம், தமிழீழ விடுதலை அணியைச் சேர்ந்த மா.க. ஈழவேந்தன் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

முதுபெரும் கலைஞர்களான பாஷையூர் புலவர் ஆ.செகராசசிங்கம், சைவப்புலவர் பண்டிதை சி. விசாலாட்சி அம்மையார் ஆகியோர் இந்த நிகழ்வில் பொன்னாடை போர்த்து, சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தொல்காப்பியர் நாள்காட்டியை எஸ்.அருள்செல்வன் வெளியிட்டு வைத்தார். (எ-4)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.2

'யுனிவென்சர்ஸ்' வணிக முகாமைத்துவ கல்வி நிறுவனத்தின் அலுவலகம் ஒன்று இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். கந்தப்பசேகரம் வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது. (எ-3)







ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப்புலவர் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நிகழ்வில், தொல்காப்பியர் நாட்காட்டியை யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சித்துறையின் யுனெஸ்கோ ஆலோசகர் எஸ்.அருள் செல்வனிடமிருந்து சைவ பரிபாலன சபையின்தலைவர் சைவப் புலவர் வ.கந்தசாமி பெற்றுக்கொள்வதையும் நல்லை ஆதீன முதல்வரிடமிருந்து நாட்டுக் கூத்துப் புலவர் ஆ.செகராசசிங்கம், மேலதிக அரச அதிபர் சைவப் புலவர் திருமதி ப.திலகநாயகம்போலிடமிருந்து புலவர் சி.விசாலாட்சி அம்மையார் ஆகியோர் பாராட்டுப் பத்திரம் பெறுவதையும் படங்களில் காணலாம். சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை, அமைப்பாளர் தமிழவேள் இ.க.கந்தசுவாமி ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

# சுகாதாரச் சேவை ஊழியர்கள் போராட்டத்தைக் கைவிட முடிவு

## பிரதமரின் தலையீட்டால் சுமுகத் தீர்வு

கொழும்பு,பெப்.2

சுகாதாரச் சேவை ஊழியர்களின் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுவதென நேற்றுத் தீர்மானிக்கப்பட்டது. பிரதமரின் தலையீட்டால் இப்போராட்டத்துக்கு சுமுகத்தீர்வு காணப்பட்டது.

எனினும், தீர்வு பற்றிய உத்தியோகபூர்வ சுற்றறிக்கை வெளியிடப்படும்வரை சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என்று சுகாதாரச் சேவை ஊழியர் சங்கங்களின் இணைப்பாளரான ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

சம்பள முரண்பாட்டை நீக்குவது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 26ஆம் திகதி முதல் 12 ஊழியர்கள் இப்போராட்டத்தை ஆரம்பித்தனர். பிரதமரின் பணிப்புரையின் பேரில் கடந்த 30ஆம் திகதி பிரதமரின் சிரேஷ்ட ஆலோசகர்களான ஆர்.பாஸ்கரலிங்கம், தினேஸ் வீரக்கொடி ஆகியோரின் தலைமையில் உயர் மட்ட மாநாடு ஒன்று நடைபெற்றது.

காணியமைச்சர் ராஜித சேனாரத்ன, சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன, கூட்டுத் தொழிற்சங்கங்களின் இணைப்பாளர்களான ரவி குமுதேஷ், சமன் ரத்னபிரிய ஆகியோர் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

பாக்கி நிலுவைச் சம்பளம் ஒரே தடவையில் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஊழியர் சங்கங்கள் பேச்சில் தளர்த்திக்கொண்டன.

சம்பள நிலுவையில் அறுபது வீதம் வழங்கப்படும். 15 வீதம் ஏப்ரல் மாதத்திலும் எஞ்சிய 25 வீதம் 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலும் மூன்று கட்டங்களாக வழங்கப்படும் என்ற அரசின் யோசனைக்கு ஊழியர் சங்கங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன.

இது தொடர்பான கூட்டு ஒப்பந்தத்தில் அமைச்சின் செயலாளர் நவீன் பெரேரா, தொழிற் சங்கங்களின் சார்பில் இணைப்பாளர்களான ரவி குமுதேஷ், சமன் ரத்னபிரிய ஆகியோரும் திறைசேரி பிரதிச் செயலாளரும் கையொப்பமிட்டுள்ளனர்.

ஒப்பந்தத்தில் காணப்படும் இரண்டு விடயங்கள் திருத்தப்படவேண்டும் என தொழிற் சங்கங்கள் கேட்டுக் கொண்டபோது, உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் சுற்றறிக்கையில் அவை திருத்தப்படும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளார்.

உண்ணாவிரதம் இருந்தவர்களுள் எண்மரின் நிலை மோசமடைந்ததால் அவர்கள் நேற்றுமுன்தினம் விசேட சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டனர். எஞ்சிய நான்கு பேரும் நேற்று சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (எ-15)

## முனீஸ்வரன் ஆலய தைப்பூச திருவிழா

யாழ்ப்பாணம்,பெப்.2

யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன் தேவஸ்தானத்தில் தைப்பூசத் திருவிழா எதிர்வரும் 5ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆசிரியர் ஆறு. திருமுருகனின் சமயச் சொற்பொழிவுடன் ஆரம்பமாகும்.

10 மணிக்கு ஆரம்பமாகும் மூலஸ்தான அபிஷேக பூசையினைத் தொடர்ந்து 11 மணி முதல் 12 மணி வரை தேவாரப் பண்ணிசைக் கச்சேரி நடைபெறும்.

தொடர்ந்து 12 மணிக்கு இடம்பெறும் அன்னதானத்தை அடுத்து ஈழ நல்லூர் அருணா இசைக்குழுவினரின் பக்திகானங்கள் இடம்பெறும். (ஐ-15)

# தென்மராட்சி தெற்கில் சில வீடுகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும்

## படைத்தரப்பு அறிவிப்பு

தென்மராட்சி,பெப்.2

தென்மராட்சி தெற்குப் பகுதியில் ஒரு தொகுதி வீடுகள் இன்று உரியவர்களிடம் கையளிக்கப்படவிருக்கின்றன என படைத்தரப்பு அந்தப் பகுதி விவசாய சம்மேளனத்துக்கு அறிவித்துள்ளது.

இதற்கு வசதியாக, தென்மராட்சி பர்தேச செயலர், தனங்களப்பு, மறவன் புலோ, கைதடி - நாவற்குழி ஆகிய பகுதிகளின் கிராம சேவையாளர்கள் மற்றும் அப்பகுதிப் பொதுமக்களை இன்று காலை 9 மணிக்கு கோயிலாக்கண்டிக்கு வருமாறு படைத்தரப்பு அழைத்துள்ளது.

அதேவேளை -

சாவகச்சேரி நகரசபை தொழிலாளர் விடுதியின் ஒரு பகுதி நேற்றுப் படையினரால் கையளிக்கப்பட்டது.

ஆறு வீடுகள், உதயசூரியன் சனசமூக நிலையம், காளிகோயில், மலகூடம் ஆகியனவே கையளிக்கப்பட்டன. இவை யாவும் முற்றாகச் சேதமடைந்த நிலையில் காணப்பட்டன.

மேலும் 12 வீடுகளை படையினர் தம்வசம் வைத்துள்ளனர்.

அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலியினை அவ்விடத்தில் இருந்து அகற்றிய படையினர் பின்னர் அதனை சிறுதூரம் நகர்த்தி அமைத்துள்ளனர்.

விடுவிக்கப்பட்ட பகுதியினை துப்புரவு செய்யும் பணியில் நகர சபைத் தொழிலாளர்கள் நேற்று ஈடுபட்டனர்.

படையினர் நிலைகொண்டிருந்த விடுதிகளைக் கையளிக்கக் கோரி நகர சபைத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-3-117)

## சடலம் அடையாளம் காணப்பட்டது!

யாழ்ப்பாணம்,பெப்.2

கல்வியங்காடு, ஆடியபாத வீதியில் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்ற லொறி - சைக்கிள் விபத்தில் உயிரிழந்தவர் நேற்று அடையாளம் காணப்பட்டார்.

கல்வியங்காட்டில் இயங்கும் பெற்றோல் நிரப்பு நிலையம் ஒன்றில் இரவுக் காவலாளியாகப் பணியாற்றும் வல்லிபுரம் கந்தசாமி(வயது 71) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவரின் மரணம் குறித்த மரண விசாரணை இன்று இடம்பெறும்.

லொறியின் சாரதியான கனகரத்தினம் சிவகுமாரன் கோப்பாய் பொலீஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். (எ-3-15)

# புத்தளம் எம்.பியைக் கைது செய்யக்கோரி ஆர்ப்பாட்டம்

புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்க பண்டாரவை உடனடியாகக் கைதுசெய்யுமாறு கோரி நேற்று புத்தளம் நகரில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) இதனை ஏற்பாடு செய்திருந்தது. வடமேல் மாகாண சபை ம.வி.முன்னணி உறுப்பினர் பிரியங்க வீரரத்ன தலைமையில் பெருந்தொகையான ஆண்களும் பெண்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கி நின்றனர்.

# ஈராக் குண்டுத் தாக்குதல்களால் அதிர்ந்தது; அமெ. படையினர் உட்பட 120 பேர் பலி!

பக்தாத்.பெப்.2

ஈராக்கில் இடம்பெற்ற நான்கு வெவ்வேறு குண்டுத்தாக்குதல்களில் அமெரிக்கப் படையினர் மூவர் உட்பட 120பேர் கொல்லப்பட்டனர்; எண்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதில் ஒரு தாக்குதல், நேற்றுக் காலை உள்ளூர் நேரப்படி 11 மணியளவில் ஈராக்கின் வட பகுதியிலுள்ள குர்திஷ் பகுதியில் இடம்பெற்றது. இதில், 100 பேர் வரை கொல்லப்பட்டனர். ஆகக் குறைந்தது இருபது பேர் காயமடைந்தனர்.

ஹஜ் பெருநாளைக் கொண்டாடிய நூற்றுக்கும் மேற்பட்ட குர்திஷ் இனத்தவர்கள் கூடியிருந்த இடத்திலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

இரண்டு தற்கொலைப் போராளிகள் மேற்படி தாக்குதலை நடத்தினர். தாக்குதல் நடந்த இடம் சதாம் ஹுசைனுக்கு எதிரானவர்கள் செயற்படும் குர்திஷ் பகுதி என்பதால், இத்தாக்குதலை சதாம் ஹுசைனின் பாத் கட்சியினரே நடத்தியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலையடுத்து அப்பகுதி முழுவதும் பதற்றம் நிறைந்திருந்தது. சதாமின் ஆதரவுடைய தென் பகுதி முஸ்லிம்களுக்கும் குர்திஷ் பகுதியினருக்கும் இடையே கலகம் வெடிக்கும் நிலை காணப்பட்டதாக அங்குள்ள நிருபர் ஒருவர் தெரிவித்தார்.

மொசூல் நகரில் அமைந்திருந்த ஈராக்கிய பொலீஸ் நிலையம் மீது நேற்றுமுன்தினம் ஒரு தாக்குதல் இடம்பெற்றது. இதில், அங்கு நின்ற ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்; 45 பேர் காயமடைந்தனர்.

கார் ஒன்றை ஓட்டிவந்த தற்கொலைப் போராளியே மேற்படி தாக்குதலை நடத்தினார்.

**உலக அரங்கில்**

பல்கலைக்கழக கட்டடத்தை அண்மித்துள்ள இந்தப் பொலீஸ்நிலைய வாயிலுக்கு வேகமாக வந்த கார், அங்கிருந்த சுவருடன் மோதிவெடித்துச்சிதறியது. குண்டுத்தாக்குதல் நடந்த இடத்தில் துண்டிக்கப்பட்ட கால்களும், கைகளும் சிதறிக்கிடந்தன. அப்பகுதி தீப்பற்றி எரிந்தது.

மூன்றாவதுதாக்குதல், கிர்குக் நகர வீதியில் ரோந்து சென்ற அமெரிக்கப் படையினரைக் குறிவைத்து இடம்பெற்றது. ரோந்து சென்ற படையினர் மீது ஈராக்கியப் போராளிகள் திடீரென ரொக்கெட் தாக்குதல் நடத்தினர். இதனால், படையினர் நிலை குலைந்தனர். இங்கு இடம்பெற்ற தாக்குதலில் மூன்று அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர் என்று அங்குள்ள அமெரிக்கப்படைத் தலைமை கூறியிருக்கிறது.

நான்காவது தாக்குதல், பக்தாத் நகர வீதியில் திரண்டிருந்த மக்கள் மத்தியில் இடம்பெற்றது. இப்பகுதியில் திரண்டிருந்த மக்கள் மத்தியில் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்ததாகவும், இதில் நான்கு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர் என்றும் ஈராக்கிய இடைக்கால நிர்வாக சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். அப்பகுதியில் இருந்த அமெரிக்கப் படைமுகாம் மீது ஏவப்பட்ட ஷெல்லே மக்கள் மத்தியில் வீழ்ந்து வெடித்திருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையே - பக்தாத்தில் அமைந்துள்ள நெதர்லாந்து தூதரகம் மீது நேற்றுமுன்தினம் இரவு ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால், தூதரகக் கட்டடம் தீப்பற்றியது. அமெரிக்கப் படையினரும் தீயணைப்புப் படையினரும் சம்பவ இடத்திற்கு விரைந்து தீயைக் கட்டுப்படுத்தினர். தூதரகத்தில் இருந்தவர்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று நெதர்லாந்து அரசு அறிவித்திருக்கிறது.

## மெக்காவில் 20 லட்சம் யாத்திரிகர்கள்: சன நெரிசலில் சிக்கி 100 பேர் மரணம்!

புனித மெக்காவில் சமுத்திரமெனத் திரண்ட சுமார் 20 லட்சம் ஹஜ் பயணிகள் நேற்று ஹஜ் பெருநாளைக் கொண்டாடினர். துல்ஹஜ் மாதத்தின் தலைப்பிறை கடந்த ஜனவரி 23ஆம் திகதி தென்பட்டதால் நேற்று சவூதி அரேபியாவில் 'ஈதுல் அல்ஹா' என்னும் தியாகத்திருநாள் கொண்டாடப்பட்டது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலையில் இருந்தே ஹஜ் பயணிகள் அரபா மைதானம் நோக்கி வரத்தொடங்கினர். பின்னர் ஹஜ்ஜாஜிகள் சாத்தானுக்குக் கல் எறியும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. அந் நிகழ்ச்சியின் போது பெரும் நெரிசல் ஏற்பட்டது. நெரிசலில் சிக்குண்டு பலர் இறந்தனர் என்று சவூதி அரச செய்தி நிறுவனம் தெரிவித்திருக்கின்றது. 100 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன என்று இறுதியாகக் கிடைத்த செய்தியொன்று கூறியது.


அரபா நோக்கிச் செல்ல 20 ஆயிரம் பஸ்களை சவூதி அரசு ஏற்பாடு செய்திருந்தது. இவர்களுக்கென 10 ஆயிரத்திற்கும் அதிகமான உணவுச் சாலைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

முக்கியமான வழிபாடுகளில் அரபாத் மைதானத்தில் ஹாஜிகள் கூடுவதும் ஒன்றாகும்.

உலகத்தின் அமைதிக்காகவும் முஸ்லிம்களின் வாழ்க்கைப் பாதுகாப்பிற்காகவும் திரண்டிருந்த ஹஜ்ஜாஜிகள் உள்ளம் உருகப் பிரார்த்தனை செய்தனர்.

அதையடுத்து - சாத்தானுக்குக் கல்லெறியும் நிகழ்ச்சியின்போது மனாவிலுள்ள ஜமாரத் பாலத்தில் லட்சக் கணக்கான யாத்திரிகர்கள் திரண்ட போதே நெரிசல் ஏற்பட்டது. பல யாத்திரிகர்கள் நெரியுண்டனர். அவர்களில் சிலர் இறந்தனர் என்று சவூதி செய்தி நிறுவனம் தெரிவித்தது. எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படவில்லை மீட்பு வேலைகளில் சவூதி பாதுகாப்பு சுகாதாரத்துறை அதிகாரிகள் ஈடுபட்டனர் எனவும் மேலும் யாத்திரிகர்கள் நெரிபடாதிருக்க மக்கள் ஒன்றுதிரள்வதைக் கட்டுப்படுத்தினர் எனவும் சவூதி அதிகாரிகள் கூறினர்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட ஹஜ்யாத்திரிகர்கள் நெரிசலில் 14பேர் கொல்லப்பட்டனர்.



புனித ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லும் யாத்திரிகர்கள் சாத்தானின் தூணுக்கு கல்லெறியும் சடங்கை நிறைவேற்றும் காட்சி.

## ஆந்திர சட்டசபைத் தேர்தலில் நடிகை ரோஜா போட்டி!

சித்தூர்,பெப்.2



இந்திய நாடாளுமன்றத் தேர்தலுடன் ஆந்திர சட்டசபைக்கும் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தச் சட்டசபைத் தேர்தலில் தெலுங்கு தேசம் சார்பில் நடிகை ரோஜா போட்டியிட உள்ளார். சித்தூர் மாவட்டத்தில் உள்ள புத்தூர் தொகுதியில் அவர் போட்டியிடுவார்.

இந்தத் தொகுதியில் இதற்கு முன்பு ராஜசேகர் ரெட்டி போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவர் அலிபிரியில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் சந்திர பாபு நாயுடுவுடன் படுகாயம் அடைந்தார். அவரது உடல் நிலை தேறாததால் அவரது மகன் பிரீதம் ரெட்டியை நிறுத்த ஆலோசிக்கப்பட்டது. ஆனால், அவர் தேர்தலில் போட்டியிடும் வயது இன்னும் வராததால் நடிகை ரோஜாவை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அங்குள்ள வெதுரு குப்பம் மாவட்ட ஊராட்சிக்கு விரைவில் தேர்தல் நடக்கிறது. இதற்கான பிரசாரம் நடந்து வருகிறது. இதில் போட்டியிடும் தெலுங்குதேசம் வேட்பாளரை ஆதரித்து நடிகை ரோஜா நாளை பிரசாரம் செய்கிறார். அவருக்குப் பொது மக்கள் மத்தியில் இருக்கும் வரவேற்பை பொறுத்து ரோஜா புத்தூர்த் தொகுதியில் போட்டியிடுவது குறித்து உறுதி செய்யப்படும்.

## கோழி இறைச்சி சாப்பிட்டு உயிரிழந்தால் நஷ்ட ஈடு!

### தாய்லாந்துப் பிரதமர் அறிவிப்பு

பாங்கொக்.பெப்.2

பறவைக் காய்ச்சல் நோய் உலகையே பயமுறுத்திக்கொண்டு இருக்கிறது. இதனால் கோழி இறைச்சியைப் பல நாடுகள் தடைசெய்துள்ளன. இந்த நிலையில் தாய்லாந்து நாட்டுப் பிரதமர் தட்சின்சி சின்வத்ர அந்த நாட்டு வானொலியில் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

கோழி இறைச்சி, முட்டையை நன்றாக வேகவைத்துச் சாப்பிடுவது நூற்றுக்கு நூறு பாதுகாப்பானது. எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் பொது மக்கள் முன்னிலையில் கோழி இறைச்சி, முட்டையை நான் சாப்பிடத் தயாராக இருக்கிறேன். கோழிக்கறி சாப்பிடுவதால் எந்தப் பாதிப்பும், ஆபத்தும் ஏற்படாது. பயப்படத்தேவை இல்லை. நன்கு சமைத்த கோழிக் கறியைச் சாப்பிட்ட பிறகும் உடல் நலம் பாதிக்கப்பட்டு இறந்து விட்டால் அந்த நபருக்கு அரசு 75 ஆயிரம் டொலர் நஷ்டஈடு கொடுக்கும். கோழிக்கறி சாப்பிட்டதால் பாதிப்பு ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு குணமடைந்து வீடு திரும்பி வந்த பிறகும் இந்த இழப்பீட்டுத் தொகை தரப்படும்.

-இவ்வாறு அவர் வானொலியில் பேசினார்.

இதேவேளை, பறவைக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்க 5 மூலிகைகளை கண்டுபிடித்து இருப்பதாக தாய்லாந்து விஞ்ஞானிகள் அறிவித்துள்ளார்கள்.

## சதாமிடமிருந்து முக்கிய தகவல் பெற்றதாக அமெரிக்கா கூறுகிறது

வாஷிங்ரன்,பெப்.2

சதாம் ஹுசைனிடம் நடந்த விசாரணைகளின் போது தாம் மிகவும் பயனுள்ளதகவல் ஒன்றைப்பெற்றிருப்பதாக அவரிடம் விசாரணை நடத்திய அமெரிக்கப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், அது என்ன தகவல்? என்பது குறித்து தெரிவிக்க அவர்கள் மறுத்துவிட்டனர். தாம்பெற்ற தகவலை உறுதிசெய்தபின்னரே அது குறித்து அறிவிப்போம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சதாம் தெரிவித்த மேற்படி தகவலும், கைது செய்யப்பட்டிருக்கும் மற்றொரு ஈராக்கிய முக்கிய பிரமுகர் தெரிவிக்கும் தகவலும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ளதன் காரணமாகவே, அது குறித்து அவர்கள் எதனையும் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

சதாமிடம் இதுவரை நடைபெற்று முடிந்த விசாரணைகள் குறித்து பென்ரகன் அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

சதாம் ஹுசைன் தனது போராளிகளை மக்களுடன் இணைந்திருந்து தாக்குதல் நடத்துமாறு உத்தரவு பிறப்பித்திருக்கிறார் என்பது தெரியவருகிறது.

தொடர்ந்தும், அவரிடம் விசாரணை நடந்துவருகிறது. விரைவில் அவர் நீதிமன்றில் வழக்கிற்காக ஆஜர்ப்படுத்தப்படுவார் - என்றார்.

இதற்கிடையே -

சதாம் ஹுசைனை ஈராக்கிய இடைக்கால நிர்வாக சபையிடம் ஒப்படைப்பது குறித்து, அந்த நாட்டை வழிநடத்தி வரும் அமெரிக்க அதிகாரியான போல்பிரீமர் கூறியதாவது:-

சதாம் தற்போது ஈராக்கில் உள்ளார். தனி நீதிமன்றில் அவர் ஒப்படைக்கப்பட்டு, படுகொலை மற்றும் அன்னிய நாட்டுடன் படையெடுத்தது தொடர்பாக அவரிடம் வெளிப்படையாக விசாரணை நடத்தப்படும். தனி நீதிமன்றம் அமைக்கும் பணி தொடங்கி விட்டது. இதற்காக நாங்கள் ஒரு தொகையை செலவுசெய்துள்ளோம்.

நீதிமன்றம் அமைக்கப்பட்ட பின்னர், ஈராக்கிய நிர்வாக சபையிடம் சதாம் ஒப்படைக்கப்படுவார். பின்னர், நீதிமன்றில் சதாம் நிறுத்தப்படுவார். வெளிப்படையாக விசாரணை நடத்தப்படும்.

விசாரணையின் போது சதாம் ஒத்துழைப்புக் கொடுக்காததோடு, தொந்தரவுகளையும் கொடுத்து வருகிறார். பணம் பதுக்கி வைக்கப்பட்டுள்ள இடத்தையும் கூற மறுத்துவருகிறார்.


ஈராக்கிற்கு வெளியே அவர் ஆயிரக்கணக்கான கோடிரூபாவை பதுக்கி வைத்திருப்பது உறுதி. சதாம் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்கிறார்.

ஆனால், விசாரணைக்கு முன்பு அவரின் புகைப்படம் எதுவும் வெளியிடப் படமாட்டாது - என்றார்.

## ஈரான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப் பதவி விலகல் போராட்டம்

தெஹ்ரான்,பெப்.2

ஈரானிய நாடாளுமன்ற உறுப்பினர்களில் 100 பேருக்கு மேற்பட்டவர்கள் நேற்றுத் தமது உறுப்பினர் பதவியிலிருந்து திடீரென்று விலகினர். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக வேட்புமனுத் தாக்கல் செய்தவர்களில் பலர் தேர்தலில் போட்டியிடத் தடைவிதிக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்தே இந்தப் பதவி விலகல் போராட்டம் நடத்தப்பட்டது.



பதவி விலகல் கடிதத்தில் கையெழுத்திடும் ஈரானிய எம்.பீ. ஒருவர்.

ஈரானிய நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 20ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிட நாடுமுழுவதிலும் சுமார் 3 ஆயிரத்து 600 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர். ஆனால், இவர்களில் நூற்றுக்கணக்கானவர்கள் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர்கள் என்று வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

ஈரானின் பொறுப்பாளர் சபை இந்த முடிவெடுத்தது. தீவிர மதவாதிகளின் ஆதிக்கத்தில் இந்தச் சபை உள்ளது.

இந்தச் சபையின் முடிவை எதிர்த்தே ஈரானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகல் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பாவித்த Sony & Lat screen 21' T.V., Pioneer DVD Hifi system (3500W) Bajaj Caliber Motor Bike Bajaj Spirit Hadies Scooter என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு களுக்கு: T.P.:222 3798. (27931)

### தவறிவிட்டன

கந்தசாமி செல்வராணி என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல. 718072964V), விசேட அடையாள அட்டை (0902022638), கிளினிக் காட் என்பன 24-01-2004 அன்று யாழ்ப் பாணத்திற்கும் பரமேஸ்வராச் சந்திககு மிடையில் தவறிவிட்டன. கண்டெ டுத்தவர்கள் மாயவன் கொமினிகேசன், இராமநாதன் வீதி (பல்கலைககழகம் முன்பாக) எனும் முகவரியில் ஒப் படைத்துதவவும். சன்மானம் வழங் கப்படும். (27781)

R.K.சரவணபவ குருக்கள் லலி தாம்பாள் என்பவருடைய கறுப்பு பிரயா ணப்பை 23.01.2004 அன்று சாவகச் சேரியிலிருந்து தாண்டிக்குளத்திற் கிடையில் தவறிவிட்டது.பையில்,பாஸ் போட், புத்தகம், வங்கிப் புத்தகம், உடுப்புக்கள், புகைப்படங்கள் என்பன இருந்தன. கண்டெடுத்தவர்கள்: ச.செல்வகுமாரக் குருக்கள்,உடையார் ஒழுங் கை, அராலி தெற்கு, வட்டுக் கோட்டை என்ற முகவரியில் ஒப்ப டைக்கவும். தகுந்த சன்மானம் வழங கப்படும். (27909)

### பரிசுபெற்ற நாடகம்

சனிக்கிழமை வானொலியில் "தனிக்குடித்தனம்" நாடகம் கேட்டீர் களா? அதை எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம் பிள்ளையின் "வானொலி நாடகம் எழுதுவது எப்படி?' நூலை வாசித் தால் நீங்களும் அந்த மாதிரி நாட கங்கள் எழுதலாம்.(27939)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler குஞ்சுகள விலை 44/=, அதிவிசேட Prima பேட் டுக்குஞ்சுகள் விலை 65/=, 02.02.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவுசெய்யவும். எம்மிடமும் பருத்தித்துறைக் கிளையிலும் பெற்றுக கொள்ளும் Prima குஞ்சுகளுக்கு Prima கம்பனியால் உத்தரவாதம் வழங்கப்படும். (நல்லூர் வீடியோ சென்ரா வளவு),19, முருகேசர் ஒழுங்கை, முத் திரைச் சந்தையடி, நல்லூர்.(27472)

பகிரா இன கோழிக்குஞ்சுகள் 04.02.2004 மாலை விநியோகிக்கப் படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி.T.P:35292867. (27927)

### மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்நத அமெரிக்காவில் பொறியிய லாளராகக் கடமைபுரியும் 44 வயது, 8இல செவ்வாய், சொந்த வீட்டில் U.S.A. இல் வசிக்கும் மணமகனிற்கு 35 வயதிற்கு உட்பட்ட, A/L படித்த மணமகள் தேவை. விரும்பின் ஜாத கப் பொருத்தம் தவிர்க்கலாம். அமெ ரிக்கா செல்லவேண்டும். புகைப்படத் துடன் தொடர்புகொள்ளவும். V.K. கனபதிப்பிள்ளை (விரிவுரையாளர்), சிறுப்பிட்டி, நீர்வேலி. T.P.: 077 618118. (27766)

### தவறிவிட்டது

ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைச் சேர்ந்த பவளவேல் - சுரேந்தர் என்ப வரது தேசிய அடையாள அட்டை 83332040V, விசேட அடையாள அட்டை என்பன ஏழாலைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் **சரண்யா கல்வி நிலையத்தில்** ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (C33058)

## நேர் அச்சுப் பொறி (ஓப்செற்) இயக்குநர் தேவை

யாழ். சாலை கிளிநொச்சியில் அமைந்துள்ள

**அன்பு அச்சகத்திற்கு**
**நேரச்சுப் பொறி**
**இயக்குநர் தேவை.**

தகுதியானவர்கள் கீழ்வரும் முகவரிக்கு 15-02-2004 இற்கு முன் வேண்டுகை செய்யுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

அன்பு அச்சகம்.
யாழ். - கண்டி நெடுஞ்சாலை
கிளிநொச்சி. (27950)(40-11-16-36)

## கண்ணீர் அஞ்சலி



ஓய்வுபெற்ற மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் RRAN - மாவட் இணைப்பாளருமாகிய சரவணையைச் சேர்ந்த

எது அன்புத் தாத்தா

**பரநிருபசிங்கம் பரம்சோதி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (27948) (26-11-1-36)

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
(விஜயரத்தினம் குடும்பம்)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி செல்லத்துரை

கரவெட்டி மத்தொனியைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வதி விடமாகவும் கொண்ட சி.செல்லத்துரை அவர்கள் 20.01.2004 ஆந்திகதி அகாலமரணமானார்.

அன்னார் திரு.திருமதி சின்னதம்பி - பாறுபதியின் மூத்த புதல் வனும் சின்னத்துரை(சின்னமாமா) அவர்களின் சகோதரரும் வாரித்தம்பி - சீதேவியின் அன்பு மருமகனு நோர்வேயில் வசிக்கும் அருந் தவராணியின் அன்புக் கணவரும் ஜெயதீபா(ஜேர்மனி), ஜெயவதனா (ஜேர்மனி), அனுசா, யசோ(நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் தயானந்தன், உதயசூரியன்(ஜேர்னி), சிவபாலன் - ஜெயம்(நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அமிர்தா, அதீனா ஆகியோரின் பேரனு மாவார்.

அன்னாரின் பூதவுடல் நோர்வே ஒஸ்லோவில் 03.02.2004 செவ் வாய்க்கிழமை இலங்கை நேரப்படி பிற்பகல் 4 மணிக்கு அடக்கம் செய்யப்படும். அதே நேரத்தில் அவரது தந்தையார் இல்லத்தில் நினைவு அஞ்சலி நிகழவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
மத்தொனி
கரவெட்டி தெற்கு, கரவெட்டி. (சீ33061)(36-11-16) சி.சின்னத்துரை (சின்னமாமா)

# துன்பங்களை எதிர்கொண்ட போதிலும் சமாதானத்தில் ஆர்வமாக உள்ளோம்!

## யாழ்.அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் தெரிவிப்பு

வலி.வடக்கு,பெப்.2

இன்று பல துன்பங்களை எதிர் கொள்ளவேண்டி உள்ள போதிலும் கூட நிலையான சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதில் நாம் மிகவும் அவதானமாக இருக்கின் றோம். இதன் அடிப்படையில்தான் அரசுக்குப் பல விட்டுக்கொடுப்புக் களைச் செய்கின்றோம்.

யாழ்.மாவட்ட அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் செம்மணன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.நல்லூர் கோட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் 4ஆவது பேரா ளர் சங்கம மாநாடு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் க.சிவராசா தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுட ரினை மாவீரர் மேஜர் நீலாம்பரியின் தந்தை செல்லத்துரை மற்றும் மாவீ ரர் மேஜர் ரஞ்சனின் தந்தை தம்பி ராசா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர்அமைப்பைச் சேர்ந்த போராளி செல்வி சுடர் அரசி ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரை யாற்றிய துணைப்பொறுப்பாளர் செம் மணன் கூறியதாவது:-

ஒன்றுபட்ட சக்தியாகத் தேசிய ஒருமைப்பாட்டுக்கு உழைக்க வேண டிய கடமையும் பொறுப்பும் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கு உள்ளது. எம்மக்களுடைய ஒட்டு மொத்தமான உரிமைக்கும் பொருளா தார மேம்பாட்டுக்கும் சுதந்திரத்திற்கு மான எழுச்சிப் பேரவைகள் உழைக்க வேண்டும்.

இன்று மக்களிடையே மயக்க மான சூழ்நிலை காணப்படுகின்றது. ஆனால், எம்மைப்பொறுத்தவரை அத தகைய நிலைமை இல்லை. எந்த வகையான குழப்பமும் இன்றித் தெளிவான சிந்தனையுடன் போராட் டத்தையும் அரசியற் செயற்பாடு களையும் தேசியத் தலைவர் முன்னெ டுத்துச் செல்கின்றார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத திட்டு இரண்டு வருடங்களாகின்ற போதிலும் எம்மக்கள் எதிர்பார்த்த எதனையும் அரசாங்கம் வழங்கவும் இல்லை; மக்களுக்கு கிடைக்கவும் இல்லை.

இந்த நாட்டில் யுத்தம் வேண்டும் என்று கூறிக்கொள்கின்ற இரண்டு தென் இலங்கை அரசியல் கட்சிகள் கூட்டமைப்பொன்றை உருவாக்கிக் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டி ருக்கின்றன.

எமது மக்களின் விடுதலைக் காகவும் வெற்றிக்காகவும் செயல் திட்டங்கள் எம்மால் முன்னெடுக்கப் பட்டுக் கொண்டே இருக்கின்றன. இதில் வெற்றி பெறுவதற்கு தலை வரின் கைகளை மேலும் பலப் படுத்த வேண்டியது தமிழ்மக்கள் ஒவ்வொருவரின் கடமையும் பொறுப பும் ஆகும் என்றார் அவர்.

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலா ளர் சீ.வி.கே. சிவஞானம், தேசிய எழுச்சிப் பேரவையின் கொள்கை முன னெடுப்புச் செயலர் மா.க.ஈழவேந் தன், யாழ்ப்பாணம், நல்லூர் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் பொஈஸ் வரன் ஆகியோரும் நிகழ்வில் உரை யாற்றினர். (ஒ-86)

### கல்விச் சேவைப் பணி வெற்றிடம்

யாழ்ப்பாணம் , பெப்.2

தீவகக் கல்வி வலயத்தின் ஊர்கா வற்றுறை கோட்டக்கல்வி அதிகாரி பதவிக்கும் உதவிக் கல்விப் பணிப் பாளர் (முறைசாராக் கல்வி) பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பதவிகளுக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர் களும், இலங்கை அதிபர் சேவை தரம் 1, தரம் 2-I ஐச் சேர்ந்தவர் களும் விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிவரங்கள் அடங்கிய விண் ணப்பத்தை இரு பிரதிகள் தயாரித்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்வி அலுவலகத்தில் விண ணப்பிக்குமாறு தீவக வேலணை வலயக்கல்விப் பணிப்பாளர் இராதா கிருஷ்ணன் கேட்டுள்ளார். (ஒ-ரி)

## எனது நன்றிகள்



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் 164புள்ளிகள் பெற்று பாடசாலையில் மூன்றாவது இடத்தையும் மாவட்டத்தில் 14ஆவது இடத்தையும் பெற எனக்கு அன்புடன் கல்வி புகட்டிய அதிபர், உபஅதிபர், வகுப்பாசிரியர் மற்றும் அனைத்து ஆசிரிய தெய்வங்களுக்கும், ஞானக்குழந்தை இல்ல ஆசிரியர் களுக்கும் கலங்கி நின்றவேளையில் ஊக்கம் தந்த தாத்தா, அப்பம்மா, அம்மப்பா மற்றும் உறவுகள் நண்பர்களுக்கும் வெளி நாட்டிலும் தூரஇடங்களிலும் இருந்து தொலைபேசி மூலம் என்னை ஊக்குவித்த அனைத்து உறவுகளுக்கும் எனது நன்றிகள்.

*பானு காமென்ஸ்*
*11, பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.* (27923)(36-11-16)

அன்புடன்
**ஆ.றோய் பானுசந்தர்.**

## 113 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
03-07-1960



மறைவு
12-10-2003

**திருமதி தயாபரி ஆனந்தகுமார்**

பாசமுடன் எமை வளர்த்த அம்மா!
பாச மழை பொழியும் அப்பாவின்
அரவணைப்பில்
உம் முகத்தைக் காண்கின்றோம்
எம் மூலம் நீர் அடைய நினைத்த
இலட்சியக் கனவை நனவாக்குவோம்!

*பானு காமென்ஸ்,*
*11, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (27924)(17-18-36)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

## நீங்காத நினைவலைகள்

| முதலாம் ஆண்டு | 1 ஆம் வருடம் | 2 ஆம் வருடம் |
|---|---|---|
| தோற்றம் 15-08-1920 / மறைவு 15-01-2003 | தோற்றம் 15-03-1927 / மறைவு 14-08-1993 | தோற்றம் 14-10-1934 / மறைவு 15-10-2002 |
|  |  |  |
| கந்தையா தம்பு | திருமதி தம்பு நாகம்மா | அமரர் முருகேசு கார்த்திகேசு |

திதி:பூர்வ பக்க துவாததி
02.02.2004

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழியமைத்து எமது சிறப்பை தமது சிறப்பாகக் கருதி எம்மை வழிநடத்திய தந்தை , தாய், மாமன் மூவரையும் தந்தையின் முதலாம் ஆண்டு நிறைவு நாளில் நினைவு கூர்ந்து அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கச்சாய் வீதி,
கொடிகாமம். (27949)(36-11-16)

தம்பு கந்தையா குடும்பத்தினர்.

உதயன்

## தாமரைக் கட்சிகளின் கனவு நிறைவேறுமா?

இந்திய நாடாளுமன்றம் எதிர்வரும் வெள்ளிக் கிழமை கலைக்கப்படுகின்றது. அங்கு விரைவில் பொதுத்தேர்தல். இந்த ஆண்டு இறுதிவரை தொடரக்கூடிய தனது ஆட்சியை நேரகாலத்துடன் முடித்துக் கொண்டு மக்களை முன்கூட்டியே சந்திக்கத் தயாராகிவிட்டது ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி.

ஏறத்தாழ இந்திய நாடாளுமன்றம் கலைக்கப்படும் அதேசமயம், இலங்கையிலும் நாடாளுமன்றக் கலைப்பு இடம்பெறலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தன்னுடைய அதிகாரங்களைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தை எந்நேரமும் கலைக கலாம்.

ஜனாதிபதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி யுடன் சேர்ந்து புதுக்கூட்டமைத்திருக்கின்றது. புதிய கூட்டின் மூலம் நாடாளுமன்றத்தில் தனது கட்சியின் பலத்தை அதிகரித்துக்கொள்ளமுடியும் என்பதோடு, புதிய கூட்டு ஆட்சியைக் கைப்பற்றுமானால் அரச நிர்வாகத்திலும் கணிசமான அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. கனவு காண்கின்றது. அதனால், உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கின்றது அக்கட்சி.

அதேபோன்று ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள்ளும் அமைச்சர் பதவியின் சொகுசுகளை முன்னர் அனுபவித்த பிரமுகர்கள் பலர் அதை மீண்டும் அடையத் துடிக்கின்றார்கள். புதிய தேர்தல் ஒன்று நடக்குமானால் ஜே.வி.பியுடன் சேர்ந்து கூட்டமைத்துப் போட்டியிட்டு, வெற்றியீட்டி, அதை அடையலாம் என்பது அவர்களது நப்பாசை. அத்தகையோரும் தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைக்கும்படி ஜனாதிபதியை வற்புறுத்துகின்றார்கள்.

இந்த வற்புறுத்தல்களுக்கெல்லாம் ஜனாதிபதி எடுபடுவாரா?, உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைப்பாரா? - என்பனவையே அரசியல் வட்டாரங்களில இப்போது பரபரப்பாக எழுப்பப்படும் கேள்விகள்.

எது எப்படியென்றாலும் நாடாளுமன்றத்தைக் கலைக்க முன்னர் சில வேலைகளை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி காத்திருக்கவேண்டியுள்ளது.

தமது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டமைப்பின் தலைவர், செயலாளர், தேசிய அமைப்பாளர் போன்ற கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு உரியவர்களை நியமிக்கவேண்டும். அதற்கு முதலில் ஜே.வி.பியுடன் இணக்கத்துக்கு வரவேண்டும். அடுத்தகட்டமாக தமது சுதந்திரக் கட்சி சார்பில் கூட்டமைப்பில் உயர் பதவிகளைப் பெறுவோரை அவர் தெரிவுசெய்யவேண்டும். அதற்கு சு.க.வுக்குள் ஏற்கனவே பல பிடுங்கல் பாடு என்று தெரிகின்றது. அனுரா பண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ஷ, மங்கள சமரவீர எனப் பலர் போட்டா போட்டி.

கூட்டமைப்பின் நிர்வாகிகளைத் தெரிவுசெய்ததும், கூட்டமைப்பிற்கான யாப்பைத் தயாரித்து, அங்கீகரித்து, கூட்டமைபபைத் தேர்தல் ஆணையாளரிடம் ஒரு கட்சியாகப் பதிவுசெய்யவேண்டும்.

இதுதவிர, தற்போதைய நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் மாகாணசபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றினால்தான் அத் தேர்தல் தொடர்பாக ஏற்கனவே தாம் கண்டுள்ள - இணக்கத்தை - முடிவை ஜனாதிபதியால் செயற்படுத்தமுடியும். எனினும், நாளை அவசர சட்டமூலம் என்ற ஏற்பாட்டின்கீழ் நாடாளுமன்றில் இதனைச் சமர்ப்பித்து நாளையே அதை நிறைவேற்றி விடுவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது. இவ்வளவு காரியங்களும் ஆறாந் திகதிக்கு முன்னர் பூர்த்தியானால் இந்திய நாடாளுமன்றத்தைப் போல இலங்கை நாடாளுமன்றமும் 6 ஆம் திகதி கலைக்கப்படலாம். இல்லையேல் கலைப்பதற்கு மேலும் சில நாள்கள் அல்லது வாரங்கள் தாமதமாகலாம்.

இந்தியாவில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி முன்கூட்டியே பொதுத் தேர்தலை நடத்த தானாக தயாராகிறது. இலங்கையில் சு.க. - ஜே.வி.பி. கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றும் கனவுடன் நாடாளுமன்றைக் கலைக்க முனைகின்றது.

அங்கு பாரதீய ஜனதாக் கட்சியின் தேர்தல் சின்னம் தாமரை. இங்கு சு.க. - ஜே.வி.பி. கூட்டின் தேர்தல் சின்னமும் தாமரைதான்.

இந்தியாவில் ஆட்சியை தக்கவைக்கும் கனவுடனும், இலங்கையில் ஆட்சியைக் கைப்பற்றும் கனவுடனும் தாமரைச் சின்னக் கட்சிகள் முன்கூட்டிய தேர்தல்களுக்கு வியூகம் அமைக்கின்றன.

தாமரைக் கட்சிகளின் கனவு நனவாகுமா என்பதை அந்தந்த நாட்டு மக்கள் தான் தீர்மானிக்கப் போகிறார்கள்

# யாழ். செயலகத்தின் தன்னிச்சையான முடிவுகளை இனியும் அனுமதிக்கமுடியாது!

## நலன்புரி நிலையங்களின் சமாசத் தலைவர் தெரிவிப்பு

வலி.வடக்கு,பெப்.2

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் தொடர்பாக யாழ். செயலக உயர் அதிகாரிகள் தன்னிச்சையாக முடிவுகளை மேற கொள்கின்றனர். இனிமேலும் இதனை அனுமதிக்கமுடியாது.

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத் தலைவர் சி.கணேஸ் தெரிவித்தார்.

தெல்லிப்பழையில் இடம்பெற்ற இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் அவர் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் தொடர்பாக யாழ். செயலக உயர் அதிகாரிகள் எம்முடன் ஆலோசிப்பதும் இல்லை; செயற்பாடுகளை மேற்கொள்வதும் இல்லை. எம்மை ஏமாளிகளாகக் கருதிக்கொண்டு நாங்கள் சம்பந்தப்பட்ட் விடயங்களை தமது இஷ்டப்படி முடிவெடுத்துச் செயற்படுத்திக்கொண்டும் இருகின்றார்கள்.

எமது விடயங்கள் சம்பந்தமாக யாழ். செயலக உயர் அதிகாரிகள் தன்னிச்சையாக முடிவுகளை எடுப்பதை நாம் தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாது. எம்முடன் சம்பந்தப்பட்ட வேலைகளை எம்முடன் கதைத்தே மேற்கொள்ளவேண்டும். இடம்பெயர்ந்த மக்களுக்கென உலகநாடுகள் பலவற்றில் இருந்தும் உதவிநிதிகள் கிடைக்கப்பெற்று வருகின்றன. அந்த நிதிகளைக கையாள்வதில் கூட ஊழல்களும், மோசடிகளும் இடம்பெற்றுள்ளன.

நீண்டகாலமாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் நாம் ஏமாற்றப்பட்டுக்கொண்டே வருகின்றோம். எமது மீள்குடியமர்வு மற்றும் தொழில் அபிவிருத்தி சம்பந்தமாக அவர்கள் பேசுவதும் இல்லை; சிந்திப்பதும் இல்லை.

இன்று அபிவிருத்தியென்ற பெயரில் சில உயர் அதிகாரிகள தமது பகுதிகளையே அபிவிருத்திசெய்து வருகின்றார்கள். ஆனால், எமது முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளுக்கு செல்லும் பாதைகளில் நடக்கக்கூட முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

இலங்கையின் சுதந்திரதினம் கொண்டாடப்பட உள்ளது. எம்மைப் பொறுத்தவரையில் வாழ்விட உரிமை மறுக்கப்பட்டு பல்வேறு துன்பதுயரங்களுடன் போராடிக் கொண்டு இருக்கின்றோம்.

தென்னிலங்கை மக்களுக்குக் கிடைத்த சுதந்திரத்தை சுதந்திரம் மறுக்கப்பட்ட நாங்கள் வாழும் மண்ணில் சிங்கக் கொடியேற்றிக் கொண்டாடுவதற்கு நாம் அனுமதிக்கமுடியாது. அந்த நாளில் நாம் கறுப்புக்கொடிகளை முகாம்களில் ஏற்றிப் பூரண துக்கதினமாக அனுஷ்டிக்கவேண்டும்.

இத்தகைய நிகழ்வுகளை சர்வதேச சமூகம் உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டே உள்ளது. இந்நாளில் நாம் எதிர்ப்பைக் காட்டும் வகையில் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்பதுடன், வலி.வடக்குப் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ள சுதந்தினக் கொண்டாட்டங்களை இடம்பெறவிடாது தடுத்து மறியற்போராட்டத்திலும் ஈடுபடவேண்டும்.

தமது மனைவி, பிள்ளைகளின் நல்வாழ்வில் அக்கறை காட்டும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமது மீள்குடியமர்வு சம்பந்தமாகவும் நடவடிக்கையெடுக்கவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களை நாங்கள் அனுப்பிவைக்கின்றோம். ஆனால், அவர்கள் எம்மைப்பற்றி சிந்திப்பது இல்லை. இந்தவகையில் எமது பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமாக இருந்தால் நாமும் நாடாளுமன்றம் செல்லவேண்டும் என்று சிந்திக்க வேண்டியநிலை ஏற்படக்கூடும் என்று அவர் தெரிவித்தார்.(ஒ-86)

# பல்கலைக்கழகத்துக்கு சாரதிகளை சேர்ப்பதில் அரசியல் தலையீடாம்!

## குற்றஞ்சாட்டுகின்றது ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம்,பெப்.2

யாழ். பல்கலைக்கழகத்துக்கு வாகனசாரதிகளை ஆள்சேர்ப்புச் செய்வது உரியமுறைப்படி மேற்கொள்ளப்படவில்லை என்று பல்கலைக்கழக ஊழியர் சங்கம் குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

வாகனசாரதிகளை ஆளசேர்ப்புச் செய்வதற்காக இன்று நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சை தொடர்பாக ஊழியர் சங்கம் நேற்று பத்திரிகை அறிக்கை ஒன்றை விடுத்தது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

02.02.2004 திங்கள் பல்கலைக்கழக வாகனசாரதிகளைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

உள்ளக ரீதியான விண்ணப்பதாரிகளுடன் தமிழ் அமைச்சர் ஒருவரின் ஆதரவாளரும், முஸ்லிம் அமைச்சர் ஒருவரின் ஆதரவாளரும் இப்பரீட்சையில் பங்குகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர்.

உள்ளக ரீதியான தெரிவில் எவரும் தெரிவுசெய்யப்படாத விடத்து மட்டுமே வெளிவாரியாக தெரிவை மேற்கொள்ள வேண்டும். அத்தெரிவுப் பத்திரிகை விளம்பரத்தின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு அவ்விண்ணப்பங்கள் மத்தியிலிருந்து திறமையானவர் தெரிவுசெய்யப்படவேண்டும். அரசியல்வாதிகளின ஆள்கள் என்ற தகுதியினடிப்படையில் பல்கலைக்கழகத்துக்கு ஆள்சேர்ப்பதை பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மூன்றாம் நிலைக்கல்வியமைச்சு அனுப்பும் பட்டியலிலிருந்து ஆள்களைத் தெரிவுசெய்வதாகக் கூறி ஒரு வெற்றிடத்துக்கு ஒருவர் அல்லது இருவர் கொண்ட பட்டியலை அனுப்பி தமது ஆள்களை பல்கலைக்கழகத்துக்குள் நுழைக்க அமைச்சர்கள் முயல்வது வேதனைக்குரியது.

அரசியல்வாதிகளின் செல்வாக்கின் அடிப்படையில் பதவிகளைப் பெற்ற பல்கலைக்கழக அதிகாரிகள் அதற்கு பிரதியுபகாரமாக அரசியல்வாதிகளின் இத்தகு செயல்களை அனுமதிக்கிறாகள் என்றே நாம் கருதுகிறோம்.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

# கல்வியை முடித்த இளைஞர், யுவதிகளுக்கு இலவசத் தொழிற்றிறன் பயிற்சிகள்

இணுவில்,பெப்.2

பாடசாலைக் கல்வியை முடித்த இளைஞர், யுவதிகளுக்கு முறைசாராக் கல்வித் தொழிற்றிறன் பயிற்சிநெறிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

கணனித் தொழில்நுட்பம், உடையமைத்தல், சாரதிப்பயிற்சி, வெளிநாடு செல்பவர்களுக்கான ஆங்கிலம், கணனித் தட்டச்சு, தலை அலங்காரம், வீட்டு மின் இணைப்பு,வெளி இணைப்பு இயந்திரம் திருத்துதல், கட்டடப்பணி, சுருக்கெழுத்து/தட்டச்சு (தமிழ்/ஆங்கிலம்) போன்ற பத்து கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கணனிப் பயிற்சிநெறி யாழ். மத்திய கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, கோப்பாய் மகா வித்தியாலயம், புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி, அத்தியார் இந்துக் கல்லூரி, சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம், கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றில் உள்ள பயிற்சி நிலையங்களில் நடைபெறும். இதில் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்துக்கு மேல் கற்றவர்கள் கலந்துகொள்ளலாம்.

உடையமைத்தல் பயிற்சிநெறி ஆவரங்கால் சைவ மகாஜனா, அத்தியார் இந்துக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம், சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம் ஆகிய பயிற்சிநிலையங்களில் நடைபெறும். ஆணடு 8இல் சித்தியடைந்தவர்கள் இதில் கலந்துகொள்ளலாம்.

சாரதிப்பயிற்சி நெறி யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். ஜி.ச.ஈ. சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்கள் இப்பயிற்சியைப் பெறலாம்.

வெளிநாடு செல்பவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சிநெறி யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, அத்தியார் இந்துக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆகிய பயிற்சி நிலையங்களில் நடைபெறும். இதில் எவரும் பங்குபற்றலாம்.

கணனித் தட்டச்சு யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய பயிற்சி நிலையங்களில் நடைபெறும். இதில் ஜி.சீ.ஈ. சாதாரணதரத்தில் சித்தியடைந்தவர்கள் கலந்துகொள்ளலாம்.

தலையலங்காரப் பயிற்சி கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறும். இப்பயிற்சி நெறியில் பங்கேற்க ஆண்டு 8 இல் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

வீட்டு மின் - இணைப்பு பயிற்சி கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும். இதற்கு ஆண்டு 8 இல் சித்தியடைந்திருததல் வேண்டும்.

வெளிஇணைப்பு இயந்திரம் திருத்துதல் பயிற்சி யாழ். சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரியில் இடம்பெறும். பயிற்சியாளர்கள் ஆண்டு 8இல் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

கட்டடப் பணியாளர் பயிற்சிநெறியானது கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். இப்பயிற்சிக்கு ஆண்டு 8 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சுப் பயிற்சி யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும். இப்பயிற்சி நெறியைப் பயில விரும்புபவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

மேற்படி பயிற்சிநெறிகளில் பயிலவிரும்புபவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும். ஒருவர் ஒருபயிற்சிநெறியில் மட்டுமே பங்கேற்கலாம். இதற்கான பெயர், முகவரி என்பன அடங்கிய சுயமாகத் தயாரித்த விண்ணப்பத்தை வலயக் கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணக் கல்விவலயம், நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (ஒ-49)

### நாளை

தை 20

செவ்வாய்க்கிழமை

(03.02.2004)

திதி : துவாதசி

பகல் 11.41 வரை

நட்சத்திரம்: திருவாதிரை

இரவு 11.50 வரை

பிரதோச விரதம்

சுபநேரம்: 11.05-12.35

ராகுகாலம்: 3.35 - 5.05

(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எது நேர்ந்தாலும், எதுவுமே நேராதது போல் இருப்பதே சிறப்பானது.

# குடாநாட்டு திராட்சை நாற்றுக்கள் தென்னிலங்கையில் விற்பனை

## புத்தூர் கமநல நிலையம் ஏற்பாடு

அச்சுவேலி.பெப்.1

யாழ். மாவட்டத்தில் நல்லின திராட்சை நாற்றுக்களை உற்பத்திசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நல்லின திராட்சை நாற்றுக்களை தென்னிலங்கைக்கு எடுத்துச்சென்று விநியோகிக்கவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டில் தெரிவுசெய்யப்பட்ட திராட்சைத் துண்டங்கள் மூலம் சுமார் 2ஆயிரம் நல்லினத் திராட்சை நாற்றுக்கள் புத்தூர் கமநலசேவை நிலையத்தில் வளர்க்கப்படுகின்றன.

இந்தத் திராட்சைநாற்றுக்கள் தென்னிலங்கையிலுள்ள கமநலசேவை நிலையங்கள்ஊடாக அங்குள்ள திராட்சைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு மானியவிலையில் விநியோகிக்கப்படவுள ளன. (ஒ-11)

# திட்டமிடப்படாத குடியேற்றங்களை நாவாந்துறையில் தடைசெய்க!

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

கொக்குவில்,பெப்.2

நாவாந்துறையிலுள்ள ஜே/85 கிராம சேவையாளர்பிரிவில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டமிடப்படாத குடியேற்றங்களை தடைசெய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அப்பகுதி மக்கள் சார்பாக சென்.மேரிஸ் சனசமூக நிலையத் தலைவர் அ.செறிங்ரன் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினர் இந்து கலாசார அமைச்சர் மற்றும் யாழ். அரச அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடற்றொழிலாளர்கள் பெரும்பான்மையாக வாழும் நாவாந்துறை கிராமத்தில் மீளக்குடியமர்ந்த 135 குடும்பங்கள் வீடற்றவர்களாக இருக்கினறனர். 65 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிலமற்றவர்களாக இருப்பதால் மீளக் குடியமர வரமுடியாமல் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எமது கிராமத்தில் பெருமளவிலான தனியார் நிலங்கள் தரிசாகவே உள்ளன. யாழ். அரச அதிபர் ஏற்கனவே 150 குடும்பங்கள் மீளக்குடியமரக் கூடிய நிலப்பரப்பை நேரடியாகப பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுத்து வருகின்றார். இக்கிராமம் ஒரு கடற்றொழில் கிராமமாக இருப்பதால் இங்கு எடுக்கப்படும் எந்த ஒரு மீள் குடியமர்வுத் திட்டமும் மீனவர்களை முன்னுரிமைப்படுத்தியதாக அமையவேண்டும். ஏனெனில் அவர்கள் வேறெங்கும் குடியமர முடியாது.

இந்த நிலையில் மீனவர்கள அல்லாத வெளியார்கள் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி எமது கிராம.விஸ்தரிப்புக்கென்று இருக்கும் காணிகளில் குடியமர்ந்து வருகின்றார்கள்.

கிராம மக்களிடமிருந்து ஆலோசனைகள் பெறப்படாமலும் தேவைப்படும் பகுப்பாய்வுகள் செய்யப்படாமலும் தனியார் காணிகளில் குடியமர்த்தல் நடைபெறுகின்றது. இப்படிப்பட்ட சட்டவிரோத நடைமுறைகளை உடன் தடை செய்யுமாறு வேண்டுகிறோம்.

ஏற்கனவே எமது சுற்றுப்புறச் சூழல் மாசடைந்துள்ளது. இதற்கான மாற்று நடவடிக்கைகள் எதுவும் நடைபெறவில்லை. திட்ட மிடப்படாத குடியேற்றங்கள் மூலம் சுற்றுச் சூழல் மேலும் சீர்கெடுகிறது.

மாறாக சபைப்பகுதிக்குள் அகற்றப்படும் குப்பை கூழங்கள் எமது பகுதியில் கொட்டப்படுகின்றன. இது தடுத்து நிறுப்பதப்படவேண்டும்.

எமது மக்களுக்கு தேவையான நிர்வாக மையங்கள் சுகாதாரப் பணிமனைகள், விளையாட்டு மைதானம், முதியோர் ஓய்வு நிலையங்கள், சிறுவர் பூங்கா, மீன்பிடிசார் பயிற்சி நிலையங்கள், உற்பத்தி நிலையங்கள் போன்ற அத்தியவசியமான கட்டுமானங்களுக்குமான இடவசதியை மீள்குடியமர்வு மற்றும் குடியேற்றத்திட்டகளின் போது கவனத்தில் எடுக்க வேண்டும் என்றுள் ளது. (ஒ-76)

# தீவுப்பகுதியில் மாட்டிறைச்சிக் கடை திறப்பதற்கு இணையம் எதிர்ப்பு

யாழ்ப்பாணம்,பெப்.1

வேலணை, புங்குடுதீவு பகுதியில் மாட்டிறைச்சிக்கடை மீளத் திறக்கப்படுவதற்கு 'பசுக்கள் இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல நிறுவனங்களின் இணையம்' எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தமது நிலைப்பாட்டுக்கு ஆதரவு வழங்குமாறும் அந்த அமைப்பு மதகுருமார், அறநெறிச் சிந்தனை உடையோர், சமய நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பசுவதை மகா கொடிய பாவமாகும். மாட்டிறைச்சிக்கடைகள், மாட்டிறைச்சி என்பவை சைவ, தமிழ்க் கலாசாரத்திற்கு ஒவ்வாதவையாகும். பொருளாதார ரீதியிலும் பால், இயற்கைப்பசளை தருகின்ற தாயை அழிப்பதாகும். இடபங்களை அழிப்பதும் அவ்வாறானதே.

புங்குடுதீவுப் பகுதியில் முன்னைய காலங்களில் மாட்டிறைச்சிக் கடைகள் இல்லை. மக்கள் மாட்டிறைச்சி புசிப்பதும் இல்லை. இடையிட்டு சில காலம் மாட்டிறைச்சிக் கடை ஆரம்பிக்கப்பட்டு யுத்தகாலத்தில் மாட்டிறைச்சி உண்ணும் பழக்கம் அப்பகுதியில் ஊக்குவிக்கப்பட்டது.

தற்போது சில சைவ அபிமானிகளின் வேண்டுகோளுக்கமைய அக்கடை பிரதேசசபையால் நிறுத்தப்பட்டது. ஆயினும், மாட்டிறைச்சி உண்ணும் ஈனப் பழக்கமுடைய சிலர் மீண்டும் அப்பகுதியில் மாட்டிறைச்சிக்கடை ஆரம்பிக்கப்பட வேண்டுமெனக் கோரி வருவதாக அறிகிறோம்.

எனவே, காலத்தின் தேவையை அறிந்து பொதுமக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்று அதில் உள்ளது. (எ)

## கூட்டணி கலந்துரையாடல்

கைதடி,பெப்.2

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தென்மராட்சிப் பகுதி ஆதரவாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ரவிராஜ் தலைமையில் சாவகச்சேரியிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றியும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் தென்மராட்சிக் கிளைப் புனரமைப்புப் பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளன என்றும்-

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவும் இதில் கலந்துகொள்வார் என்றும்- தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் இம்மாதம் முதலாம் திகதி நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்து பின்னர் 15ஆம் திகதிக்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-75)

# 'பௌசர்' மற்றும் குழாய் மூலம் மானிப்பாய்க்குக் குடிதண்ணீர்!

மானிப்பாய் பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றது.

குடிதண்ணீர் விநியோகம் 'பௌசர்' மூலம் அல்லது குழாய்கள் மூலம் வழங்கப்படும்.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனப் பொதுக்கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.மா.க.முதலியார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிதி உதவியுடன் 2003 ஆம் ஆண்டு பல அபிவிருத்தித் திட்டங்களைப் பூர்த்திசெய்துள்ளோம் என்றும் -

'நியாப்' நிறுவனத்தின் உதவியுடன் பல குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன என்றும் -

நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சுடன் தொடர்புகொண்டு வழுக்கியாற்றுத் திட்டத்தை 'நோறாட்' நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொண்டுள்ளோம் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வலி.தென்மேற்குப் பிரதேசச் செயலரிடமும், உடுவில் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தரிடமும் அட்டகிரி கந்தசுவாமி கோவில் விவசாய, வீதிப் புனரமைப்பு, இடிகுண்டடியில் இருந்து சங்கரத்தை - நவாலி வரை உள்ள இரண்டரை மைல் விஸ்தீரண விவசாய வீதியைப் புனரமைத்து கழிவுநீர் வடிந்தோடக்கூடியவாறு குழாய் வைத்தல், மருதடிக்குளம் ஆழமாக்கல், ஐந்து கண்மதவடி விவசாய வீதியை உயர்த்தி இருபுறமும் சுவர் அமைத்தல், தெணிவெளியில் அழிவுண்ட நிலையில் உள்ள மடத்தைப்புனரமைத்தல், தெணிவெளியில் தூர்ந்துபோயுள்ள கேணியைப் புனரமைத்தல், தூர்ந்துபோயுள்ள கிணறுகள், குளங்களைப் புனரமைத்தல் ஆகிய வேலைத்திட்டங்களுக்கான அனுமதி கோரப்பட்டுள்ளது என்றும் - அவர் கூறினார். (ஒ-152)




# அனுமதியின்றி மரங்கள் ஏற்றி வந்த இருவருக்கு தலா ரூ.2000 அபராதம்

## மல்லாகம் நீதிமன்றம் விதித்தது

வலி.வடக்கு,பெப்.2

அனுமதிப்பத்திரம் இன்றி மரங்களை ஏற்றிவந்த இருவருக்கு தலா இரண்டாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன், மரங்களையும் பறிமுதல்செய்ய உத்தரவிடப்பட்டது. மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் இ.வசந்தசேனன் இதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்தார்.


அனுமதிப்பத்திரம் இன்றி மரங்களை ஏற்றிவந்ததாக குற்றஞ்சாட்டி அச்சுவேலிப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் புத்தூரைச் சேர்ந்த இருவர் ஆஜர்செய்யப்பட்டனர்.

அவர்கள் இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து அபராதம் விதிக்கப்பட்டது. மரம் ஏற்றி வரப் பயன்படுத்தப்பட்ட வாகனத்தின் ஆவணங்களைச் சரிபார்த்து உறுதிப்படுத்திய பின்னர் வாகனத்தை விடுவிக்கும்படி பொலஸாருக்கு பதில் நீதிவான் பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை -

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிவந்த நபர் ஒருவருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன், பறிமுதல் செய்யப்பட்ட மணல் தாவடி பத்திரகாளி அம்மன் கோயில் திருப்பணிக்கு வழங்கப்பட்டது. இதற்கான உத்தரவுகளை மல்லாகம் மாவட்ட பதில் நீதிவான் இ.வசந்தசேனன் பிறபித்தார்.

அச்சுவேலிப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்றில முன்னர் ஆஜர்செய்யப்பட்ட நபர் ஒருவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-86)






சர்வதேச லயன்ஸ் கழகம் 306 'பி' மாவட்டம், வலயம் 5 இன் பிராந்தியத் தலைவர் லயன் டாக்டர் நவமலர் கனகரட்ணம் அண்மையில் நல்லூர் லயன்ஸ் கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்த போது பொதுமகன் ஒருவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்குவதை முதல் படத்திலும், பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதியை நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் இ.இராஜகுலேந்திரன், திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்ல திட்டப்பணிப்பாளர் திருமதி மனோன் மணி சண்முகதாஸிடம் வழங்குவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# ரங்கூன் தேக்கமரக் கன்றுகள் மானிய விலையில் விநியோகம்

அச்சுவேலி,பெப்.2

புத்தூர் கமநலசேவை நிலையத்தில் ரங்கூன் தேக்கமர நாற்றுக்கள் மானியவிலையில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

கல்தேக்கமரக் கன்று ஒன்று 20 ரூபாவுக்கு வழங்கப்படுகின்றது. தென் இலங்கையில் இருந்து கொண்டுவரப்பட்ட தேக்கமர விதைகளைப் பயன்படுத்தி 2ஆயிரத்து 500 தேக்கமரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்த மரக்கன்றுகளே பொதுமக்களுக்கு மானிய விலையில் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேசிய மரநடுகைத் திட்டத்தின் கீழ் உற்பத்திசெய்யப்பட்ட தேக்கமர நாற்றுக்களில் குறிப்பிட்ட அளவு நாற்றுக்கள் மட்டுமே தற்போது கைவசம் உள்ளன என்றும்-

இவற்றைப்பெற விரும்புபவோர் புத்தூர் கமநல சேவை நிலையத்துடன் தொடர்புகொள்ளலாம் என்றும் - மேற்படி நிலையத்தின் பிரதேச அபிவிருத்தி அதிகாரி அறிவித்துள்ளார். (ஒ-11)

# ஊர்காவற்றுறைப் பிரதேசத்திற்கு விரைவில் 24 மணிநேர மின்சாரம்!

## மதனராஜா எம்.பி. தெரிவிப்பு

ஊர்காவற்றுறை,பெப்.2

ஊர்காவற்றுறைப் பிரதேசத்திற்கு விரைவில் 24 மணிநேர மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.மதனராஜா தெரிவித்தார்.

தற்பொழுது காரைநகர் பிரதேசத திற்கு 24 மணிநேரமும் மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாகவும் -

இதனால் காரைநகரில் இருந்து ஊர்காவற்றுறைக்கு மின்சார இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் ஊர்காவற்றுறை பிரதேசத்திற்கு இலகுவாக 24 மணிநேரமும் விநியோக வசதியைப் பெற்றுக்கொடுக்கக் கூடியதாக இருக்கும் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் உரிய அமைச்சரையும் தொடர்புகொண்டு விரைவில் ஊர்காவற்றுறைக்கு 24 மணிநேர மின்சார விநியோகத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் ஊர்காவற்றுறை பிரதேசத்திற்கு விரைவில் 24 மணிநேர மின்சாரம் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகொள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-16)

## வரணிப் பிரதேசத்தில்

# சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்க தீவிர நடவடிக்கை

வரணி,பெப்.2

சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கும் வகையில் கொடிகாமம் பொலீஸார் கண்காணிப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

வரணிப் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு அதிகரித்து வருவதாகக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்தே பொலீஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். வரணியில் உள்ள முக்கிய சந்திகளின் ஊடாக மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் பொலீஸாரால் சோதனைக்குள்ளாக்கப்படுகின்றன என்றும் -

பொலீஸாருக்கு உதவியாக இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகின்றனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-170)

# கல்வியில் பாரிய பிரச்சினையாக மாறிவரும் மாணவர் இடைவிலகல்

வளர்ந்துவரும் உலகளாவிய கல்வி அபிவிருத்திச் செல் செறிகளுக்கு இணங்க இலங்கையின் கல்வி விருத்தியும் மாற்றம் பெறுவது தவிர்க்கமுடியாததாகும். இதனடிப்படையில் இலங்கையின் கல்வி மேம்பாட்டுச் செயல்நிலைகள் பல்வேறு காரணிகளை விருத்தி செய்யும் வகையில் முன்னெடுக்கப்படுவதைக் காணலாம்.

அதிலும், குறிப்பாக வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் கடந்த இரு தசாப்த காலத்துக்கு மேலாக இடம்பெற்ற போர் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட கல்வி நிலையை மேம்படுத்துவதற்கான ஆரம்பநிலை அறிகுறிகள் தென்படுகின்ற பொழுதும் கல்விசார் பிரச்சினைகளில் மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து - தமது கற்றல் செயற்பாடுகளில் இருந்து - இடைவிலகுகின்ற பிரச்சினை பெரிதாகி வருகின்றது.

இடைவிலகல் என்ற எண்ணக்கரு நாடளாவிய ரீதியில் பெரும் பிரச்சினையாக கல்விப் புலத்தில் தோற்றம் பெற்றுள்ளது. பொதுக் கல்வியைப் பூர்த்தி செய்யாது இடையில் பாடசாலையைவிட்டு மாணவர் விலகுவதே இடைவிலகலாகும். கட்டாயக்கல்விக் காலம் எனக்கருதப்படும் 6-14 வயது வரையான கற்றல் வாய்ப்பினைக் கூடத் தொடராமல் விலகுகின்றனர். கல்வி சிறுவர்களின் உரிமை என ஐ.நா. சாசனம் முக்கியப்படுத்துவதும் சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும்.

சிறுவர்களின் கல்வி வாய்ப்பானது,

★ பாடசாலையில் சேரவேண்டிய வயதுக்குரிய காலத்தில் சேராதோர்.

★ பாடசாலையில் சேர்ந்தவர்களில் பொதுக் கல்வியை தொடராமல் இடைவிலகிச் செல்வோர் என்ற வகைப்பாட்டுக்கு இணங்க தமது கலவியைத் தொடராமல் இடைவிட்டு செல்வதையும் பூரணமாகத் தொடராமல் இழப்பதையும் அவதானிக்க முடிகிறது.

பதைக் காணலாம். தீவகம், தென்மராட்சி வலயங்களில் இடைவிலகல் கணிசமான அளவினைக் கொள்ளும என்பதை ஊகித்தறிதலும் அவசியமாகின்றது. இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் இடைவிலகல் தொடர்பான இரட்டை ஆதார பூர்வமாகக் காணமுடிகின்றது எனலாம்.

இலங்கையின் ஆரம்பக் கல்வியில் வீண்விரயம் என்ற தலைப்பில் SriLanka Gernal of Educational இதழில் இடைவிகலுக்கான காரணிகள் பின்வருமாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

★ பெற்றோர். கல்வி மட்டமும் குறைவருமானமும்,

★ தாழ்வு நிலை நோக்கிய பெற்றோர், பிள்ளைகளின் குறிக்கோள்.

★ இடைநிலை கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பின்மை.

★ குடும்பப் பொறுப்புகள்.

★ பாடசாலைப் பெறுபேறு குறைநிலையில் அமைதல் என்பன காரணங்களாக அமைகின்றன.

இடைவிலகல் தொடர்பாகவும் கல்வி தொடர்பாகவும் ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையில் பாடசாலைகளிலிருந்து இடைவிலகியோர் மற்றும் பாடசாலைக்குச் செல்லாதோர் எண்ணிக்கையை வீதத்தில் கணக்கிட்டு வயதடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு சுட்டிக் காட்டுகின்றது.

★ 5-9 வயதுக்குட்பட்டோர் - 08%

★ 10-14 வயதுக்குட்பட்டோர் - 30%

★ 15-19 வயதுக்குட்பட்டோர் - 50%

சமகாலத்தில் இடைவிலகல் என்ற பிரச்சினையுடன் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும் எண்ணிக்கை அளவும் குறைந்து கொண்டு செல்வதும் பிரச்சினையாக வருகிறது. அதனால், நாடளாவிய ரீதியில் 1096 பாடசாலைகளுக்கு மூடுவிழா இடம்பெற்றுள்ளதையும், அதில் கூடியளவு வடக்கு - கிழக்கு பிரதேசம் உட்பட்டு இருப்பதையும் காணலாம். இது எமது கல்வி நிலைக்கு ஏற்பட்டுள்ள பாரிய பின்னடைவாகும்.

ளமை இடைவிலகல் பிரச்சினையை தெளிவாக ஆரம்ப நிலை, இடைநிலைக் கல்விக் கட்டமைப்புடன் ஒப்புநோக்கிக் கொள்ள முடிகின்றது.

எமது நாட்டில் 2001ஆம் ஆண்டு காலப் பகுதியில் பாடசாலைகளில் கல்விகற்ற மாணவர்களின் எண்ணிக்கை சமனற்ற நிலையில் இருந்தமையும், பாடசாலைகளின் பயன்படுநிலை கீழ்நிலையில் இருப்பதையும் மாணவர் எண்ணிக்கை குறைவடைந்து வருவதை பின்வரும் தரவு நியாயப்படுத்துவதாக அமைகின்றதுடன் இதனடிப்படையில் பாடசாலைகள் மூடப்படுவது தவிர்க்க முடியாததாகின்றது.

| பாடசாலைகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 163 | 1முதல் 16 வரை |
| 457 | 17முதல் 30 வரை |
| 668 | 31 முதல் 50 வரை |
| 774 | 51 முதல் 75 வரை |
| 2657 | 100இற்கு குறைய |

எமது பிரதேசத்தில் சம காலத்தில் கல்வியியல் சார் பிரச்சினையாக இடைவிலகல் பாடசாலை மட்டத்தில் ஏற்பட்டு வருவது உணரப்படுகின்றது. இதனால்; எதிர்கால சமுதாயம் கீழ் நிலைக்குச் செல்லத் தலைப்படுவதுடன் உலகளாவிய இசைவுக்கு ஏற்ப எமது பிரதேசம் இசைந்து செல்லமுடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது எனலாம்.

மேலும் இலவசக்கல்வி வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்த முடியாத நிலையும், கற்போரின் உடல், உள, சமூக விருத்தி பின்னடைவும் சகலருக்கும் கல்வி என்ற நிலை மாற்றமும் ஏற்படுகின்றது.

இதனை நிவர்த்தி செய்ய பல்வேறு செயல் திட்டங்கள் கல்விசார் நிறுவன அமைப்புக்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகளாகவும் அமுலாக்கச் செயற்திட்டங்களாகவும் நிகழ்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

| வலயம் | தரம் 1-5 | தரம்6-11 | தரம் 12-13 | மொத்தம் | இடைவிலகல் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 16822 | 22702 | 5668 | 45192 | 698 |
| வலிகாமம் | 15529 | 19078 | 3847 | 38454 | 527 |
| வடமராட்சி | 9192 | 12137 | 2739 | 24008 | 270 |
| தென்மராட்சி | 8166 | 9795 | 1815 | 19776 | NA |
| தீவகம் | 4087 | 4478 | 483 | 9048 | NA |
| மொத்தம் | 53776 | 68190 | 14552 | 136538 | |

வலய ரீதியான இடை விலகல் (நன்றி: யாழ். செயலகம்)

**இடைவிலகலுக்கான காரணிகள்**

குடும்பப் பின்னணி, பாடசாலைப் பின்னணி, சமூகச் சூழல், கலைத்திட்ட இடர்பாடுகள், கற்போரின் மனநிலை, ஊக்கம், பொருளாதார நிலை, சமூக நியமமில் பழக்கவழக்கங்கள், பரீட்சை மையக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள், ஆசிரியர் மற்றும் வள ஆளணியினரின் கடமைகளின் திருப்தியின்மை, பய உணர்வு ஆகிய பிரச்சினைகள் பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகுவதற்கான காரணிகளாக இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் வறுமை கூடிய வீதத்தில் உள்ளதை நடத்திய ஆய்வுகளில் இருந்து அறியமுடிகிறது.

யாழ். மாவட்டத்தைப் பொருத்த மட்டில் கல்விசார் செயற்பாடுகளில் இடைவிலகலுக்கான காரணிகள் செல்வாக்குச் செலுத்துவது பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளும் நடவடிக்கைகளின் தாக்கத்தினால் ஏற்பட்ட பிரதிபலிப்புகளுமே. போர் மற்றும் அரசியல் பொருளாதார காரணிகளின் தாக்கத்தால் எமது பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களின் இடைவிலகல் அதிக அளவு இடம்பெறுவதை வலயங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

இத்தரவுகளின் அடிப்படைகளில் நோக்கும்பொழுது 1,36,558 மாணவர்களில் 1,445 மாணவர்கள் இடைவிலகல் தன்மைக்கு உட்பட்டு இருப்பதைக் காணலாம்.

| இடைவிலகல் | நூற்றுவீதம் |
|---|---|
| வறுமை | 48.29 |
| பாலியல் குற்றம் | 14.18 |
| பொருத்தமற்ற பாடத்திட்டம் | 12.01 |
| பாடசாலை இல்லாமை | 4.01 |
| தொழிலுக்குச் செல்லல் | 1.09 |
| காரணமின்மை | 20.42 |
| மொத்தம் | 100.00 |

இடைவிலகலுக்கான காரணிகள் (நன்றி பொருளியல் நோக்கு)

1990 ஆம் ஆண்டு 3 லட்சத்து 87 ஆயிரமாக இருந்த முதலாம் ஆண்டு மாணவர் அனுமதி எண்ணிக்கை 2002 ஆம் ஆண்டு 3 லட்சத்து 30 ஆயிரமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இதற்கான முக்கிய காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள பிறப்பு வீத வீழ்ச்சி காணப்படுகிறது. அதனுடன் இணையற்ற பாடசாலைகளில் அனுமதி பெறும் முதலாம் ஆண்டு மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதுவே முக்கியமாக விளங்குகிறது என கொழும்பு பல்கலைக்கழக கல்வியியற்துறை பேராசிரியர் சோ. சந்திரசேகரம் குறிப்பிட்டுள்ளார்.

| மாவட்டம் | வீதம் |
|---|---|
| வவுனியா | 20.6 |
| மன்னார் | 20.5 |
| மட்டக்களப்பு | 20.5 |
| திருகோணமலை | 12.9 |
| யாழ்ப்பாணம் | 11.7 |
| கேகாலை | 8.4 |
| மாத்தறை | 7.2 |
| கொழும்பு | 5.3 |

இடைவிலகல் தொடர்பான மார்கா நிறுவனம் மேற்கொண்ட செயல்நிலை ஆய்வுகளின் அடிப்படையில் மாவட்ட ரீதியாக மாணவர்களின் இடைவிலகல் எண்ணிக்கை வீத அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு நோக்கப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் பாடசாலைக் கல்வியில் இடைவிலகல் என்ற செயற்பாடு இடம்பெறுவதை அரசசார்பற்ற நிறுவனமான Unicef உலகச் சிறுவர் நிலை - 2003 என்ற அறிக்கையின் கல்வி தொடர்பான அட்டவணையில் ஸ்ரீலங்காவில் 5ஆம் வகுப்பு வரை கல்வியைத் தொடரும் மாணவர்கள் 97% எனவும் (1995 - 1999 வரையான காலம்) இடைநிலைக் கல்விக்காக பாடசாலையில் பதிவானோர் ஆண்கள் 70%, பெண்கள் 70% எனவும் (1995-1999) குறிப்பிட்டுள்

இடைவிட்டு விலகிய மாணவர்களுக்கான திறந்த பாடசாலை (Open School) நிறுவப்படல், வாழ்வியல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பாடப்புலம் சார் மேம்பாட்டுத் திட்ட நடைமுறைகளை அமுலாக்கல் (Enrichement Programme), ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சித்திட்டம், முறைசாராக் கல்விச் செயற்பாடுகள், இழந்த கல்வியை மீட்டும் செயற்திட்ட நடவடிக்கை, கற்றல் உபகரண வசதிகளை வழங்கள், நூலக, கணனி வசதி ஏற்படுத்தல், போக்குவரத்து வசதி வாய்ப்பை வழங்கல் என்பன அரசு, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இடம்பெற்றுவரும் திட்டங்களாகும். இவை இடைவிலகல்சார் பிரச்சினையை நிவர்த்திசெய்யவும் எதிர்கால நோக்கில் யாழ். மாவட்ட கல்வி விருத்தி சிறப்பாக அமைய முன்னெடுக்கப்படும் செயல்நிலை முயற்சிகளாகவும் அமைகின்றன. ★

பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,
ஆசிரியர்,
தீவக வலயம்.

# கல்விச்சாலைக் காட்சிகள்




சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் தரம் 1இல்அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் கால்கோள் விழா ஜனவரி 14 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட குருநகர் பங்குத் தந்தை வண.பிதா ஆர்.எச். சகாயநாயகம் அடிகளார், அதிபர் த.ஞானப்பிரகாசம், உப அதிபர் செல்வி நீ.வு.ரஞ்சனி, தரம்1 வகுப்பு ஆசிரியை திருமதி யௌவனகுமாரி ஆகியோர் புதிய மாணவர்களுடன் காணப்படுகின்றனர். *(படம்: குருநகர் செய்தியாளர்)*



சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நிர்வகித்துவரும் முன்பள்ளிக்ளின் ஆசிரியர்கள், உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டுப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். கௌரவிக்கப்பட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர்களையும் சங்கத் தலைவர் க.இராசரத்தினம், பொதுமுகாமையாளர் த.செல்வராசா, கொத்தணி தலைவர் க.மெய்யழகன் ஆகியோரையும் படத்தில் காணலாம். *(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*



பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் பற் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் துன்னாலை அல்லையம்பதி பாலர் பாடசாலை பிள்ளைகளுக்கு துன்னாலை பொது சுகாதாரப் பரிசோதகர் பா.பாலதேவா பற்பசை, பற்தூரிகைகளை வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம்: வடமராட்சி செய்தியாளர்)*



யாழ். ஏழாலை மகா வித்தியாலயத்தில் கடந்த பொங்கல் தினத்தன்று நடைபெற்ற பொங்கல் விழாவையும் கலந்துகொண்ட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களையும் படத்தில் காணலாம். *(படம்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)*

## மூன்றாவது வருட நினைவஞ்சலி



தோற்றம் 14 - 01 - 1917

மறைவு 05 - 02 - 2001

அமரர் **செல்லையா இராசதுரை**

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், நடேஸ்வராக் கல்லூரி)

திதி: துவாதசி (02.02.2004)


எங்கள் வாழ்வின் அணையாத தீபமே! ஒளி விளக்கே!!
என்றும் உங்களை நாம் மறக்கவே மாட்டோம்.

இ.பரிபூரணம்,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

- குடும்பத்தினர்.

(27876)(24)

## 40 ஆம் ஆண்டு நினைவுகள்



**பஸ்ரியாம்பிள்ளை மேரிப்பிள்ளை**

நாற்பது ஆண்டுகள் பறந்தோடிச் சென்றன - எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் "அம்மா அப்பா" உங்கள்
அன்பை மறக்கவே மாட்டோம். மூத்த மகன்
அருட்தந்தை இராயப்புவை, அந்த அறிவுக் களஞ்சியத்தை
உங்களோடு சேர்த்துக் கொண்டீர்கள்!
உங்களை நாங்கள் என்றும்
நினைவு கூர்ந்தே இவ்வுலகில் வாழ்வோம்.

துயருறும்:
அழகையா குடும்பத்தினர்,
பிலிப் குடும்பத்தினர்,
பாலதாஸ் குடும்பத்தினர்.

பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

(27833)(24-30-17-18)

## உரைநூல் வெளியீடு

கந்தபுராணம் - யுத்த காண்டம்
(1022 பாடல்களுக்கமைந்த முதற்பதினொரு படலங்கள்)
உரையாசிரியர்
கரவை, சீலேடைக் கவிமணி
**க.கணபதிப்பிள்ளை**

காலம் :- 04.02.2004 புதன்கிழமை பி.ப.2 மணி
இடம் :- நல்லைத் திருஞான சம்பந்த ஆதின கலாமண்டபம்.

தலைவர்
திரு.பெ.கனகசபாபதி அவர்கள்
தலைவர், சைவத்தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம்
பிரதம விருந்தினர் -
திரு.க.இராசையா அவர்கள்
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.

அருளுரை: நல்லை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.
ஆசியுரை: கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.
வாழ்த்துரை: பேராசிரியர் க.மோகனதாஸ் அவர்கள்
(துணை வேந்தர்.யாழ்.பல்கலைக்கழகம்)
திருமதி பத்தினி அம்மா திலகநாயகம் போல் அவர்கள்
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.
நூல் வெளியீடு : கலாநிதி எஸ்.சிவலிங்கராசா அவர்கள்
(தமிழ்த்துறை. யாழ்.பல்கலைக்கழகம்)
முதற் பிரதி பெறுநர் : கலாநிதி அ.சோமசுந்தரம்பிள்ளை (பட்டயக்கணக்காளர்)
உரைநூல் ஆய்வுரை : கந்தபுராண கலாநிதி மா.வேதநாதன் அவர்கள்
இந்துநாகரிகத்துறை யாழ்.பல்கலைக்கழகம்.
திரு.ச.விநாயக மூர்த்தி அவர்கள்
ஆங்கிலத்துறை யாழ்.பல்கலைக்கழகம்.
உரையாசிரியர் கௌரவிப்பு
உரையாசிரியர் ஏற்புரை

கந்தபுராணப் பற்றினரோடு சிவநெறிப் பற்றாளர் அனைவரையும் இவ்விழா விற்கலந்து சிறப்பிக்குமாறு மேன்மை கொள்சைவத்தின் பெயரால் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதி விலை: 650/=

இவை,
யாழ்ப்பாணம்,
சைவத்தமிழ் நூல் வெளியீட்டுக்கழகத்தினர்.

(27910)(35-30-17-18)

## முன்பள்ளி மாணவர்களுக்கு இலவசப் பற்பசை

அனலைதீவுப் பிரதேசத்திலுள்ள முன்பள்ளி நிலையங்களில் கற்கும் முன்பள்ளி மாணவர்களின் பற்சுகாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு இலவசப் பற்பசை மற்றும் பற்தூரிகைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான நிதி உதவிகளை அனலைதீவு கனடா ஒன்றியமும் மற்றும் வர்த்தக சமூகமும் வழங்க முன்வந்துள்ளதாக அனலைதீவு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் 'கணேஸ்' தெரிவித்தார். இதன்மூலம் அனலைதீவு அருணோதையா முன்பள்ளி, பாலமுருகன முன்பள்ளி, ஐயனார் முன்பள்ளி, நாவலர் முன்பள்ளி ஆகியவற்றில் கல்வியிலும் சுமார் 80 மாணவர்களுக்கு பற்தூரிகைகள், பற்பசைகள் ஆகியன இலவசமாக வழங்கப்படவுள்ளன.

அத்துடன் பற்சுகாதாரத்தை மேற்கொள்வதற்கு கடைப்பிடிக்க வேண்டிய வழிவகைகள் மற்றும் பற்தூரிகை பற்பசை ஆகியவற்றை பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் நன்மைகள் பற்றியும் எடுத்துக்கூறப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ம-16)

## அடிக்கல் நடும் வைபவம்

மானிப்பாய்,பெப்.2

மானிப்பாய் சத்தியசாயி பாடசாலைக்கான அடிக்கல் நடும் வைபவம இன்று பகல் 11.15 மணிக்கு இடம்பெறும்

ஸ்ரீசத்தியசாயி சேவா நிறுவன ஆலோசகரும் வவுனியா மாவட்ட முன்னாள் அரச அதிபருமான ஸ்ரீ.செ.சிவஞானம் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். வடமாகாண சத்தியசாயி நிறுவன இணைப்புக்குழுத் தலைவரும் மல்லாகம் பதில் நீதிவானுமாகிய இரா.வசந்தசேனன் தலைமையில் நிகழ்வு இடம்பெறும்.

## விற்பனைக்கு

மேடை, சீன்ஸ், மேக்கப் பொருள்கள், ஒலி அமைப்பு, ஒளி அமைப்பு உபகரணங்கள் டீசல் இஞ்சின் என்பன வீற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
**முத்துராஜா புரடக்ஷின்ஸ்**
பிள்ளையார் கோயில் வீதி.
தும்பளை. பருத்தித்துறை.

(27917)(30-17-18)

## சித்த மருத்துவ மாணவர்களுக்கான அறிவித்தல்

நடைபெறவுள்ள மீள்பரீட்சை சம்பந்தமான கலந்துரையாடல் 03.02.2004 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சித்த மருத்துவத்துறை, கைதடியில் நடைபெறும். அனைத்து மாணவர்களையும் சமுகந்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம். யாழ். பல்கலைக்கழகம்.

(27912)(26-30-17-18)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 1982 - 01 - 26

விண்ணில் 2003 - 02 - 12

**சபாரத்தினம் நிவாஷன்**

காற்றோடு காற்றாகி
கடலோடு கரைந்த எம் தோழனே!
விதி வரைந்த தேதியிலே விடையின்றி
எமைப் பிரிந்தீர்
உற்றார், உறவினர் தவித்திடவே
பாதி வழி பிரிந்துவிட்டாய்
காலங்கள் ஓடினாலும்
கனவுகள் மாறாதடா
வருடம் ஒன்று சென்றாலும்
வருடிச் செல்லும் நினைவலைகள்
எமைவிட்டு மாறாதடா
உன் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும்!!!

முனியப்பர் கோயிலடி,
கற்கோவளம்,
பருத்தித்துறை.

- நண்பர்கள்.

(27740)(24-30-17-18)


## மீண்டும் விற்பனைக்கு வந்துள்ளது!

"திருமதி அடேல் பாலசிங்கம்" எழுதிய

"சுதந்திர வேட்கை"

இந்நூலின் பிரதிகளுக்கு ஏற்பட்ட
தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு,
வாசகர்களின் தேவையைப் பூர்த்தி
செய்யும் நோக்கில்,
புதிய பிரதிகள் தருவிக்கப்பட்டுள்ளன.

~ வாசகர்களுக்கு மற்றுமொரு இனிப்பான செய்தி. ~

புதிதாகத் தருவிக்கப்பட்ட
"சுதந்திர வேட்கை" பிரதியொன்றின் விலை
ரூபா 350/= மட்டுமே

புத்தக விற்பனையாளர்களுக்கு
நியாயமான கழிவு வழங்கப்படும்.
வாசகர்கள் புத்தக விற்பனை நிலையங்களிலும் கீழ்க்காணும்
விலாசத்திலும் பிரதிகளை நேரடியாகக்கொள்வனவு
செய்யலாம்.

விளம்பரப் பிரிவு
உதயன் பத்திரிகை நிறுவனம்,
இலக்கம் - 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/33044) (30-17-18)

சன நூலகம் யாழ்ப்பாணம்

# மன அமைதி தரும் கல்வி மூலமே சுதந்திரம், சமாதானம் சாத்தியமாகும்

தென்னாபிரிக்கா, இந்தியா, இலங்கை போன்ற பல நாடுகளுக்குள் மேற்குலகம் படைஎடுத்து ஊடுருவி பொருளாதாரம், பண்பாடு; மதம், மொழி போன்றவற்றில் சீரழிவுகளை ஏற்படுத்தி மக்கள்மீது அராஜக முறையில் ஆதிக்கம் செலுத்தியது. கீழைத்தேய மக்களை காட்டுமிராண்டிகளாக நினைத்து அவர்களின் வாழ்க்கை முறையை சீரழித்தது. உததியோகம், பணம், படிப்பு போன்றவற்றைக் காட்டி மக்களைத் தூண்டியது; ஊக்குவித்தது.

இன்று நம் நாட்டவர்களே அவர்களுக்கு ஏஜண்டுகளாக இருந்து பணத்திற்காக பண்பாடுகளைச் சீரழித்து வருகிறார்கள். பறவைகள் விதைப்பதுமில்லை, அறுவடை செய்வதுமில்லை, தானியங்களைக் களஞ்சியத்தில் சேமித்து வைப்பதுமில்லை, உன் சத்துருவை சிநேகியுங்கள், உன்னைப் பகைக்கிறவனுக்கு நன்மை செய்யுங்கள், தீமை செய்யாதவன் அந்தப் பெண்மீது (விபசாரி) கல் எறியட்டும் போன்ற இயேசு நாதரின் உயர்ந்த போதனைகளைப் புரிந்து கொண்டு வாழ முடியாதிருந்ததற்குக் காரணம் அன்றும் இன்றும் மேற்குலகம் தாமஸ குண இயல்பையே கொண்டிருக்கிறது. செய்யும் செயல்களினால் ஏற்படவிருக்கின்ற விளைவுகளை அறியக்கூடிய தூர நோக்கற்றவர்களாக பாமரமக்கள், சிந்தனையற்றவர்கள் ஏமாறக்கூடிய கவர்ச்சியான விடயங்களிலேயே இன்று ஈடுபடுகிறார்கள். சூழல் மாசடைதல், பக்கவிளைவைத் தரக்கூடிய மருந்து வகைகள், தேவைகளை வளர்த்து மக்களின் அமைதியைக் குழப்பி அர்த்த புஷ்டியற்ற ஆரோக்கியக் கேடான பொருள்களை உற்பத்திசெய்து, மனிதனை அழித்தும் கண்ணிவெடி மற்றும் ஆயுதங்களை உற்பத்தி செய்து பணம் சேர்ப்பது போன்ற பல ஈனச் செயல்கள் இவற்றினால் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற தீமைகளைக் கூடப் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு, விடுபட முடியாத அளவிற்கு உலகம் இவைகளுக்கு அடிமையாகிவிட்டது.

அன்று இந்தியா, இலங்கை போன்ற நாட்டு மக்களிடையே சாத்வகத் தன்மை மேலோங்கியிருந்ததை அவர்களின் அன்றாட வாழ்க்கையில் காணக்கூடியதாகவிருந்தது. அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, இருப்பிடம் போன்றவை மிக எளிமையாக ஆரோக்கியமுள்ளதாக இயற்கையோடிசைந்ததாக அமைந்திருந்தது. தரவையிலே, வயல்வெளிகளிலே மேய்கின்ற கால்நடைகளுக்கு கேணிகள், தெரு ஓரங்களில் தண்ணீர் தொட்டிகள் அமைத்து நீர்பருக உதவினார்கள். அவர்களால் அமைக்கப்பட்ட 'ஆ' உரோஞ்சிக்கல், சுமைதாங்கி போன்றவை கூட அவர்களது மனித நேயத்தை வெளிப்படுத்தியது. இவற்றை இன்றும் சில கிராமப் புறங்களில் காணலாம். கால்நடைகளைத் தன் சகோதர ஜீவன்களாக பேணியதனால் ஜீவகாருண்யம் ஏற்பட்டிருந்தது. அவனது அன்றைய வாழ்வில் பணத்திற்காக காடழிப்பு, விலங்கழிபபு ஏற்படவில்லை. சூழல் மாசடைதல் ஏற்படவில்லை. அவன் அன்று கற்றதெல்லாம் மனிதனாக வாழ்வதற்கே. இதற்கு உதவியவை ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, திருக்குறள், ஆறுமுகநாவலரால் இயற்றப்பட்ட பாலபாடம் போன்றவை. இதனால் முதியோரைப் பேணும், மதிக்கும் இயல்பு இருந்தது. அயலவரைப் பேணும் இயல்பு இருந்தது. அவன் உண்டது, கண்டது, கேட்டது, பேசியது, செய்தது அனைத்தும் சாத்வீகத் தன்மை வளரக்கூடியவைகளே. முதியோர் இல்லம், அநாதைகள் இல்லம் அமைக்கவேண்டிய தேவை ஏற்படவில்லை. 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' என்பதற்கிணங்க செல்வர்கள், சுற்றத்தவர்களைத் தாங்கினார்கள்; பேணினார்கள். அன்று அமைக்கப்பட்டிருந்த அன்னதான மடங்கள் இதற்கு சான்றாகும். அன்றைய நாடகங்கள், கதைகள் மகான்களை உருவாக்கியிருக்கின்றன. காந்தி அடிகள் மகாத்மாவாவதற்கு அரிச்சந்திரன் நாடகம், சிரவணன் கதை பெரிதும் உதவியிருப்பதை அவரின் சத்தியசோதனை எமக்கு அறிவிக்கிறது. அன்று எண்ணம், சொல், செயல் என்பவற்றுக்கிடையே ஒருமைப்பாடு இருக்க வாய்ப்பிருந்தது. ஆனால், இன்று எதிலும் முரண்பாடு, அசுரத்தனம் மேலோங்குவதற்கு சாதகமான உணவு, ஆடம்பர வாழ்க்கை, பிறரது அமைதியைக் குழப்பி கபடமாகப் பணம் பறிக்கும், பணத்துக்காக மட்டும் பணிபுரியும் தன்மையை ஏற்படுத்தும் சந்தைப்படுத்தல், முகாமைத்துவம் போன்றவை பாடசாலைப் படிப்புக்களூடாக ஊக்குவிக்கப்படுகின்றன. பின்னர் மாணவர்களின் ஒழுக்கம் பற்றியும், மாணவர் - ஆசிரியர் உறவைப் பற்றியும் பெற்றோர் - பிள்ளைகள் உறவைப் பற்றியும், நாட்டு அமைதியைப் பற்றியும் பேசப்படுகிறது. முரண்பாடாகச் செயற்பட்டுக்கொண்டு மேற்கூறியவைகளைப் பேணிவிடலாம் என்ற நினைப்பில் ஆசிரியர் தினம், முதியோர் வாரம், சுற்றுச் சூழல் தினம்.... என்றெல்லாம் கொண்டாடப்படுகிறது. இவையெல்லாம் சாத்தியமாகுமா?

'நாம் பாவங்களைச் செய்யாமல் இந்த உலகில் வாழமுடியாது. ஆனால், இயேசுவை நம்பினால் எமக்கு பாவ விமோசனம் கிட்டும். அவரே பாவ விமோசனமளிக்கக்கூடிய திருக்குமாரர். ஆகவே, நீர் கிறிஸ்தவனாக மாறும்' என்று 'பேக்கர்' என்ற ஓர் ஆங்கிலேயா, காந்தியிடம் கூறினாராம். அதற்கு மகாத்மா, "நான் என்னுடைய பாவங்களின் விளைவுகளிலிருந்து விமோசனமடைய விரும்பவில்லை. பாவ எண்ணத்திலிருந்து விமோசனமடையவே (விடுபடவே) விரும்புகிறேன்" - என்றார்.

**ஆத்மசொருபன்**

'என்னை நம்புகிறவர் யாரோ அவரே நித்ய வாழ்வை அடைவர்' என்பது இயேசுநாதரின் திருவாக்கு. இதனுடைய அர்த்தத்தைக்கூடப புரிந்துகொள்ள முடியாதவர்களாகவே மக்கள் காணப்படுகிறார்கள். இயேசுவை நம்புகிறதென்றால் இயேசுவினுடைய முற்கூறப்பட்டது போன்ற உயர்ந்த போதனைகளை நம்புவதாகும். இப்போதனைகளை நம்புவதென்றால் அவற்றின்படி நடப்பதாகும். இந்த உலகம் காரண காரியத்தை அடிப்படையாகக் கொண்டது. காரணமில்லாமல் காரியம் நடப்பதில்லை. இதை விளங்கிக்கொள்ள முடியாத முட்டாள்தனத்தினாலேயே உலகம் பிழையான வழியில் செயற்பட்டுக்கொண்டு நிவாரணம் தேட வழிபாட்டிடங்களையும், சமாதான முயற்சிகளையும் நாடுகிறது. ஒவ்வொரு மனிதனின் அக அமைதிக்கான செயல், எண்ணங்களை நோக்கிச் செயற்பட்டாலேயே தவிர அமைதிகிட்டாது. அதைக் கடவுளாலும் தரமுடியாது.

இன்று சுதந்திரம், விடுதலை என்பவற்றிற்குக் கூட அர்த்தம் புரியாதவர்களாக மக்கள் இருப்பதனாலேயே அமைதியை இழந்து நிற்கிறோம். இந்த வீட்டிலே நான் நினைத்தபடி றேடியோ, ரீ.வி. போட இயலாது. வெளியே சென்று உலாவ இயலாது.... எனக்கு சுதந்திரம் இல்லை என்று பலர் கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். இதுதான் சுதந்திரமா? அப்படியானால் இந்த றேடியோ, ரீ.வி.யால் பாதிக்கப்படும், படிக்கும் மாணவர்கள், நோயாளிகள் வந்து நிற்பாட்டடா. றேடியோவை, ரீ.வியை என்று சொல்ல, அடிக்க சுதந்திரம் இருக்கத்தானே வேண்டும். அப்படியானால் அங்கு அமைதி ஏற்பட்டுவிடுமா? இல்லை. அப்படியென்றால் சுதந்திரத்துக்கு அர்த்தம் என்ன? நாம் செய்யும் செயல்கள் பிறரைப் பாதிக்காது எம்மை நாமே கட்டுப்படுத்துவதுதான் சுதந்திரமே தவிர கட்டுப்பாடற்ற நிலையல்ல. நாம் நினைத்ததை, விரும்பியதைச் செய்யும் நிலையல்ல. பிறர் எம்மை அடக்கும் நிலைக்கு நாம் நடந்தால் நாம் அடிமையாகிறோம், எமது சுதந்திரத்தை இழக்கிறோம். விடுதலையென்றால் எமக்கு தீமையளிக்கிற அனைத்திலுமிருந்து விடுபடுவதே தவிர இனத்தின் ஆட்சியிலிருந்து இன்னுமோர் இனம் விடுபடுவதென்பதல்ல. தனது இனத்தையே, மக்களையே கொடுமைப்படுத்தும் ஆட்சி உலகில் இல்லையா? இவை விடுதலையா? இந்த விடுதலை தேவையா? முதலில் எமக்குத் தீமையளிக்கின்ற அனைத்து தீய பழக்கங்களிலிருந்தும் (பொய், களவு, கள், காமம், கொலை) மனிதவர்க்கம் விடுபடாதவரை, தனிமனித அமைதியோ, சமூக அமைதியோ, உலக அமைதியோ கிட்டாது. எனவே இவ்வமைதி அளிக்கக் கூடிய கல்வியைக் கற்று சுதந்திரமாகச் செயற்பட இன்றைய சுதந்திரதினம் உதவட்டும். எந்த ஒரு பண்டிகையோ, விழாக்களோ மகிழ்ச்சியாக இருப்பதற்காகக் கொண்டாடப்படுவதல்ல. விழாக்கள் கொண்டாடப்படும் நோக்கம் நிறைவேற்றப்படுவதற்கே கொண்டாடப்படவேண்டும்.

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,பெப்.2

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளின் பெறுபேறுகள் உதயனில் தொடர்ந்து பாடசாலை ரீதியாக பிரசுரமாகி வருகின்றன. மேலும் சில பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு:-

**பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்**

தோற்றியோர் 46 - சித்தியடைந்தோர் 07.

என்.கஜேந்தினி (121), ரி.அஜந்தன் (136), பி.பானுகோபன் (130), எஸ்.கவாஸ்கர் (119), கே.பிரசாந்த் (119), எஸ்.ஜெயசீலன் (138), என்.சதீஷ்ராம் (141).

**புற்றளை மகாவித்தியாலயம்**

தோற்றியோர் 60 - சித்தியடைந்தோர் 14.

எஸ்.சுகன்யா (135), எஸ்.கபிலன் (153), வி.கீர்த்தனன் (126), ஜி.துசாநத் (119), எஸ்.மதுரா (127), பி.மைதிலி (128), எஸ்.சாரங்கா (121), எஸ்.இளங்கீரன் (136), ரி.கமல்ராஜ் (125), எஸ்சஜித்கோபி (135), எஸ்.விஷ்ணுகுமாரன் (118), எம்.மிருசா (139), வை.தபிதா (160), கே.விதுஜா (142).

**மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்**

தோற்றியோர் 42 - சித்தியடைந்தோர் 05.

எஸ்.அனுராஜ் (122), ரி.தனுஷன் (119), எம்.சாரங்கா (140), பி.ராஜினி (128), எஸ்.சக்திதாசன் (136).

**தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்**

தோற்றியோர் 67 - சித்தியடைந்தோர் 11.

எஸ்.தர்ஷிகா (132), பி.சஞ்சீவன் (122), ரி.துவாரகன் (154), பி.மகிதரன் (131), எஸ்.மயூரன் (137), ஜே.காண்டீபன் (124), ஜி.மாதங்கி (126), ரி.வித்தியா (122), பி.ஆரணி (133), ரி.பிரிதாபானு (139), எஸ்.தீஷிகா (120).

**வல்வெட்டி இந்து தமிழ்கலவன் பாடசாலை**

தோற்றியோர் 10 - சித்தியடைந்தோர் - 02.

எஸ்.செல்வசேகரன் (120), எம்.அனுத்தியா (127).

**கட்டைவேலி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை**

தோற்றியோர் 09 - சித்தியடைந்தோர் - 04.

பி.கிருத்தியா (128), கே.துஷ்யந்தினி (133), இ.அன்பரசன் (139), எஸ்.சிந்துஜா (141).

**இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை**

தோற்றியோர் 28 - சித்தியடைந்தோர் - 03.

ஜி.புவிசாந்தன் (118), ஆர்.கேசவர்த்தனன் (128), கே.ராஜி (125).

**வதிரி திருஇருதயக்கல்லூரி**

தோற்றியோர் 27 - சித்தியடைந்தோர் - 04.

எஸ்.அருள்குமார் (134), கே.கீதாஞ்சலி (119), ஆர்.அகிலா (153), பி.நிலக்ஷி (187).

**நெல்லியடி மெதடிஸ்தமிசன் தமிழ் கலவன் பாடசாலை**

தோற்றியோர் 81 - சித்தியடைந்தோர் - 18.

ஜி.துஷாந்தன் (135), பி.ஆரத்தியா (133), எம்.பிரிந்தா (143), என்.தேனுகா (120), என்.ஆதித்தியா (152), பி.அபிஷாலிகா (128), வி.கிரிசிகேசன் (133), எஸ்.ஆதவன் (141), எஸ்.துஷாரகன் (142), பி.உசாந்தி (141), கே.தனுஜா (118), பி.அபிராமி (161), த.உஷாந்தினி (120), ரி.சுதன் (131), யு.அனுதரன் (144), பி.நிதர்சன் (129), கே.தர்சனாத் (126), வி.பகீரதன் (144).

**கரணவாய் வேதாரணிய வித்தியாலயம்**

தோற்றியோர் 21 - சித்தியடைந்தோர் - 02.

எஸ்.ஆராதனா (141), என்.கபாஸ்ஹரி (123).

**கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரி**

தோற்றியோர் 39 - சித்தியடைந்தோர் - 07.

எஸ்.கௌசிகன் (128), கே.தேன்மொழி (139), எஸ்.அனுராஜ் (127), ரி.கவிராஜ் (145), எம்.கிரிசாந்த் (119), ஏராஜ்கரன் (135), எஸ்தினகரன் (121).

**கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி**

தோற்றியோர் 132 - சித்தியடைந்தோர் - 04.

ரி.அருந்துகா (153), எஸ்.சரத்பவன் (159), பி.தர்ஷிகன் (147), எஸ்.துவாரகன் (154).

**உசன் இராமநாதன் ம.வி. பெறுபேறுகள்**

-29.01.2004ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் 04ஆம் பக்கத்தில் வெளியாகிய 5ஆம் தர மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் -

உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் என்ற பெயரின் கீழ் தவறுதலாக வரணி மகா வித்தியாலய மாணவர்களின் பெயர்கள் பிரசுரமாகிவிட்டன. தவறுக்கு வருந்துகின்றோம்.

உசன் இராமநாதன் மகாவித்தியாலய மாணவர்களின் பெறுபேற்று விவரம் வருமாறு:-

சி.கனிஷ்ஸா - 159, மா.சர்மிளன் - 144, யோ.விதுஷ்ஷன் - 138, யோ.துஷிகன் - 134, கு.ஜெய்சினி - 125. (ஆ-ர்)

## இந்திய மீனவர் படகுகள் பராமரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.2

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் 42 படகோட்டிகள் தமது படகுகளை பராமரிப்பதற்காக ஊர்காவற்றுறை கடற்படை முகாமுக்கு நேற்று முன்தினம் அழைத்துச்செல்லப்பட்டனர்

யாழ். மேல் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் இவர்கள் அங்கு அழைத்துச்செல்லப்பட்டிருந்தனர். (ம-3-6)

## மேசன் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,பெப்.2

திருகோணமலைத் தொழில் துறைத் திணைக்களத்தில் மேசன் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் 9ஆம் திகதிமுதல் 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இப்பயிற்சியில் கலந்துகொள்ள உளளவர்கள் தங்கள் வருகையினை உறுதிசெய்துகொள்ளும் வகையில் யாழ். செயலகத்திலுள்ள தொழில் துறைத் திணைக்களத்துக்கு இன்று திங்கட்கிழமை சமுகமளிக்குமாறு முகாமைத்துவ உதவியாளர் திருமதி பொ.பௌராஜ் அறிவித்துள்ளாா. (ம-8-ரி)



**வேலணை பிரதேச செயலகத்தினால் வேலணை மேற்கில் நடத்தப்படும் தையல், மனையியல் பயிற்சி நிலையத்தை உதவிப் பிரதேச செயலாளர் மு.நந்தகோபால் நடாவெட்டித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம்.** (எ)

## குடாநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 'பேர்வலைட்ஸ்' சலவைத்தூள்

### நேற்று அறிமுகம் செய்துவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.2




யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 'பேர்வலைட்ஸ்' (FAVORL LIGHTS) சலவைத்தூள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சலவைத்தூள் அறிமுக நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை யாழ். வணிகர் கழக அலுவலகத்தில் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் தலைமையில் நடைபெற்றது.

அறிமுக நிகழ்வைத் தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில்,

சலவைத்தூள் உற்பத்தியாளரான யாழ். பல்கலைக் கழகப் பட்டதாரியான ரி.ஆர்.மதிசேகரன் தமது முயற்சி குறித்து கருத்துத் தெரிவிக்கையில் -

மேற்படி உற்பத்தி தொடர்பாகக் கடந்த 8 வருடங்களாகப் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வந்தேன். அவை தற்போது வெற்றியைத் தந்துள்ளன.

புதிய சலவைத்தூள் உற்பத்திக்கு யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் பீடத்தில் அங்கீகாரம் பெற்றுள்ளேன். 20 கிராம் கொண்ட சலவைத்தூள் பைக்கற் ஒன்றை 6 ரூபாவுக்கு வாங்கமுடியும்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட இரசாயனப் பொருள்களைக் கொண்டு இது தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் இதில் மிருகக் கொழுப்பு இருக்காது.

இன்னும் சில தினங்களில் குடா நாட்டுக் கடைகளில் 'பேர்வலைட்ஸ்' சலவைத்தூள் விற்பனைக்கு வந்துவிடும் - என்றார் உற்பத்தியாளர். (எ-7)

# இந்த ஆண்டு ரூ.14 கோடி செலவில் யாழ்.குடாநாட்டில் கட்டடப் பணிகள்

## கட்டடத் திணைக்களப் பொறியியலாளர் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.2

யாழ்.குடாநாட்டில் இவ்வாண்டு 14 கோடி 50 லட்சம் ரூபா செலவில் பல புதிய பொதுக்கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன என்று மாகாணக் கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் எஸ். சுந்தரகுமார் தெரிவித்தார்.

இவ்வாண்டு குடாநாட்டில் கட்டடத்திணைக்களம் மேற்கொள்ளவுள்ள பணிகள் தொடர்பாகக் கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'நீரப்', 'நிக்கொட்', 'யுனிசெவ' மற்றும் மாகாணக் கட்டடத் திணைக்களம் ஆகியன இந்தப் பணிகளுக்கான நிதியுதவியை வழங்கியுள்ளன.

'நீரப்' நிறுவனம் 10 கோடி ரூபாவையும், 'நிக்கொட்' நிறுவனம் 2 கோடி 50 லட்சம் ரூபாவையும், 'யுனிசெவ்' நிறுவனம் 80 லட்சம் ரூபாவையும் இதற்கென ஒதுக்கியுள்ளன.

'நீரப்' நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒருகோடி 90லட்சம் ரூபா செலவில் பண்ணையில் காசநோய் சிகிச்சை நிலையம் ஒன்றும், ஒருகோடி ரூபா செலவில் மருந்துக் களஞ்சியம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளன.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஒருகோடி 10 லட்சம் ரூபா செலவில் புற்றுநோயாளர்கள் தங்குவதற்கான விடுதி ஒன்றும், இரண்டு கோடி 10 லட்சம் ரூபா செலவில் சாவகச்சேரி, சங்கானை, பருத்தித்துறை, புத்தூர், சுன்னாகம் ஆகிய இடங்களில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களும், கச்சாய், மட்டுவில் ஆகிய பிரதேசங்களில் 30 லட்சம் ரூபா செலவில் ஆரம்ப சுகாதார நிலையங்களும் அமைக்கப்பட உள்ளன.

ஒருகோடி 30 லட்சம் ரூபா செலவில் சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு கட்டடமும் அமைக்கப்படும். 20 லட்சம் ரூபா செலவில் கைதடி வயோதிபர் இல்லத்திற்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டமும், விடுதி அமைக்கும் திட்டமும் 'நீரப்' நிறுவன நிதி ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்தப்படவுள்ளன.

'நிகொட்' நிறுவன நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒருகோடி 80 லட்சம் ரூபா செலவில் மருதங்கேணி வைத்தியசாலைக் கட்டடமும், 60 லட்சம் ரூபா செலவில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கான மகப்பேற்று விடுதியும், 20 லட்சம் ரூபா செலவில் வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கான சமையல் கூடமும் கட்டப்படவுள்ளன.

'யுனிசெவ்' நிறுவன நிதி ஒதுக்கீட்டிலிருந்து கிராமப்புற வைத்தியசாலைகளுக்கான குடிதண்ணீர் விநியோகத்திட்டம், மலசலகூடம் என்பன நிறுவப்படவுள்ளன.

இதேவேளை-

அச்சுவேலி வைத்தியசாலைக்கான நிர்வாகக் கட்டடத் தொகுதி 50 லட்சம் ரூபா செலவிலும், கோப்பாய் வைத்தியசாலைக்கான நோயாளர் விடுதி ஒன்று 50 லட்சம் ரூபா செலவிலும் மாகாணக் கட்டடத் திணைக்கள நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப்படும் என்றும் சுந்தரகுமார் மேலும் தெரிவித்தார். (ம-8-6)

### அரிச்சுவடி ஏடு சமயக் கையேடு அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.2

தைப்பூசத் தினமான எதிர்வரும் வியாழக்கிழமை சமய தீட்சைபெற உள்ளவர்களுக்கு பயனளிக்கக் கூடிய வகையில் 'நித்திய கருமவிதி' என்ற கையேட்டையும், ஏடு தொடங்கவுள்ள பாலகர்களுக்கு அரிச்சுவடி ஏடுகளையும் தொழிலதிபர் 'சிவநேயர்' இ.தவகோபால் வழங்கி வருகிறார்.

இவற்றைப் பெறவிரும்பும் ஆலயங்கள், பாடசாலைகள், பாலர் பாடசாலைகள் போன்றவை யாழ்.காங்கேசன்துறை வீதியில் உள்ள 'மில்கவைற்' சவர்க்காரத் தொழிற்சாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.2

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் கணனிப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 8ஆம் திகதி காலை 9மணிக்கு நிறுவனத் தலைவர் அ.நல்லதம்பி தலைமையில் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கணனிப் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த 3ஆம், 4ஆம், 5ஆம் அணி மாணவர்கள் அன்றைய தினம் தவறாது சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-7)

### நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்.பெப்.2

தீவக கல்விவலயத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த தீவக வலய அதிபர், ஆசிரிய ஆலோசகர் ஆகிய பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை பிற் போடப்பட்டுள்ளதெனவும்- பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும்-தீவகவலயக் கல்விப் பணிப்பாளர் வி.ராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

### ச.ச.நிலைய கட்டடம் திறப்பு

அரியாலை அருணோதயா சன சமூக நிலையப் புதிய கட்டடத் திறப்புவிழா இன்று பிறபகல் 4 மணிக்கு நிலையத் தலைவர் க.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.இவ்விழாவில் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகவும், அகதிகளுக்கான ஐ.நா.தூதரக வெளிக்கள அலுவலகத் தலைவர் கெய்சுகி முறாட்டா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். சிறப்பு நிகழ்ச்சியாக 'இன்னிசை கானங்கள்' நிகழ்வு இடம்பெறும். (ஒ-6)

### எழுவைதீவில் இலவச வகுப்புகள்

ஊர்காவற்றுறை,பெப்.2

எழுவைதீவில் உள்ள பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் முகமாக எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் மாலைவேளைகளில் பிரத்தியேக வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் தங்கிநின்று கடமையாற்றி வரும் வெளியூரைச் சேர்ந்த ஆசிரியர்களை ஒன்றிணைந்து வாராந்தம் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்களில் பி.ப. 4 மணிமுதல் மாலை 6மணிவரை மேற்படி பிரத்தியேக வகுப்புகளை நடத்துவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.முற்றிலும் இலவசமாக நடத்தப்படவுள்ள இவ்வகுப்புகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், சமூகக்கல்வி ஆகிய பாடங்கள் போதிக்கப்படவுள்ளன. (ஒ-16)


## அதிர்ஷ்ட லாபச்சீட்டு முடிவு

நெல்லியடி நெல்லை சில்க் ஸ்தாபனத்தாரால் நடத்தப்பட்ட வாடிக்கையாளர்களுக்கான மாதாந்த பட்டுச்சேலை இலவச அதிர்ஷ்ட லாபச்சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற அதிர்ஷ்டசாலியின் இல. 164 உரியவர் நேரடியாக வந்து பட்டுச்சேலையைப் பெற்றுக்கொள்ளலாம்.

- நெல்லை சில்க், நெல்லியடி.

(C/33055) (26-16-38)



## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



1st HAPPY BIRTHDAY

கே.கிந்துஷன்

எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த கேமளன் - ஜெயரதி

தம்பதிகளின் செல்வப் புதல்வன் **கிந்துஷன்**

தனது முதலாவது பிறந்த நாளை தமது இல்லத்தில் இன்று (02.02.2004) திங்கட்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, பூட்டப்பா, பெரியப்பா, பெரியம்மா, கரிஸ்மா அக்கா (சுவிஸ்), சித்தப்பா (லண்டன்), மாமா, அத்தை விதுஷா, மச்சாள் மற்றும் ஜெயந்தன் மாமா, அத்தை (லண்டன்) மற்றும் மாமாமார், அத்தைமார், அத்தான்மார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் விழுபனை அம்மன் துணைகொண்டு பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

தகவல்: (27919)

ச.விதுர்ஷனா மச்சாள்
சுன்னாகம். T.P.:060-2212924.

தற்காலிக முகவரி:
சரசாலை தெற்கு, சாவகச்சேரி. (34-26-16-38)





## வடமராட்சிக் கம்பன் கழகம் நடத்தும் சேக்கிழார் விழா

அன்புடையீர்,
வணக்கம்!

அகில இலங்கைக் கம்பன் கழகத்தினரின் சைவத்தமிழ் பணிகளை வடமராட்சிப் பகுதிக்கு விஸ்தரிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட வடமராட்சிக கம்பன் கழகம் நீண்டகால இடைவெளிக்குப் பின் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் சேக்கிழார் விழாவை நடத்துகின்றது.

அமைதியிழந்து செய்வதறியாது குறிக்கோள் இல்லாமல் அலைந்து திரியும் உலக சமுதாயத்திற்கும் சிறப்பாக தமிழ்ச் சமுதாயத்திற்கும் வழிகாட்டி, நன்னெறிப்படுத்தவல்ல இலக்கியங்களுள் சேக்கிழாரின் பெரியபுராணம் முதலிடத்தை வகிக்கின்றது.

அத்தகைய மாபெரும் நூலை இயற்றிய சேக்கிழாருக்கு கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களின் துணையோடு நடத்த இருக்கும் இவ்விழா குறித்த நேரத்தில் ஆரம்பமாகும். இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாது அனைவரும் விழாவிற்கு வருகை தந்து பயனடைந்து எங்களை ஊக்குவிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

நன்றி!

- வடமராட்சிக் கம்பன் கழகத்தினர்.

### முதலாம் நாள் நிகழ்வு

02-02-2004 திங்கள்
மாலை 4.30 (பழைய நேரம்)

இடம்: நெல்லை முருகன் திருமண மண்டபம்
மங்கல இசை: சுந்தரேசன் ரங்கன் குழுவினர்
மங்கல விளக்கேற்றல்: திரு.பொ.கதிரமலை
(தலைவர், நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் கோயில்)
திரு.நித்தியானந்தம்
இறைவணக்கம்: செல்வி தம்பு சரோஜா
ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சுப்ர கௌரி பாலக்குருக்கள்
வரவேற்புரை: மன்னவன் கந்தப்பு
தலைமையுரை: பேராசிரியா அ.சண்முகதாஸ்
(தமிழ்த்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)
தொடக்கவுரை: திரு.கலாமணி
(விரிவுரையாளர், கல்வியியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
வாழ்த்துரை: திரு.அம்பலவாணர்
(கரவெட்டி கோட்டக்கல்வி அதிபர்)
சிறப்புரை: பேராசிரியர் அரங்க இராமலிங்கம்
(சென்னைப் பல்கலைக்கழகம்)

### பட்டி மண்டபம்

நடுவர்: கம்பவாரிதி இ.ஜெயராஜ்
சேக்கிழார் கவிதை பெரிதும் சோதனையும் சாதனையும் பெறுவது

| கண்ணப்பர் | சிறுத்தொண்டர் | திருநீலகண்டர் |
| --- | --- | --- |
| அன்பிலேயே | வல்லமையிலேயே | துறவியிலேயே |
| இரா.செல்வவடிவேல் | ஸ்ரீபிரசாந்தன் | K.நடராசா |
| கு.பாலசண்முகன் | சி.கேசவன் | ச.லவீசன் |

(C/33041) (26-16-38) - வடமராட்சிக் கம்பன் கழகத்தினர்.

"கம்பன் புகழ்பாடி கன்னித்தமிழ் வளர்ப்போம்"



## திருமண வைபவம் இடம்மாற்றம்

அன்புடையீர்!

நல்லூர் சட்டநாதர் கோயில் அருகே திவ்ய ஜீவன சங்க கல்யாண மண்டபத்தில், 02.02.2004 திங்கட்கிழமை நடைபெறவிருந்த கேதீஸ்வரன் - அன்பரசி திருமண வைபவமானது தவிர்க்கமுடியாத காரணங்களால் அன்று **கோப்பாய் சித்திரவேலாயுதர் கோயில் மண்டபத்தில்** நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

- மணமக்களின் பெற்றோர்.

(27836) (24-16-16-38)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை - 2003 இல் 140 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததையிட்டு

**செல்வி பிரதீபா பவானந்தன்**

அவர்களையும் கல்வியறிவூட்டிய யா/மூளாய் அ.மி.த.க.பாடசாலை அதிபர். ஆசிரியர்களையும். றெமிங்ரன் கல்வி வளர்சோலை நிர்வாகி மனோ அண்ணா. ஆசிரியர்களையும் மற்றும் நடனசபை. தவநேசன் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இ.பவானந்தன்
நல்லதம்பி ஸ்ரோர்ஸ், மூளாய்.

(27938)(34-26-16-38)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலத்தில்
கடந்த வருடம்
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த மாணவர்களான



உ.மதியழகன் 124



கு.பிரசாத் 124

ஆகிய மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், பிரதி அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(27820) (24-26-16-38)



## VACANCY

Leading IT compay anxious to absorb employees for the following posts. Candidates who wish to apply to the suitable posts.

1. Receptionist (Female)
2. Computer Operators
3. Computer Hardware Technicians/ Trainees
4. Programers/Program Trainees
(Visual Basic, SQL Server 2000, Crystal Report)
5. Marketing Executives/Trainees

*Please Send your Bio-Data before 07.02.2004*

**Advt.No-2153, C/O Uthayan.**

(27930) (34-26-16-38)



# நாங்கள் செய்து தரமாட்டோம் நீங்கள் செய்துகொள்ள உதவுவோம்....

**அரசசார்பற்ற நிறுவனங்கள் தமக்குக் கிடைத்த வரப்பிரசாதங்கள் என்று குடா நாட்டு மக்கள் நம்பியிருந்த காலம் உண்டு. ஆனால், இப்போது பெரும்பாலான அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து மக்களுக்கு நம்பிக்கை குறைந்து வருகிறது. இந்த நேரத்தில் 'விழுது' தனது பணிகளை குடாநாட்டுக்கு விஸ்தரித்துள்ளதே?**

தீர்க்கமாக எம்மைப் பார்த்தார் வவுனியாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் 'விழுது' ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் தவிசாளர் சாந்தி சச்சிதானந்தம்.

"நாங்கள் செய்து தரமாட்டோம் நீங்கள் செய்து கொள்ள உதவுவோம். ஆகவே, குடாநாட்டு மக்களின் நம்பிக்கையையும் பெறுவோம்"

நம்பிக்கையுடன் கூறினார் அவர்.

**"புரியவில்லையா?" என்றோம் நாம்.**

உள்ளூரில் பெரும்பாலானவை இடைநிலை அரசசார்பற்ற நிறுவனங்களாக உள்ளன. இவை நிதிக்கொடை நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெறுகின்றன. பின்னர் தாமே திட்டங்களை உருவாக்கி அவற்றைச் செயற்படுத்துகின்றன. இதன்போது மக்களுக்குப் பயனற்ற திட்டங்கள் செயற்படுத்தப்படவும், பணம் துஷ்பிரயோகம் செய்யப்படவும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன. மக்களுக்கும் அவநம்பிக்கை ஏற்படுகிறது.

ஆனால், நாங்கள் மக்கள் தமது தேவைகளைத் தாமே அடையாளம் காணச்செய்கின்றோம். அந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்ய அவர்களுக்குப் பயிற்சியும் உதவியும் வழங்குகின்றோம். அதன்மூலம் தமது தேவைகளை மக்களே பூர்த்திசெய்துகொள்கிறார்கள். இதனால் எங்கள் மீது மக்கள் நம்பிக்கை கொள்கின்றார்கள்.

**'விழுது' அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு எவ்வளவு காலமாகிறது?**

ஆறு மாதங்கள்தான் ஆகின்றன. இதுரை காலமும் எமது பணிகளை கிழக்கிலங்கையிலேயே அதிகளவில் மேற்கொண்டு வந்தோம். தற்போது குடாநாட்டில் சில அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து எமது பணிகளை இங்கும் மேற்கொண்டு வருகிறோம்.

**கிழக்கிலங்கையில் இதுவரையில் நீங்கள் சாதித்தது என்ன?**

என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள்? என்பது போல பார்த்தார் சாந்தி சச்சிதானந்தன்.

எங்கள் பணிகள் கிராம மக்களை குறிப்பாக, வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. இந்த மக்களின் தேவைகளை இனங்காண்பதற்காகக் கிராமங்கள் தோறும் அமைப்புகளை உருவாக்குவதே எங்களது முதற்பணியாக உள்ளது. கிராமங்களில் அங்குள்ள இளைஞர், யுவதிகளைக் கொண்டு இந்த அமைப்புகளை உருவாக்குகின்றோம்.

**இப்படி எத்தனை அமைப்புகளை உருவாக்கியிருக்கிறீர்கள்?**

யோசிக்கிறார்... மனதுக்குள் கணக்குப் போடுவது தெரிந்தது.

பல அமைப்புகளை உருவாக்கியிருக்கின்றோம். உதாரணமாக, வாழைச்சேனையில் அல். இன்சானியா சமூக ஐக்கிய ஒன்றியம், புல்மோட்டையில் சமூக அபிவிருத்தி மன்றம் இப்படி பத்துக்கும் மேல் இந்த அமைப்புகளைச் சார்ந்தவர்கள் மக்களிடமிருந்து வந்தவர்கள். ஆகவே, அவர்களால் மக்களின் - சொல்லப்போனால் தமது - தேவைகளை இலகுவாக இனங்காண முடியும். அவர்களுக்குப் பிரச்சினைகளை இனம் காணவும், பயனாளிகளைச் சரியாக அடையாளம் காணவும். இன்னும் பல வழிகளிலும் பயிற்சி வழங்குகின்றோம். பின்னர் அவர்களின் அமைப்புகளை சுயமாக இயங்கச் செய்கின்றோம். அவர்கள் மக்களுக்கு உதவுகின்றனர்.

**அரசசார்பற்ற நிறுவனங்கள் எல்லாமே மக்களுக்கு உதவுவதாகவே கூறுகின்றன. இதில் விழுது அமைப்பின் செயற்பாடு எந்த விதத்திலாவது வேறுபடுகிறதா?**

இன்னுமா நம்பமறுக்கிறீர்கள்? என்று அவரது கேள்வி வாயிலிருந்து வரவில்லை. ஆனால், முகத்தில் தெரிவித்தது.

கிராம மக்களில கிணறு அமைத்துக்கொடுக்கும் திட்டத்தை எடுத்துக்கொள்வோம். பணத்தைக் கொடுத்து கிணறு வெட்டிக் கொள்ளுங்கள் என்று சொல்லி விடுவது சுலபம். ஆனால், இதில் வாங்கும் பணத்தில் அவர் கிணறு வெட்டுகிறாரா? என்பது முதல், கிணறு வெட்டப் பணம கொடுப்பவர்கள் நேர்மையாக நடந்துகொள்கிறார்களா என்பது வரை பல சந்தேகங்கள் எழ வாய்ப்புண்டு. ஆனால், எங்கள் முறையில் இந்தப் பிரச்சினைகள் எழுவதில்லை.

நாங்கள் ஒரு தொகைப் பணத்தை கடனாக வழங்குகின்றோம். அதனைக் கொண்டு ஒருவர் கிணறு வெட்டுகின்றார். அதேவேளை, கிணற்றுக்கு அருகேயே வீட்டுத் தோட்டம் ஒன்றை அமைக்கச் செய்கிறோம். அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்து கடனை திருப்பிச் செலுத்தச் சொல்கின்றோம். அவர் கடனைச் செலுத்தியதும் சுழற்சிமுறையில் வேறொருவருக்கு கிணறு வெட்ட உதவுகிறோம். இப்படிச் செய்வதால், பணமும் விரயமாவதில்லை, அதிக எண்ணிக்கையானவர்களுக்கு உதவவும் முடிகிறது. மக்களும் தமது உழைப்பால் கட்டிய கிணறு என்று பெருமிதமடைவார்கள்!

**நீங்களும் பெண் என்ற வகையில் பெண்களின் முன்னேற்றத்துக்காக உங்களது அமைப்பு என்ன செய்திருக்கிறது?**

பெருமூச்சு விட்டார் சாந்தி சச்சிதானந்தன். முகத்தில் கவலை ரேகைகள் ஓடின.

எவ்வளவோ செய்ய வேண்டியுள்ளது என்பதுதான் உண்மை. நீங்கள் நம்புவீர்களோ தெரியவில்லை. மட்டக்களப்புக் கிராமங்களில் 75 சதவீதமான பெண்களுக்கு எழுத வாசிக்கத் தெரியாது. இவர்களுக்காக படிப்பறிவுத் திட்டங்களை செயற்படுத்திவருகிறோம். அதில் எழுத்துக்களை வாசிக்க மட்டும் கற்றுத்தரவில்லை. வங்கிக்கோ, ஓர் அரச அலுவலகத்துக்கோ சென்று தனது தேவையை தானே சுயமாகப் பெற்றுக்கொள்ளும் பயிற்சியை வழங்குகின்றோம். இதன் மூலம் பெண்களுக்கு மனோதைரியம் ஏற்படுவதாகவே நினைக்கின்றேன்.

**பொதுவாகவே யுத்தத்தால் கல்வி வளர்ச்சி பாதிப்படைந்திருக்கிறது. பல பெற்றோர், பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் அக்கறை காட்டுவதில்லை. இதனைச் சீர்செய்வதில் அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவும் கவனம் செலுத்துகின்றன. உங்களிடம் இது தொடர்பாகத் திட்டம் ஏதும் உண்டா?**

கேள்வியை முடிக்கவும் அதிக உற்சாகம் அடைந்தார் சாந்தி சச்சிதானந்தன்.

வெறும் பிரசாரங்களால் மட்டும் இதனை சாதித்துவிட முடியாது என்பதே எனது கருத்து. இதற்காக கதை வாசிப்பு என்ற செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றோம். இதற்கென்று நாங்களே ஆள்களை நியமிக்கின்றோம். அவர் வாரத்தின் குறிப்பிட்ட ஒரு நாள், ஒரு கிராமத்துக்குப் போவார். அங்கு பிள்ளைகளைக் கூட வைத்து கதைகளை வாசிப்பார். கதை வாசிப்பதென்றால், நாடகம் போல.... "அரசன் சிரித்தான்" என்று இருந்தால் ஹஹ்.... ஹஹ்ஹா.... (சிரித்து நடித்துக்காட்டுகிறார்) என்று நடித்து வாசிப்பார். இது பிள்ளைகளுக்கும் படிபடியாக வாசிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்துகிறது. அதனால், அவர்களுக்கு கற்றலில் ஆர்வம் ஏற்படுகிறது. ஆனால், கதை வாசிக்கும் பணிக்கு ஆள்களை தேடுவதுதான் சிரமமாக உள்ளது. இதனை நாங்கள் தான் செய்யவேண்டும் என்பதில்லை. இதனை ஒவ்வொரு ஊரிலும் அந்தந்த ஊரவர் செயற்படுத்தவேண்டும் என்பதே எனது விருப்பம்.

படிப்பறிவுத் திட்டம் குறித்த கனவு அவரது எண்ணத்தில் விரிந்தது அவரது கண்களில் தெரிந்தது.

**'விழுது' அமைப்பு இலக்காக எதனைக் கொண்டிருக்கிறது?**

மக்களை முதுகெலும்பு உடையவர்களாக, சுயசிந்தனைகொண்டவர்களாக உயர்த்த வேண்டும் என்பதே எங்கள் எண்ணம். அதனால்தான் எவரிடமும் கைகட்டிநிற்காமல், சுயதேவைகளை சுயமாகவே நிறைவேற்றிக்கொள்ளும் குடும்பங்களை உருவாக்கும் விதத்திலேயே எங்களது வேலைத்திட்டங்களை அமைத்திருக்கிறோம்.

**உங்கள் பணியில் சவால்கள்....?**

உடனே பதில் வருகின்றது. மக்களை முதுகெலும்பாக உயர்த்தும்போது எதிர்ப்பு நிறைய வராமல் இருக்குமா? நிறைய எதிர்ப்புக்கள் அரசியல்வாதிகளுக்கு மட்டுமில்லை மதத் தலைவர்களுக்குக்கூட மக்கள் சுயசிந்தனை உடையவர்களாக மாறுவது இங்கு பிடிக்கவில்லை' என்பதுதான் வேதனையான விஷயம்.

**உங்கள் திட்டங்களுக்கு பொருளாதார வளத்தை எங்கிருந்து பெறுகிறீர்கள்?**

இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதரகம் எங்களுக்கு உதவுகிறது.

**பொதுவாக அரசசார்பற்ற நிறுவனங்கள் மக்களுடன் நேரடியாக தொடர்புகொள்கின்றன. உங்கள் 'விழுது' ஆற்றல் மேம்பாட்டு நிறுவனம் உள்ளூர்களில் அரச சார்பற்ற அமைப்புகளை உருவாக்கி அவற்றினூடாகவே பணிகளை மேற்கொள்கிறீர்கள். உள்ளூர் நிறுவனங்களின் நிதி, அவற்றின் நிர்வாகச் செலவுக்கே அதிகம் செலவிடப்படுவதாகக் கூறப்படுவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்.**

அது உண்மை தான். எங்களைக்கூட தனி அலுவலகம் அமைக்கும்படி ஆஸ்திரேலிய தூதரகம் கேட்டுக்கொண்டது. நாங்கள் மறுத்துவிட்டோம். அலுவலகம் என்றால் வாடகை, அதற்கு ஒரு காவலாளி, பிறகு வாகனம், அதற்கு சாரதி இப்படி செலவு வளர்ந்து கொண்டே செல்லும். உள்ளூர் அமைப்புகளுக்கு கிடைக்கும் நிதி ஓரளவே கிடைக்கும். அதனை இப்படி செலவு செய்வது வீண்விரயம் என்றே கருதுகிறேன்.

**தற்போது 'விழுது' அமைப்பின் தவிசாளராக இருக்கிறீர்கள் அதற்கு முன்னர்....?**

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒக்ஸ்போர்ம், பிட்டனைச் சேர்ந்த 'கிறிஸ்டியன் எய்ட்' ஆகிய நிறுவனங்களுக்காக இலங்கையில் சுமார் 12 வருடங்கள் பணியாற்றியிருக்கின்றேன். அந்த அனுபவங்கள்தான் 'விழுது' மூலமாக செயற்படுத்தப்படுகின்றன.

**அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று எப்படி செயற்பட்டால் மக்கள் நம்பிக்கையைப் பெறும் என்று நினைக்கிறீர்கள்?**

நிதானமாக யோசித்தார், பிறகு கூறினார்....

நிதி வழங்குபவர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் போகக் கூடாது. மக்களிடம் இருந்து பிரச்சினையை, தேவையை அறிய வேண்டுமே தவிர, தங்களது வசதிக்குத் திட்டங்களை வகுக்கக்கூடாது. பிரச்சினைகளை சரியாகப் பகுப்பாய்வு செய்து, குடும்பங்களை முன்னேற்றுவதற்கான திட்டங்களைச் செயற்படுத்தினால் மக்கள் நம்பிக்கையைப் பெறலாம்.

அந்த நேரம் அவரது 'செல்போன்' சிணுங்கியது. விடைபெற்றுக்கிளம்பினோம் நாம்.

**- மதுமிதா.**

**படம்:- அற்புதன்.**

# பல்துறைக் கலைஞர் செகராசசிங்கம்

யாழ்ப்பாணத்தின் மூத்த கலைஞர்கள் வரிசையில் தனியிடம் பெற்றுத் திகழ்பவர் பாஷையூர் கலைஞர் புலவர் செகராசசிங்கம்.

கூத்து, இசைநாடகம் போன்ற நாடக வடிவங்களில் மட்டுமின்றி சிலம்பு சுற்றுதல், 'மஜிக்ஷோ' போன்ற பல்வேறு கலைகளிலும் நாடறிந்த கலைஞராக அவர் திகழ்ந்து கொண்டிருக்கிறார். அவரது கலைப்பணி இன்று நேற்று ஆரம்பமானதல்ல.

> கலைஞர் செகராசசிங்கத்தின் நாட்டுக் கூத்து நடையானது எளிதானதாகவும் எல்லோராலும் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் அமைந்துள்ளது. பாரம்பரியக் கதைகளையும் மக்களிடையே பிரபல்யமான விடயங்களையும் வைத்துக் கூத்துப்பா இசைப்பது எளிது.
>
> ஆனால், இவர் ஜோசவ்வாஸ் முனீந்திரரின் வாழ்க்கைச் சரிதையைக் கதையாக்கி அதனை நாட்டுக்கூத்துக் கலைவழியாக வெளிக்கொணர்ந்தது இவரது கலை ஆர்வத்தையும் மறையார்வத்தையும் வெளிப்படுத்துகிறது.
>
> **வண. தோமஸ் சௌந்தரநாயகம்**
> **யாழ். ஆயர்**

சுமார் 60 வருடங்களுக்கு முனனரே அது ஆரம்பமாகிவிட்டது. தற்போது அவருக்கு வயது 89.

அழகிய கடல்வளம் கொழிக்கும் பாஷையூரில்தான் அவரது பிறப்பு, வளர்ப்பு எல்லாம்.

1915 ஆம் ஆண்டு பிறந்த அவர் கொழும்புத்துறை சென்.சூசையப்பர் பாடசாலையில் கல்வி கற்றார். நாடகம் முதலிய கலைகளில் அவருக்கு சிறு வயது முதலே மிகுந்த ஈடுபாடும் ஆர்வமும் இருந்தாலும் அதற்கான உரிய களம் அப்போது அவருக்குக் கிடைத்திருக்கவில்லை.

நாற்பதுகளின் ஆரம்பத்தில் கலை ஆர்வத்தின் மிகுதியினால் தனது கலைக்கான களத்தினைத் தானே அமைத்துக்கொண்டு கலை உலகில் காலடி பதித்த இவர், சிறிது காலத்திலேயே நாடக உல கில் அனைவராலும், அறியப்பட்ட- விரும்பப்பட்ட- புகழப்பட்ட கலைஞராக மிளிர்ந்தார். பத்துக்கும் மேற்பட்ட பெரும் கூத்துக் களையும் இசை நாடகங்களையும் எழுதிய புலவர் செகராசசிங்கம் சிறிய நாடகங்கள் பலவற்றையும் படைத்துள்ளார்.

இம்மனுவல், மனோகரா, ஆரா.யோசவ்வாஸ், சம்பூரண அரிச்சந்திரா, இராவணன் ஆகிய கூத்துக்களும், சூர்ப்பனகையின் சூழ்ச்சி, பூதத்தம்பி, இதயப் பரிசு, மனோகரனின் மாண்பு ஆகிய இசை நாடகங்களும், வெற்றியின் இரகசியம் என்ற சமூக நாடகமும் இவரது வெற்றிப் படைப்புகளில் சிலவாகும்.

இவற்றில் இம்மனுவல, யோசவ்வாஸ் ஆகிய நாட்டுக் கூத்துகளை நூல் வடிவாக்கியிருக்கின்றார். இதனைவிடத் 'தண்டமிழ் தண்டலை' என்ற சிறுவர்களுக்கான நூல் ஒன்றினையும் எழுதியுள்ளார். இவரது இம்மனுவல நாட்டுக் கூத்துக்கு சாகித்திய விருது கிடைத்துள்ளது. தற்போது பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் புலவர் செகராசசிங்கத்தின் சம்பூர்ண அரிச்சந்திராவை நூல் வடிவாக்கி வெளியிட முன்வந்துள்ளது.


> முத்தாரக் கவிஞர் என்றும் செஞ்சொற் கவிஞர் என்றும் பேசப்படும் செகராசசிங்கம் பல்வேறு நாட்டுக்கூத்துக்களையும் இசை நாடகங்களையும் ஆக்கித் தந்தவர். அவருடைய இம்மனுவல் நாட்டுக்கூத்து பலராலும் இன்றும் சிலாகித்துப் பேசப்படுகிறது. இளமைக்காலத்திலிருந்தே கவிதை, சிறுகதை, கட்டுரை, பிள்ளைப் பாடல்கள் முதலான பல்வேறு இலக்கியத்துறைகளிலும் ஈடுபாடு கொண்டு எழுதி வருகிறார்.
>
> **கலாநிதி க.குணராசா,**
> **(செங்கை ஆழியான்)**




ஏனைய படைப்புக்கள் அச்சேறாமல் அழிந்து போய்க் கொண்டிருக்கின்றன என்று கூறிக் கவலைப் படுகிறார் புலவர் செகராச சிங்கம். அவற்றை அச்சுவாகனம் ஏற்றுவதற்கு போதிய வசதிகள் கிடைக்காததால் அவை கையெழுத்துப் பிரதிகளாகவே இருக்கின்றன.

ஆரம்பகாலம் தொடக்கம் ஜெயஸ்ரீ நாடக மன்றம் என்ற பெயரில் கலைக்கூடம் ஒன்றினை நிறுவி அதற்கு ஊடாக பல நாடகங்களை மேடையேற்றினார்.

இவரைப் போலவே இவரது பிள்ளைளும் சிறு வயது முதல கலை ஆர்வம்மிக்கவர்களாக விளங்கியிருக்கின்றனர். வயலின்,




மிருதங்கம், சங்கீதம், நடனம் போன்ற பல கலைகளை அவர்கள் முறைப்படி கற்றிருக்கின்றார்கள்.

புலவரின் நாடகங்களின் பல பாத்திரங்களில் அவரது பிள்ளைகளே நடித்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல புலவரின் கலைப் பணிக்கு அவரது மனைவியான ஞானரத்தினம் மிகவும் உறுதுணையாக இருந்திருக்கின்றார்.

**சந்திப்பு: சந்திரமதனா**

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் குகநேசனின அன்புத் தந்தை
**அமரர் பரநிருபசிங்கம் பரம்சோதி**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(27928)(17-18-36) கல்லூரி நண்பர்கள்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 - 08 - 1933



உதிர்வு 16 - 02 - 2000

**அமரர் குமரையா கந்தசாமி**

(ஓய்வுபெற்ற உபதபால் அதிபர், கௌதாரிமுனை)
திதி: ஏகாதசி (02.02.2004)

எம் இதய தெய்வமே எமை பிரிந்து
ஆனதே ஆண்டுகள் நான்கு
ஆறவில்லை எம் துயர் ஈரவிழி
இன்னும் காயவில்லை
நான்கு ஆண்டுகள் என்ன எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் அப்பா
உங்கள் நினைவுகள் என்றென்றும்
அழியாது
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆ.சாந்தலிங்கம் தர்சினி குடும்பம.**
சந்தனமாதா கோவில் வீதி,
பாண்டியந்தாழ்வு, கொழும்புத்துறை.

மனைவி. மக்கள். மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

(27940)(34-16-18-30)

## 12 ஆவது நினைவு தினம்

ஜனனம் 04 - 05 - 1915



மரணம் 17 - 01 - 1992

**அமரர் P.M.இராசரத்தினம் அவர்கள்**

(முன்னாள் மேலதிக மாவட்டப் பதிவாளரும். காணிப்பதிவாளரும்)

"உன்னுடைய ஆத்மா பரமாத்மாவின் ஒரு அலை. இவ்வாழ்க்கையின் குறிக்கோள், அக்கடலுக்கும், அந்த அலைக்குமிடையே உள்ள தொடர்பைக கண்டுபிடிப்பதுதான். நம்முடைய மற்ற எல்லாச் செய்கைகளும் பிற உயிரினங்களுக்கும் பொதுவானதுதான். இதுவொன்றே மனிதனின் தனி உரிமை. மிருகத் தன்மையிலிருந்து சிரமப்பட்டுமுன்னேறி இந்த உயர்ந்த அந்தஸ்தை அவன் அடைகிறான்.

அப்படியிருக்க, பிறப்புக்கும் - இறப்பிற்கும் இடையே உள்ள வருடங்களை எல்லாம், உண்பதிலும், உறங்குவதிலும், உலக சுகங்களைப் பெறுவதிலும் செலவிட்டுவிட்டால், மனிதன் தன்னை இன்னொரு பிறவியின் தண்டனைக்கு ஆளாக்கிக் கொள்கிறான்".

*- ஸ்ரீ சத்திய சாயி பாபா*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பிள்ளையார் கோயிலடி, தாவடி.* (27936)(34-17-18)

மனைவி: திருமதி மகேஸ்வரி இராசரத்தினம், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### இரட்ணம் இராமச்சந்திரன்

(மெக்கானிக் பக்தர் - மாதனை, பருத்தித்துறை)

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் மாதனையை வசிப்பிடமாகவும் கொண்ட இரட்ணம் இராமச்சந்திரன் அவர்கள் 31.01.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரட்ணம் - தையலாம்பாள் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருஞானசம்பந்தர், நீதிராசா, சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அரியமலரின் அன்புக் கணவரும் சந்திர குமாரி, கலா(வைத்தியசாலை, வல்வெட்டித்துறை), சந்திரலீலா(சுவிஸ்), (செல்வி) சந்திரவதனா (சுவிஸ்), சந்திரகௌரி (லண்டன்), மயில்வாகனம் (சுவிஸ்), சந்திரகுமார்(சுவிஸ்), சந்திரசிறி (லண்டன்), சந்திரபாலா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காயத்திரி, காஞ்சனா, கல்பனா, சௌமீகா, அருண்குமார், அஜித்குமார், சந்துருசன், சகானா, சந்தோஸ், அனுசாந், பிரவீனா, லக்ஸ்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் மனோகரராசா, சௌந்தர ராசா, ராஜ்குமார், ராஜி, சரஸ்வதி, ஆஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை வீதி, மாதனை, பருத்தித்துறை.* (.27937)(17-18-36)

தகவல்: குடும்பத்தினர்.


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3308603 இருந்து
3324790 வரை
சீட்டிழுப்பு இல. 1475
திகதி 31.01.2004



### வெற்றி எண்கள்

**17 26 34 36 37** போனஸ் எண் **44**

ஜக்பொட் பரிசு
**ரூபா.1,500,000/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | 1,500,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | - | 100,000/- | - |
| 4 | 105 | 10,000/- | 1,050,000/- |
| 3 | 5,076 | 500/- | 2,538,000/- |
| 2 | 84,281 | 20/- | 1,685,620/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 17ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 103,301 | 10/- | 1,033,010/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,306,630/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா.2,298,800/-**

தொடர் இல. 2355145க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2004 பெப்ரவரி 04ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3315255-8-52
3317972-3-14
3310194-4-91
3324763-4-30
3312920-8-72

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 548 |
| திகதி | 30.01.2004 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5475908-5490290

வெற்றி இலக்கங்கள் **03 18 28 46**

லக்கினம் மீனம்



ஜக்பொட் பரிசு
ரூபா. 1,724,950/-
வெல்லப்பட்டது

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,000,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 315,305 | 10 | 3,153,050 |
| 2 இலக்கங்கள் | 28,900 | 20 | 578,000 |
| 1 இல + லக்கினம் | 28,666 | 30 | 859,980 |
| 2 இல + லக்கினம் | 2,699 | 100 | 269,900 |
| 3 இலக்கங்கள் | 771 | 500 | 385,500 |
| 3 இல + லக்கினம் | 72 | 5,000 | 360,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1,724,950 | 1,724,950 |
| மொத்தம் | 376,417 | - | 7,631,380 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.7,631,380/-

தொடர் இல. 4505035க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2004 பெப்ரவரி 03ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5484517-4-28
5485221-1-41
5482200-5-10
5477767-9-39
5484039-2-89

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



யாழ். மத்திய கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் இம்முறை நீச்சல் போட்டி, படகுப் போட்டி என்பன நடத்தப்பட்டன. வேலணை செட்டிப்புலம் (சாட்டி) கடலில் இந்தப் போட்டிகள் இடம்பெற்றன. போட்டி ஒன்றை கல்லூரி அதிபர் க.இராசதுரை கொடியசைத்து ஆரம்பித்து வைப்பதை முதல் படத்திலும், நீச்சல் போட்டியில் கலந்துகொண்ட மாணவரையும், அவர்களுக்குப் பாதுகாப்பாகப் படகுகளில் சென்ற சுழியோடிகளையும் இரண்டாவது படத்திலும், படகுப் போட்டியில் முதலிடம்பெற்ற 'பேர்சிவல்' இல்லப் படகை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# பண்பாட்டின் ஆத்ம உறுதிக்கு பலம் சேர்க்கும் நூல்கள் தேவை

## கவிதை நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம்,பெப்.2

எமது பண்பாட்டின் ஆத்ம' உறுதிக்கும் நிலைபேற்றிற்கும் சாட்சியாய் நிற்கக்கூடிய நூல்கள் காலத்தின் தேவையாக உள்ளன.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக சமூகவியற்றுறைத் தலைவர் கலாநிதி என்.சண்முகலிங்கன்.

சமூகவியற்றுறை சிறப்புக்கலை மாணவர் தானா விஷ்ணுவின் கவிதை நூல் வெளியீட்டுவிழாவில் வாழ்த்துரை வழங்கும்போது அவர் இப்படித் தெரிவித்தார்.

மாணவர் அவைத்தலைவர் வசீகரன் தலைமையில் நூலக கேட்போர் கூடத்தில் வெளியீட்டுவிழா நடைபெற்றது.

கலாநிதி சண்முகலிங்கன அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

போரின் கொடுமுகத்தில் தன் இளமையை, உறவுகளை, கனவுகளைத் தொலைத்த பின்னரும் தளரா மனதுடன் உயிர்க்கும் கவிதைகளாய் தானா விஷ்ணுவின் கவிதை நூல் வாய்த்திருக்கிறது. 'அசுரத்தனமான போர்காற்றினால் என் கிளைகளை மட்டுமே அசைக்க முடிந்தது. எனது வேர்கள் என்றும் உறுதியாகவே உள்ளன' எனும் விஷ்ணுவின் கவிக்குரல், எங்கள் பண்பாட்டின் ஆத்ம உறுதிக்கும் நிலைபேற்றிற்கும் சாட்சியால் ஒலித்து நிற்கின்றது.

எங்கள் சுயங்களின் மீது வீழ்ந்து கிடக்கின்ற கரிய நிழலை இனங்காட்டி, விழிப்புணர்வினையூட்டும் விஷ்ணுவின் கவிதைகள் அமைதியானவை. ஆர்பரிப்போ, அர்த்தமற்ற சொற்குவிப்போ இல்லாத அழகினால் நிறைந்திருப்பவை.

விஷ்ணுவின் படிமங்கள் புதிதாய் நெஞ்சைத்தொடுவன. 'நனைந்து போன பூனைக்குட்டிபோல இருக்கிறேன்',

'உடைந்து போன முட்டைக் கோதின் துணைக் கமர்கின்றேன்' என நீரும் விஷ்ணுவின் கவிதை மனம், அறிவும் உணர்வும் இசைய நாளையின் ராகங்களாகின்ற கவிதைகளைத் தருகின்றது. மேன்மேலும் இந்த ஆற்றலும் அழகும் விரிந்திட வாழ்த்துக்கள் - என்றார்.

மூத்த கவிஞர் தா.இராமலிங்கம் நூலை வெளியிட்டு வைத்தார் எழுத்தாளர் அ.யோகராசா, விரிவுரையாளர் குமரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். (ஐ)

# கட்டுமானப் பணிகளுக்குக் கடன்கள்; வீடமைப்பு அதிகார சபை வழங்கும்

வலி. வடக்கு,பெப்.2

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் புதிய வீடு நிர்மாணித்தல், வீடுகளைத் திருத்துதல் ஆகியவற்றிற்குக் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

கடன்பெற விரும்புபவர்கள் தமது பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வீடமைப்பு அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு உரியபடிவங்களையும் மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகளின் வருமானத்திற்கு ஏற்பவும், கட்டுமானப் பணியின் அடிப்படையிலும் செலவு மற்றும் தேவையின் அடிப்படையிலும் கடன் தொகை நிர்ணயிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-86)

# பாரம்பரியக்கலை மேம்பாட்டுக்கழக இசை நாடக கூத்துப் போட்டி முடிவுகள்

பாரம்பரியக்கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்ட காத்தவராயன் கூத்து, இசை நாடகம் மற்றும் தென்மோடி நாட்டுக் கூத்து ஆகியவற்றுக்கான போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இந்தப் போட்டிகளில் முறையே முதல் மூன்று இடங்களைப்பெற்ற கலை அமைப்புகளின் விவரம் வருமாறு:-

காத்தவராயன் கூத்து:- மாதனை வேணுகானசபை, சுழிபுரம் ஸ்ரீ அம்பாள் கலையகம், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை நுண் கலை மன்றம்.

**இசை நாடகம்:-**

சுன்னாகம் மயிலங்காடு வாகீஸ்வரி நாடகமன்றம் (பூதத்தம்பி) இணுவில் கந்தசுவாமி கோவில் தொண்டர் சபை (மயானகாண்டம்), மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை நுண்கலை மன்றம் (நல்ல தங்காள்),

**தென்மோடி நாட்டுக்கூத்து:-**

நாவாந்துறை புனித நீக்கிலாஸ் நாடகமன்றம் (ஏரொடியான் சபதம்), பாஷையூர் உதயசூரியன் நாடகமன்றம் (வீரபாண்டிய கட்டப்பொம்மன்), தெல்லிப்பழை நவரச நாடகமன்றம் (வேதநூல்),

இந்தப் போட்டிகளில் சிறந்த நடிகர்களாகத் தெரிவு செய்யப்பட்டுத் தங்கப்பதக்கம் பெறுபவர்களின் விவரம் வருமாறு:-

நாட்டுக்கூத்து - பாஷையூர் வ.அலபிறட், இசைநாடகம் - அளவெட்டி எஸ்.முருகானந்தன், காத்தவ்ராயன் கூத்து - சுழிபுரம் க. சிவரஞ்சன்.

# ஊரெழு வயோதிபர் கொலை; சந்தேகத்தில் மூவர் கைது!

வலி.வடக்கு,பெப்.2

ஊரெழு வடக்கு கற்பகம் மில் பகுதியில் வயோதிபர் ஒருவர் கொலையுண்ட சம்பவம் தொடர்பாக அப்பகுதியைச் சேர்ந்த மூவரைச் சந்தேகத்தின் பேரில் பொலீஸார் கைதுசெய்தனர். அவர்கள் மூவரும் மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் இ.வசந்தசேனன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

ஊரெழு, மயிலங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த சரவனை சதீஸ்குமார், கந்தன் சுதாகரன், பத்மநாதன் இந்திரஜித் ஆகியோரே கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டவர்களாவர்.

சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

ஊரெழு வடக்கு கற்பகம் மில் பகுதியைச் சேர்ந்த வைத்தி தில்லையம்பலம் (வயது-61) என்பவரே கடந்த புதன்கிழமை கும்பல் ஒன்றின் தாக்குதலில் உயிரிழந்திருந்தார்.

இறந்தவரின் மனைவி அளித்த சாட்சியத்தையும் மற்றும் சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கையையும் கவனத்திற்கொண்டு இறந்தவரின் மரணம் கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டமை தெரிந்ததே. (ஒ-86)

# தாபரிப்புக் கட்டத் தவறிய நபருக்கு விளக்கமறியல்

வலி.வடக்கு,பெப்.2

தாபரிப்புப் பணம் கட்டத்தவறிய நபர் ஒருவரை விளக்கமறியலில் வைக்கும்படி மல்லாகம் மாவட்ட பதில் நீதிவான் இ.வசந்தநேசன் கட்டளையிட்டுள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் மருந்தக வீதியைச் சேர்ந்த நபர் ஒருவர் தாபரிப்புப் பணம் கட்டத்தவறியிருந்தார். இது நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதனையடுத்து அவருக்கு நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியது. ஆனாலும் அவர் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்கவில்லை.

சுன்னாகம் பொலீஸார் அவரைக் கைது செய்து மல்லாகம் மாவட்ட நீதிமன்றின் முன் ஆஜர் செய்தனர். அவரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ஒ-86)

# கைத்தொழிலுக்கான கடன்திட்டங்கள்; மக்கள் வங்கியில் விரைவில் நடைமுறை

## மேலதிகப் பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.2

போரினால் சிதைவடைந்துள்ள யாழ் மாவட்டத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில்களுக்கென மக்கள் வங்கிக்கடன் திட்டங்களை நடைமுறைப் படுத்தவுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் மக்கள் வங்கியின் மேலதிகப் பொதுமுகாமையாளர் டபிள்யூ.ஜெ.மார்ட்டீன் பெர்ணான்டோ.

நேற்று கண்ணாதிட்டி வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பிராந்திய அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் யாழ். பல்கலைக்கழக வங்கிக்கிளை, ஸ்ரான்லி வீதிக்கிளை, கன்னாதிட்டிக்கிளை மற்றும் (பிராந்திய தலைமையலுவலகம்), பிரதான வீதிக்கிளை என்பன தற்போது கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய கிளைகளைக் கணனி மயப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படுகின்றது.

மக்கள் வங்கிக் கிளைகளில் ஏனைய கிளைகளைவிட பணவைப்புச் செய்வோரின் தொகைமிக அதிகம் ஆனால், கடன் வழங்குவதில் உள்ள சில இறுக்கமான நடவடிக்கைகளால் கடன் பெறுவோர் தொகைமிகக் குறைவாகவே காணப்படுகிறது.


அதுமட்டுமல்லாது, கடந்த வருடங்களில் யாழ். மாவட்டத்தில் இருந்த சூழ்நிலைகள் காரணமாகவும் கடன்களை அதிகளவில் வழங்க முடியாதிருந்தது.

ஏனைய பகுதி மக்களைவிட யாழ். குடாநாட்டு மக்கள் கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டும் என்பதில் அதிக அக்கறை உள்ளவர்கள்.

யாழ்.குடாநாட்டில் மீன்பிடித் தொழில், விவசாய, வியாபார நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கும், கைத்தொழில், சிறுகைத்தொழில்களை விருத்திசெய்வதற்கும் மக்கள் வங்கி கடன் வழங்கவுள்ளது.

அதற்கேற்றவகையில் கடன் வழங்குவதில் உள்ள இறுக்கமான நடவடிக்கைகளைச் சற்று தளர்த்தி கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகளை துரிதமாக்குமாறு யாழ். குடாநாட்டிலுள்ள சகல மக்கள் வங்கிக்கிளை முகாமையாளர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்தச் சந்திப்பில் மக்கள் வங்கியின் உதவிப்பிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-5)



மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது மக்கள் வங்கியின் மேலதிகப் பொது முகாமையாளர் டபிள்யூ.கே.மார்டின் பெர்னாண்டோ விளக்கமளிப்பதைப் படத்தில் காணலாம். யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், யாழ். உதவிப்பிராந்திய முகாமையாளர் மு.க. சிவபாதவிருதயர் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,பெப்.02

திருநெல்வேலி தெற்கு, பரமேஸ்வரா சந்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த மாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

உற்சவ நிறைவு நாளான நாளை செவ்வாய்க்கிழமை கும்பாபிஷேக தின சங்காபிஷேகமும், திருவீதியுலாவும், நாளை மறுதினம் புதன்கிழமை அன்னதானமும் இடம்பெறும். (ஒ)

★ ★ ★

வலி.வடக்கு,பெப்.2

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள புவனேஸ்வரி அம்பாள் ஆலய மஹாகும்பாபிஷேக பெரும்சாந்தி விழா நாளைமறுதினம் புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு இடம்பெறவுள்ளன.

மறுநாள் வியாழக்கிழமை காலை 7.30மணிக்கு மஹாகும்பாபிஷேகம இடம்பெறவுள்ளது. (ஒ-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.02

மிருசுவில், தவசிக்குளம் காணிக்கை அன்னை ஆலய வருடாந்த திருவிழாவின் நற்கருணைவிழா இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.

திருநாள் திருப்பலி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணக்கு நடைபெறும். (ம-8)

★ ★ ★

சாவகச்சேரி,பெப்.2

மட்டுவில் வடக்கு லூர்த்து மாதா தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமை பிற்பகல் கொடி யேற்றத்துடன் ஆரம்பமானது. உற்சவம் தொடர்ந்து நாளைமறுதினம் வரை சாவகச்சேரி பங்குத் தந்தை வணக்கத்துக்குரிய டி.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை நற்கருணை ஆராதனையும் நாளைமறுதினம் காலை 7.30மணிக்கு திருநாள் திருப்பலிப் பூசையுடன் திருச்சொரூபபவனியும் இடம்பெறும். (ஒ-31)

### நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்கத் திட்டம்

கிளிநொச்சி அக்கராயனில் நன்னீர் மீன்பிடித் தொழிலை அககராயன் அபிவிருத்தி நிறுவனம் ஊக்குவிகக உள்ளது. நொராட், போரூட நிறுவனங்களின் நிதியுதவியுடன் அக்கராயன் குளக் கிராமிய நன்னீர் மீனவர் சங்கம் இதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. (ஒ-5)

# விழிப்புலனற்றவர்களுக்கு சுயதொழில் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,பெப்.2

நல்லூர் பிரதேச செயலகத்துக் குட்பட்ட பகுதியில் வசிக்கும் விழிப்புலனற்றவர்களுக்கு சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கான பயிற்சி வகுப்பு இடம்பெறவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன. இதற்காகப் பயிற்சி வகுப்பில் இணைத்துக்கொள்ளப்படவுள்ள விழிப்புலனற்றவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாக நல்லூர் பிரதேச செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் தெரிவித்தார்.

விழிப்புலனற்றவர்கள் தாம் சுயமாகத் தொழில் ஒன்றினை மேற்கொள்ளும் வகையில் இந்தப் பயிற்சி வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

. இந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்பவர்களுக்கு மூன்று நாள்களும் தலா நூறு ரூபாவீதம் வழங்கப்படவுள்ளது.

கொழும்பிலிருந்து வருகைதரும் சமூகசேவைத் திணைக்கள அலுவலர்கள் குழு இப்பயிற்சிகளை வழங்கவுள்ளது.

(ஒ-6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சங்கானை, வல்லை வீதியைச் சேர்ந்த

**திரு. க.வ.அரசன்**

*அவர்கள் 04. 05. 2003 ஆம் திகதி தொடக்கம் அகில இலங்கை சமாதான நீதிவானாகப் பதவியேற்றுள்ளமையையிட்டு அகமகிழ்வதுடன் இவரின் சேவைகள் சிறக்க மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

பணிப்பாளர், பணியாளர்கள், அங்கத்தவர்கள்,
சங்கானை பனை தென்னை வள
அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கம். சங்கானை.

(27954)(34-36-13-14)


Become a professional while you are a teen...

**Association of Business Executives - UK**

abe

Shortest route to MBA

Now in Jaffna

**International Study programmes through various universities in**
**UK, USA, Australia, Canada, New Zealand etc.**

**UNIVENTURES INSTITUTE OF BUSINESS MANAGEMENT**
16, Kandappah Segaram Veethy, Jaffna

**Hotline 0777 918280**
www.abeuk.com

(c-33064)(36-13-14)


# இலவச சீருடை பெற்றுக்கொடுப்பதில் அதிபர்கள் கவனம் செலுத்தவேண்டும்

## நல்லூர் பிரதேச செயலர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.2

பாடசாலைகளில் தரம் ஒன்றில் கல்விபயிலும் மாணவர்களுக்கான சீருடைத்துணிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான பதிவுகளை மேற்கொள்ள உரிய பாடசாலை அதிபர்கள் கவனம் எடுக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரம் கேட்டுள்ளார்.

கடந்த மாதம் முதல் இப்பதிவுகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக அதிபரிடம் விண்ணபபப் படிவத்தைப் பெற்று கிராம சேவையாளர் ஊடாகப் பதிவுகளை மேற்கொண்டு அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தாயினும் பல மாணவர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை. இப்பதிவுகளை மேற்கொள்ள பெற்றோர்கள் அக்கறை காட்டாமையினால் பாடசாலை அதிபர்கள் -சீருடைத் துணிகளுக்கு விண்ணப்பம் பெறாத மாணவர்களின் விவரங்களைப் பெற்று பெற்றோருக்கு தெரியப்படுத்தி பதிவுகளை செய்யும்படி பிரதேச செயலர் கேட்டுள்ளார். இப்பதிவுகளை செய்யத்தவறும் மாணவர்களுக்கு சீருடைத்துணிகள் கிடைக்காமல் போகும எனவும் அவர் தெரிவித்தார்.

(ஒ-6)

# எழுச்சிப் பேரவையும் புலிகளும் ச.ச. நிலையங்களுக்கு உதவி

வலி.வடக்கு,பெப்.2

யாழ். - நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையினரும், அரசியல் துறையினரும் இணைந்து நல்லூர் - யாழ்ப்பாணம் பகுதியில் உள்ள நான்கு பொது அமைப்புக்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் அருள்மாதா சன சமூக நிலைய அபிவிருத்திக்கும் சிறுவர்பூங்கா அமைப்பதற்கும் தேவையான பொருள் உதவிகளையும், கோண்டாவில் வடக்கு ஞான ஒளி சனசமூக நிலையத்திற்கு சனசமூக நிலையச் சுற்றாடலில் வீதிகளில் பொருத்துவதற்கான குழாய் மின்குமிழ்களும், நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலைய முன்பள்ளி சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களும் யாழ். பாஷையூரில் கணவனை இழந்த பெண்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேசிய எழுச்சிப்பேரவையின் சங்கம நிகழ்வில் வைத்து இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், நல்லூா பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஒ-30-86)

### கோட்டக் கல்வி அலுவலகம் இடம்மாற்றம்

தென்மராட்சி,பெப்.2

பளை அந்திராயன் தேவாலய கட்டடத்தில் இயங்கிவந்த பளை கோட்டக் கல்வி அலுவலகம் இன்று தொடக்கம் பளை மத்தியகல்லூரி கட்டடத்தில் இயங்குமென கோட்டக்கல்வி அலுவலர் அ.கயிலாயபிள்ளை அறிவித்துள்ளார்.

(எ-117)

### மெய்வன்மை போட்டி

தென்மராட்சி,பெப்.2

பளை மத்தியகல்லூரி ஆரம்பப்பிரிவு இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கலந்துகொள்வார்.

(எ-117)

### இளைஞர் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,பெப்.2

கலியாணவீட்டுப்பந்தல் அமைத்துக்கொண்டிருந்த வேளை, சாய்ந்து விழுந்த இரும்புப்பந்தலின் கால் அடித்ததில் ஒருவர் காயமடைந்தார்.

கொக்குவிலில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் மயிலிடடியைச்சேர்ந்தவரும், பந்தல் அமைத்துக்கொண்டிருந்த தொழிலாளியில் ஒருவருமான வேலுப்பிள்ளை ரதீபன் (வயது 20), என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(எ-15)

### கொடிக்கீதம் இயற்றும் போட்டியின் பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம்,பெப்.2

லண்டன் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்திற்கான கொடிக் கீதம் இயற்றும் போட்டியில் பங்கு பற்றியவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வும், யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் பயிற்சி முகாமில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ வழங்கும் வைபவமும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

பிரதம விருந்தினராக லண்டன் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கச் செயலாளர் என்.ஸ்ரீகெங்காதரன் கலந்துகொண்டு சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கவுள்ளார்.

பரிசு வழங்கும் நிகழ்வினைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறவிருப்பதால் பாடசாலை அதிபர்கள், ஆர்வலர்களைக் கலந்து கொள்ளும்படி யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத் தலைவர் ந.சிவகடாட்சம் கேட்டுள்ளார். (ஐ)

### முற்றுப்பெறாத மயான மண்டபம்

சங்கானை கரைச்சி மயானத்தில கட்டப்பட்ட மண்டபம் பூர்த்தியாகாத நிலையில் உள்ளதால், தகனக்கிரியைகளுக்காக இங்குவரும் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கடடட வேலைகள், நிதிப்பற்றாக்குறை காரணமாகக் கைவிடப்பட்டுள்ளது. கடநத 10 மாதங்களாக நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சின் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டும எதுவித பயனுமில்லை என இக் கட்டட புனரமைப்பு வேலைகளை மேற்கொண்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ஒ-29)

## பணிநிலை வெற்றிடம்

### ஆயப்பகுதி

**ஆயப் பகுதியில் கீழ்க்காணும் பணிநிலைகளுக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன**

**01.அலுவலர் [ஆண்கள்]**

தகைமைகள்:
க.பொ.த (உயர்தர) இல் பொருத்தமான பிரிவில் 3 பாடங்களுக்குக் குறையாமல் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

**02.ஆய உதவியாளர் [ஆண்கள்]**

தகைமைகள்:
க.பொ.த (சாதாரண) இல் தமிழ்,கணிதம் உட்பட ஆறுபாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

**03.அலுவலக உதவியாளர் [ஆண்கள்]**

தகைமைகள்:
ஆண்டு 10 தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

**04.பாதுகாவலர்**

தகைமைகள்:
ஆண்டு 9 தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.
உடல் வலுவும் தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

➢ தங்குமிட வசதி செய்து தரப்படும்.
➢ மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும்
➢ ஊழியர் நயநிதி வசதி உண்டு

**நேர்முகத்தேர்வு**

இடம்: ஆயப்பகுதி, நடுவப்பணியகம், கிளிநொச்சி

காலம்: 2004.02. 10ஆம்,11 ஆம் நாள் காலை 11 மணி

பொருத்தமான வேண்டுகையாளர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட தன்வரலாறு (சுயவிபரம்), சான்றிதழ்களுடன் சமூகம் தரவும்.

ஆயம்,நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்

02.02.2004

## கண்ணீர் அஞ்சலி

வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) யாழ்.மாவட்ட அலுவலகத்தில்
சமூக அபிவிருத்தி திட்ட இணைப்பாளராகக் கடமைபுரியும்
திரு.சந்திரலிங்கம் கெங்காதரன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சரஸ்வதி சந்திரலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாவட்டப் பிரதித்திட்டப் பணிப்பாளரும்,
உத்தியோகத்தர்களும்.

*நிகொட், கச்சேரி, யாழ்ப்பாணம்.*(27953) (26-13-14-36)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பீற்றர் இராசம்மா

மயிலிட்டி வடக்கு, வைரவர் கோயிலடியைச் சேர்ந்த திருமதி பீற்றர் இராசம்மா நேற்று (01.02.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மயிலிட்டியைச் சேர்ந்த ஜோன் பீற்றர் பீரிஸின் அன்பு மனைவியும் விசயலட்சுமி (வவி)யின் அன்புத் தாயாரும் நிச்சிங்கம் வேலுப்பிள்ளையின் மாமியாரும், தமயந்தினி (சாந்தி), தபேந்திரன் (சந்திரன்), கருனாவதி (சிட்டு), கோமதி (றஜனி), ரதீபன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2004) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (27956)(36-13-14)

தகவல்:
நி.வேலுப்பிள்ளை,
(மருமகன்).

### திருமதி பிரான்சிஸ் மரியதிரேசா

சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் மரியதிரேசா 31.01.2004 சனிக்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ் (மெக்கானிக்)அவர்களின் அன்பு மனைவியும் யஸ்ரின் (பிரான்ஸ்), செல்வகுமார், விஜயகுமார், ஜெயக்குமார் (லண்டன்), றூபி (ஆஸ்திரேலியா), சயந்தி (பிரான்ஸ்), ரஜனி, சுகந்தி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும் கணேசலிங்கம், அருளலிங்கம், மகேந்திரம ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் கொழும்பு மட்டக்குழி செண்மேரிஸ் தேவாலயத்தில் 05.02.2004 வியாழக்கிழமை நடைபெறும் இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டக்குழி, கொழும்பு* (27957)(36-13-14)

தகவல்
ம. மகேந்திரா (தம்பி.)

# அமெரிக்க ஜனாதிபதிக்குரிய பாதுகாப்பு இந்திய கிரிக்கெட் அணிக்கு வழங்கப்படும்

## பாக். கிரிக்கெட் சபைத் தலைவர்

"பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யும் இந்திய கிரிக்கெட் அணிக்கு, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு வழங்கப்படும் பாதுகாப்புக்கு இணையான பாதுகாப்பு வழங்கப்படும்".

- இவ்வாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷஹூர்யர்கான் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி எதிர்வரும் மார்ச் மாதம் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இதேவேளை, இந்திய வீரர்கள் சிலர் பாதுகாப்பு தொடர்பாக அச்சம் தெரிவித்துள்ளனர் எனவும் செய்திகள் வெளியாகின.

இந்நிலையில், இந்திய செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே ஷஹூர்யர் கான் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்:- "இச்சுற்றுப் போட்டிகளுக்கான போட்டி அட்டவணையை பாகிஸ்தான் கிரிக்கெட்சபை தயாரித்துவிட்டது. இதன்படி மார்ச் 3ஆம் திகதி இந்திய அணி பாகிஸ்தானுக்கு வரவுள்ளது.

ஆனால், இந்திய அதிகாரிகள் தீர்மானத்திற்காகக் காத்திருக்கிறோம்" - என்றார்.

இச்சுற்றுப் போட்டிகளில் இந்திய அணிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் எனவும் ஷஹூர்யர்கான் கூறுகிறார்.

"சந்தேகத்திற்கிடமின்றி, இந்திய அணி தற்போது மிகச் சிறப்பாக விளையாடிவருகிறது. ஆஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடரை அவர்கள் சமநிலையில் முடித்தனர்.

உண்மையில் இந்திய அணி அத தொடரில் வெற்றிபெற்றிருக்கலாம்.

நாமும் நியூஸிலாந்தில் டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக விளையாடினோம். ஆனால், கிரிக்கெட் அடிப்படையில் இந்திய அணியையே வெற்றி வாய்ப்புக்குரிய அணியாக நியாயமான எவரும் கருதுவர்.

அதேவேளை, எதிரணியின் வலிமை கண்டு பாகிஸ்தான் வீரர்கள் எவரும் அச்சமடையத் தேவையில்லை.

நாம் நியூஸிலாந்திலிருந்து உற்சாகத்துடன் திரும்பியுள்ளோம். அதேவேளை, சொந்த மண்ணில் நாம் விளையாடுகிறோம். இந்தியாவின் பலம் துடுப்பாட்டம் என்றால் எமது பலம் பந்து வீச்சில் உள்ளது. இத்தொடர் மிகச் சிறந்ததொன்றாக அமையும்" - இவ்வாறு ஷஹூர்யர்கான் கூறினார்.

இந்திய அணியின் பந்துவீச்சாளர்களுக்கு பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் வஸிம் அக்ரம் பயிற்சியளிக்கிறார் என்ற சர்ச்சை தொடர்பாக ஷஹூர்யர்கான் கருத்துத் தெரிவிக்கையில்:-

"இந்த விடயம் மிகைப்படுத்தப்படுகிறது. சிரேஷ்ட வீரர்கள் அனைவரும கனிஷ்ட வீரர்களுக்கு நுணுக்கங்களை வழங்குகின்றனர். அது எதிரியைத் தயார்படுத்தல் ஆகாது.

"விரைவில் எமது பயிற்சி முகாமில் உள்ள பத்துவீச்சாளர்களுக்கு வஸிம் பயிற்சியளிப்பார் என நான் நம்புகின்றேன்" - என்றார்.

# பிரிட்டிஷ் கார் பந்தயத்தில் நடிகர் அஜித்!

கார் பந்தய பிரியரான திரைப்பட நடிகர் அஜித்குமார், பிரிட்டிஷ் போர்முலா 3 பந்தயத்தில் கலந்துகொள்ளவுள்ளார். இதன் மூலம் முன்னணி வீரர்களான அக்பர் இப்ராகிம், நிரேயன் கார்த்திகேயன், கருண் சந்தோக் ஆகியோர் வரிசையில் இப்போட்டியில பங்கேற்கும் நான்காவது இந்திய வீரராகிறார். அஜித்.

38 படங்களில் நடித்துள்ள 32 வயதான அஜித், இளம் பருவத்தில் இருந்தே மோட்டார் சைக்கிள், கார் பந்தயங்களில் பங்கேற்பதில் ஆர்வமுடையவராக இருந்தார். 19 வயதில் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் பிரகாசித்த இவர், நீண்ட இடைவெளிக்குப்பின் 2000இல் மீண்டும் களம் புகுந்தார். அப்போது நடந்த தேசிய அளவிலான சம்பியன்ஷிப் போட்டியில் இவர் 5 ஆவது இடம்பெற்றார். பின்னர் 2003இல் மலேசியாவில் நடந்த ஆசிய அளவிலான 'பி.எம்.டபிள்யூ போர்முலா' கார்பந்தயத்தில் 12 ஆவது இடம்பெற்றார்.

இந்நிலையில் நேற்று சென்னையில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அஜித், பிரிட்டிஷ் போர்முலா 3 பந்தயத்தில் கலந்துகொள்ளவிருப்பதாக தெரிவித்தார். இவர் மேலும் கூறுகையில், கார் பந்தயத்தில் தொழில் ரீதியான வீரராகமாற விரும்புகிறேன். இது மிகவும் கடினமானது என்கின்றனர்.

ஆனாலும், எனது முயற்சியை கைவிடப்போவதில்லை. கார் பந்தயத்தில் உலகில் வெற்றிகரமாக செயற்பட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஸ்டுடியோவில் நடிப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இருப்பினும் கார் பந்தயத்தில் பங்கேற்கும் போது கிடைக்கும் புத்துணர்ச்சிக்கு நிகராக எதையும் குறிப்பிட இயலாது - என்றார்.

## இறைவனை வேண்டுகின்றேன்



நோய்வாய்ப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும்

**அருட்கவி ச.விநாசித்தம்பி**

அவர்கள் பூரண நலமடைய கட்டுடை அரசடி விநாயகரை வேண்டுகின்றேன்.

அரசடி வீதி,
கட்டுடை, மானிப்பாய். (27964)(37-13-14-30)

அன்பு மகன்
செல்வம் (காந்தி).

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



உடுவில் மகளிர் கல்லூரியில் 2003ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 166 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த

**செல்வன் மகாதேவன் துவாரகன்**

அவர்களை மேன்மேலும் கல்வியில் சிறப்படைய விநாயகன், ஐயனார் துணை கொண்டு வாழ்த்துகின்றேன்.

பங்களா லேன்,
மல்லாகம். (27959)(37-13-14-30)

-அம்மம்மா.


## நியூ விஸ்ணு வீடியோ & எலக்ட்ரோனிக்ஸ்
பிரதானவீதி, நாவலர்மடம்,
நெல்லியடி.

கடை இடம் மாற்ற வேண்டியுள்ளதால் எம்மிடம் திருத்துவதற்காக ஒப்படைத்த பொருள்களை 01.02.2004இலிருந்து-29.02.2004இற்குள மீளப்பெற்றுக்கொள்ளவும். தவறும் பட்சம் "தலைவாசல் வர்த்தக நிலையம வியாபாரி மூலை, பருத்தித்துறை" என்ற முகவரியில் தொடர்புகொள்ளவும். இங்கும் 01.03.2004இலிருந்து 31.03.2004இற்குள் பெற்றுக்கொள்ளவும். இக்காலப் பகுதிக்குள் பெற்றுக்கொள்ளாத பொருள்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர். (படப்பிரதி விற்பனைக்கு உண்டு)

(C-33063)(37-13-14-30) உரிமையாளர்: ந.வசந்தன்


## வாழ்த்துக்கள்

**மது கல்வி நிறுவனம்**
இருபாலை, கோப்பாய்.
**புலமைப் பரிசில் -2003**
பரீட்சையில் சித்தியடைந்தோர்

| | |
|---|---|
| தாரணி ஞானசேகரம் | - 160 |
| குமாரசாமி நிசாந்தன் | - 142 |
| கிஷ்ணமோகன் பிரசன்னா | - 135 |
| கௌரி திருஞானசம்பந்தமூர்த்தி | - 126 |
| சர்மிளா சேனாதிராசா | - 126 |
| கஜரூபி சுப்பிரமணியம் | - 120 |
| லக்ஸிகா நாகராசா | - 118 |
| அலங்கரித்தவர்கள்... | |
| ரஞ்சிதா பாஸ்கரன் | -117 |
| சதுர்த்திகா சற்குணராஜா | -116 |
| ஸ்ரீஸ்கந்தராஜா சாகித்தியன் | -116 |

அநேகரின் வேண்டுகோளிற்கிணங்க

★ தரம் 5 ★

**புலமைப் பரிசில் பரீட்சை வகுப்பு**
பிரிவு II
ஆரம்பம்:04.02.2004
ஆசிரியர்: திரு.K.பகீரதன்.
(27960)(12)

## தேவை

கொழும்பிற்குப் போய் பொருள்கள் வாங்கக்கூடிய, யாழ்ப்பாணத்திலும் வேலை செய்யக்கூடிய 2 பேர் தேவை. ஆண், பெண் எவரும் தொடர்புகொள்ளவும்.

(30) **T.P.: 0777 - 283795** (சி-33065)

## இணைந்த கணிதம் A/L 2004

மாதிரி வினா விடை வகுப்பு
உங்கள் பரீட்சையினை
இலகுபடுத்தும் வகையில்
கொழும்பு, கண்டி பிரபல ஆசிரியர்
**T.விஜேந்திரன்**
(B.Sc., Dip.in. Ed.)
அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**இரு இடத்தில்**

**BARATHY** சித்தன்கேணி.
ஆரம்பம்: 02.02.2004 திங்கள் 3.15 p.m. (ப.நே.)
இணுவில் பொருளியற்கல்லூரி
ஆரம்பம்: 06.02.2004 வெள்ளி 3.15 p.m. (ப.நே.)

குறிப்பு:
★ முதல் வகுப்பில் மாணவர் வசதிக்கேற்ப நேர ஒழுங்குகள் செய்யப்படும்.
★ A/L 2004 இற்கு தொடர்ந்து வெளிவரும் மாதிரி வினாத்தாள்களை இந்நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
(27955)(30-13-14)


**நிறைஞ்சனாஸ்** சங்கானை
பிரசாந், கிரண் நடித்த
**வின்னர்** (ரீகல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
சனி, ஞாயிறு இரவு 8.45 (பி.நே.)
How To Lose A Guy In 10 Days
(C-32981) (12)

**லிபேட்டி** அச்சுவேலி
இன்று முதல்
அர்ஜுன், சிம்ரன்,
மும்தாஜ் நடித்த
**ஏழுமலை** (ரீகல்)
காட்சிகள்.: 3.00, 7.00. (பி.நே)
(C/33049)

**நாகம்ஸ்** சுன்னாகம்
கமல், அபிராமி,
நெப்போலியன், நாசர் நடித்த
E.A.P. இன் பொங்கல் வெளியீடு
**விருமாண்டி** (ரீல்ஸ்)
(சண்டியர்) அடுத்த வெளியீடு
ஒற்றன்
காட்சி நேரம்: 11.00 3.00 7.00 (பி.நே.)
(C/33048)(12)

**லஷ்சுமி சினிமா** இணுவில்
இளம் புயல் ரவியின்
அசத்தல் நடிகை.
**ஜெயம்** (ரீகல்)
காட்சி நேரம்:
11.00, 3.00, 6.30.(பி.நே.)
(27951) (12)

**ராஜா** யாழ்ப்பாணம்
பிரசாந்த் நடித்த
**ஜோர்**
(ரீகல்ஸ்)
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
(சி-33350) (32)


# அக்ரமிற்கு எதிராக வழக்குத் தொடுத்தவருக்கு அபராதம்

இந்திய வீரர்களுக்கு வஸிம் அக்ரம பயிற்சியளிப்பதைத் தடுக்க வேண்டும் எனக்கோரி வழக்குத் தொடுத்தவருக்கு லாகூர் நீதிமன்றம் ஒன்றுக்கு அபராதம் விதித்துள்ளது.

நஜ்மல் அப்பாஸ் என்பவர் கடந்த செப்ரெம்பர் மாதம் அக்ரமிற்கு எதிராக இவ்வழக்கை தொடுத்திருந்தார்.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி அன்வர் கோண்டல், "வஸிம் அக்ரம் ஒரு தேசிய ஹீரோவாக விளங்குகிறார். அநாவசியமான தொல்லைகள் அவருக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன" - என்றார்.

மனுதாரரான நஜ்மல் அப்பாஸுக்கு 15 ஆயிரம் பாகிஸ்தான் ரூபா (சுமார் 25 ஆயிரம் இலங்கை ரூபா) அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன், கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

மேற்படி தீர்ப்புக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்த வஸிமின் சட்டத்தரணியான சௌத்ரி ஃபவாத் ஹுசைன், மேற்படி அபராதத் தொகை 'சௌகாத் தானும்' புற்று நோய் வைத்தியசாலைக்கு வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

இவ்வைத்தியசாலை பாகிஸ்தான அணியின் முன்னாள் தலைவர் இம்ரான்கானால் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மேற்படி வழக்குத் தொடர்பாக அக்ரம் கருத்துத் தெரிவிக்கையில்:-

"இலகுவான முறையில் பிரபல்யம் பெறுவதற்கு முற்படுவோர் எனக்கு மட்டுமல்ல, நீதிமன்றத்திற்கும் இடையூறு ஏற்படுத்துகின்றனர்.

எதிர்காலத்தில் இத்தகைய வழக்குகள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது.

நான் எந்த ரகசியத்தையும் மற்றவர்களுக்கு வெளியிட எண்ணவில்லை. ஆனால், இளம்பந்து வீச்சாளர்கள் எவரேனும் என்னிடம் ஆலோசனை கோரினால், நான் அவர்களுக்கு உதவுவேன் - என்றார்.

# ஸ்ரீலங்கா கிரிக்கெட்டுக்கு மார்ச் 28இல் தேர்தல்

ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் நிர்வாகக்குழுத் தேர்தல்கள் எதிர்வரும் மார்ச் 28ஆம் திகதி நடைபெறவுள்ளன. ஸ்ரீலங்கா கிரிக்கெட் தற்போதைய தலைவரான திலங்க சுமதிபால மீண்டும் இப்பதவிக்கு போட்டியிட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மோசடி குற்றச்சாட்டின் காரணமாக திலங்க தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிர்வாகக் குழு கடந்த ஜூன் மாதமே தெரிவுசெய்யப்பட்டது. எனினும், இலங்கை விளையாட்டுத்துறை சட்டத்தின்படி விளையாட்டுச் சம்மேளனங்கள் மார்ச் 31ஆம திகதிக்கு முன்னர் தேர்தல்களை நடத்த வேண்டும்.

இதனடிப்படையில் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் தேர்தல்களை மார்ச் 28ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திலங்க சுமதிபால இம்முறை போட்டியிடாவிட்டாலும் அவரது அணியைச் சேர்ந்தோர் மீண்டும் வெற்றிபெறுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. தலைவர் பதவிக்குத் தற்போதைய உபதலைவர்களான ஏ.ஜே.எம். முஸம்மில், அரவிந்த டி சில்வா ஆகியோரில் ஒருவர் போட்டியிடலாம் எனக் கருதப்படுகின்றது. எனினும், தற்போதைய நிர்வாகக் குழுவில் இடம்பெறாதோரும் இவ்வணியின் சார்பில் தலைவர் பதவிக்குப் போட்டியிடலாம் என்பதை கிரிக்கெட் சபை வட்டாரங்கள் நிராகரிக்கவில்லை.

### மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநராக சண்முகலிங்கம்

யாழ். மாவட் கிரிக்கெட் பயிற்றுநராக வி.கே.சண்முகலிங்கம் யாழ். அரச அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளார். கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் யாழ். மாவட்ட பயிற்றுநராக இவர் முன்னர் பணியாற்றி வந்தவர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராசா புஸ்பராணி

மாதகலைச் சேர்ந்த திருமதி நடராசா புஸ்பராணி நேற்று (01.02.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் நடராஜாவின் அன்பு மனைவியும் சுவேந்திராதேவி (ஜேர்மனி), வசந்தகுமாரி (யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, 2ஆம் வருட மாணவி), தவக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் முருகையா, கந்தசாமி, ஞானகுமாரி, நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அசோக்குமாரின (ஜேமனி), மாமியாரும் மாசிலன், மானுசிகா, நவீன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2004) நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாதகல் போதி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.நடராசா
(கணவர்).

காஞ்சிபுரம்,
மாதகல். (27958)(37-13-14-30)

## திருமதி பொன்னம்பலம் நீலாம்பிகை

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி பொன்னம்பலம் நீலாம்பிகை நேற்று (01.02.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஐயன்குட்டி - சின்னாச்சி தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற கணபதி ஐயாத்திப்பிள்ளையின் அன்பு மருமகளும் குகதாசன் (டுபாய்), உருத்திரராசன், காலஞ்சென்ற கலாநிதி மற்றும் சசி (சுவிஸ்), கோகிலராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேஸ்வரி (டுபாய்), தவமணி, மகேந்திரன், சிவனேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மலீசா, திவ்வியா, சரண்ஜா, அபினயா, தனுஷியா, லட்சியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2004) திங்கட்கிழமை பி.ப.4.00 மணிக்கு நயினாதீவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.குகதாசன்
(மகன்).

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (சி-33066)(37-13-14-30)

## கிருஸ்ணபிள்ளை அருந்தவமலர்

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணபிள்ளை அருந்தவமலர் நேற்று (01.02.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் புத்தூர் கிழக்கு தவமணி - காலஞ்சென்ற குமாரசாமி தம்பதிகளின் அருமை மகளும் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளையின் பாசமிகு மனைவியும் தபோதினி (சூரியா பார்மசி, அச்சுவேலி), கஜேந்தவநாதன் (வலி.கிழக்கு வடபகுதி ப.நோ.கூ.ச, அச்சுவேலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பொன்மலர், தட்சனாமூர்த்தி, ராசமலர், சிவானந்தமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2004) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.2.00 மணிக்கு அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.கஜேந்தவநாதன் (மகன்).

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (C-33067)(30-13-14-30)

# நாடு சென்றுகொண்டிருந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு பாரிய பொருளாதார வீழ்ச்சியை எதிர்நோக்கி இருக்கிறது. அதிலிருந்து நாட்டை மீட்பதற்காக நான் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளேன். எந்த நிலையிலும் நாடு பொருளாதார வீழ்ச்சியை சந்திக்க நான் அனுமதிக்கமாட்டேன். எனது அரசு பொருளாதாரத்துறையை அபிவிருத்தி செய்ய திடசங்கற்பம் பூண்டுள்ளது.

இரண்டு வருடங்கள் மட்டும் ஆட்சி செய்ய எனக்கு அதிகாரம் கொடுங்கள் என்று நான் கடந்த பொதுத் தேர்தலில் மக்களிடம் உறுதியளித்தேன். அந்த இரண்டுவருட காலப்பகுதியில் யுத்தநிறுத்தத்தைக் கொண்டு வந்து, சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்து, அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். நான் அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுவிட்டது. தொடாந்தும் அதை முன்னெடுக்க ஜனாதிபதி எமக்குத் தடையாக உள்ளார்.

எனது 2 வருட கால ஆட்சியில் நான் மேற்கொண்ட நடவடிக்கைகளில் நம்பிக்கையும் விசுவாசமும் வைத்து, உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து டோக்கியோ மாநாடு ஊடாக பெருமளவு நிதியைத் தர உறுதியளித்தன. அந்த நிதியைப் பயன்படுத்தமுடியாத சூழ்நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. எமக்கு வழங்கிய பெருந்தொகை நிதிபற்றி ஆராயும் முகமாக எதிர்வரும் 17ஆம் திகதி வாஷிங்ரன் நகரில் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டிற்கு முன் நாட்டில் ஒரு ஸ்திரமான அரசியல் சூழ்நிலை ஏற்படவேண்டும். அதையே அந்தமாநாட்டில் கலந்துகொள்வோர் எதிர்பார்க்கின்றனர்.

ஆகவே, ஜனாதிபதி தனது சுயலாபம் கருதிய செயல் திட்டங்களை விட்டுவிட்டு நாட்டு நலன் கருதி அரசுடன் இணைந்து எதிர்காலத் திட்டங்களை முன்னெடுக்கவேண்டும். அத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்பட்டால்தான், உறுதியளித்த நிதி உதவி எங்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. நிதி உதவி கிடைக்காவிட்டால் பாதிக்கப்படப்போகிறவர்கள் நானோ, அரசினரோ அல்லர்; இந்த நாடும் மக்களும்தான், ஆகவே ஜனாதிபதி இதை உணர்ந்து செயற்படுவார் என நம்புகிறோன்.

எதிர்வரும் காலங்களில் 20 லட்சம் இளைஞர்கள், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பு வழங்கும் திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளேன். இதற்கென, தொழிற்பயிற்சிக் கூடங்களை ஆங்காங்கே அமைக்கவுள்ளேன்.

இதந்கென 100 கோடி ரூபாவை நான் ஒதுக்கியுள்ளேன். அன்றைய அரசு காலத்தில் பயிற்சிக்காகவே தொழில்கள் வழங்கப்பட்டன. இன்றைய நிலையில் தொழிலுக்காகவே பயிறசிகள் வழங்கப்படுகின்றன. இன்னும் மூன்று, நான்கு வருடங்களில் எமது நாட்டில் வேலையில்லாப்பிரச்சினையை முற்றாக ஒழித்துவிடுவேன். வேலையில்லை என்ற பதத்திற்கு முடிவுகட்டுவேன்.

ஜே.வி.பி. - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் இணைந்து ஏற்படுத்தியிருக்கும் கூட்டு இந்த நாட்டை அழிவுபாதைக்கே இட்டுச்செல்லும். தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும என்று ஜே.வி.பியினர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். எத்தகைய தேர்தலுக்கும் முகம்கொடுக்கக்கூடிய வகையில் ஐக்கிய தேசியக்கட்சி தயாராக உள்ளது. ஐக்கிய தேசியக்கட்சி தேர்தலுக்கு பயந்து ஓடும் கட்சியல்ல. எமது கட்சி கடந்த தேர்தலைவிட அதிக பெரும்பான்மை வாக்குகளுடன் ஸ்த்திரமான ஓர் அரசை அமைக்க எதிர்வரும் தோர்தல் வழிவகுக்கும்.

இப்படி அவர் தனது உரையில் கூறினார்.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.வேலாயுதம் அங்கு பேசும்போது கூறியதாவது:-

நாட்டின் இன நல்லுறவுக்கும் நிரந்தரமான சமாதானத்திற்கும் கேடு விளைவித்தவர் என்ற கரும்புள்ளியுடன் ஜனாதிபதி, அரசியலில் இருநது ஒதுங்குவதைத் தவிர்த்து, எமது அரசிடம் இருந்து திருட்டுத்தனமாக எடுத்த 3 அமைச்சுக்களையும் எம்மிடமே மீளவழங்கிவிட்டு, எமது பிரதமர் முன்னெடுத்துள்ள சமாதான நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இதன் மூலமே அவர் இந்த நாட்டு மக்களின் பலத்த எதிர்ப்பிலிருந்து சிறிதளவாவது தப்பமுடியும்.

பெருந்தோட்டத்துறை பகுதியைச் சார்ந்த இந்திய வம்சாவளி மக்களின் ஒரு பகுதியினர் நாதியற்ற நிலையிலேயே இருந்து வந்தனர். இவர்களின் அவலநிலையை அகற்றி, ஏனைய மக்களிற்கு சமமாக இம்மக்களும் அனைத்து உரிமையுடனும் வாழும்வகையில் எமது பிரதமர் பிரஜாவுரிமையை வழங்கினார். அதே போன்று, காணி உரிமையையும் எமக்கு வழங்கவேண்டுமென்று பிரதமரை வலியுறுத்துகின்றேன்.

இப்படி அவர் கூறினார்.

அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, எஸ்.பி.திஸாநாயக்க, லக்ஷ்மன் செனவிரத்தின, வை.ஜே.எம். லொக்குபண்டார ஆகியோரும் அங்கு உரையாற்றினர். (எ-ரி)

# பாலியல் வல்லுறவுக்கு முயற்சி!

நாவிதன்வெளியில் தமிழ்ப்பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்க முயன்ற இளைஞர்ஒருவரை விடுதலைப் புலிகள் பிடித்து பிரதேச சமாதானக் குழுவிடம் ஒப்படைத்துள்ளனர்.

நாவிதன்வெளி, ஐந்தாம் கொலனியைச் சேர்ந்த மேற்படி பெண் ஏழாம் கிராமம் ஊடாகச் சென்றபோது பிரஸ்தாப இளைஞர் அவரைப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்க முயற்சித்துள்ளார். இதனையடுத்து அப் பெண் இளைஞரிமிருந்து தப்பிச் சென்று நாவிதன்வெளி அரசியல் துறை அலுவலகத்தில் முறையிட்டுள்ளார்.

பின்பு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் விந்தியன் மேற் கொண்ட துரித நடவடிக்கையை அடுத்து மேற்படி நபர் பிடிக்கப்பட்டு பிரதேச சமாதான சபைத் த்லைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது விடயமாக, மேற்படி ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

இலங்கைக்கு 1948ஆம் ஆண்டு அன்னியர்களால் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அன்றிலிருந்து இன்றுவரை தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதுடன் அவர்கள் மீது கொடுரமான இன வெறித் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

இனப்படுகொலைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதுடன் அவர்களது இருப்பிடங்களும் ஆக்கிரமிக்கப்பட்டன. தமிழ் பேசும் மக்கள் அகதிகளாகவும், அநாதைகளாகவும், ஏதிலிகளாகவும் இடம்பெயர்ந்து உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் அல்லல்படும் நிலை உருவானது. அடிப்படை மனித உரிமைகள்கூட வழங்காத நிலையில் ஸ்ரீலங்கா அரசு தனது செயற்பாடுகளைத் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

55 வருடங்களாக தமிழன் தனது உரிமைகளுடன் வாழும் வழிகள் அனைத்தும் தடுக்கப்படுகின்றன. இன்றைய அமைதிச் சூழலில் கூட பல லட்சம் மக்கள் தங்களது சொந்த இடங்களில் வாழ்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டு அகதி முகாம்களில் வாழ்வதற்கான சூழலை இலங்கை அரசே செய்துகொடுத்துள்ளது. அகதி முகாமில் இருந்து கொண்டு அடுத்த வேளை உணவிற்கு யாரோ ஒருவரிடம் கையேந்தி நிற்கும் நிலையைத் தோற்றுவித்துக்கொண்டு அரசியல் பிரச்சினை உள்ளது என்று ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் அதிகாரப் போட்டியில் இழுபறி நிலையில் இருந்தவண்ணம் சுதந்திரதினத்தை மாத்திரம் சேர்ந்து கொண்டாடத் தயாராகின்றார்கள்.

உள்நாட்டிற்குள்ளேயே அகதியாகி அநாதையாகி ஏதுமற்ற நிலையில் பலலட்சம் மக்கள் தவித்துக்கொண்டிருக்க எந்தவொரு சுதந்திரத்தையும் அனுபவிக்கமுடியாது வேதனையால் துவண்டுகொண்டிருக்க சுதந்திர தினத்தை ஸ்ரீலங்கா கொண்டாடுகின்றது. இருண்டுபோய்க்கொண்டிருக்கும் தமிழர்களின் வாழ்வில், வரும் 04.02.2004 அன்று சுதந்திரதினமல்ல துக்கதினமேயாகும்.

எனவே, இத்துக்கதினத்தைக் கொண்டாடும் முகமாக தமிழ் பேசும் மக்கள் அனைவரும் எமது எ[illegible]பினைக் காட்டுவோம். அனைத்து இடங்களிலும் கறுப்புக் கொடிகள் கட்டி, கறுப்புப் பட்டிகள் அணிந்து எமது உணர்வுகளை வெளிக்கொண்டு வருவோம். - என்றுள்ளது.

(எ-3-164)

# கூட்டணித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கட்சியாக செயற்பட முடியாமல் முடக்கப்படும் நிலைக்குச் சென்றுவிடும் என்று அரசியல் வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையில், ஆனந்தசங்கரியின் வழக்கு மீது எதிர்வரும் 11ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படவிருக்கிறது.

ஆனால், ஆனந்தசங்கரிக்கு எதிரான தரப்பினர், வழக்கு கடந்த தவணை நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட போது ஆனந்தசங்கரியின் தலைமையில் முன்னர் இடம்பெற்று இடைநிறுத்தப்பட்ட மத்திய குழுக் கூட்டத்தை அவரது தலைமையில் தொடர்ந்து நடத்துவதற்கு இணக்கத்தைச் சாதுரியமாகப் பெற்றுக்கொண்டனர் ஆனந்தசங்கரிக்கு எதிரான தரப்பினர். அதனடிப்படையிலேயே நேற்றுக் கூட்டம் நடத்தப்பட்டது.

காலை 10 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மத்திய குழுவின் 42 உறுப்பினர்களில் 26 பேர் பங்கு பற்றினார். தேர்தல் நியமனக் குழுவை உடனடியாகத் தெரிவுசெய்வதை தலைவர் ஆனந்தசங்கரி ஆரம்பத்தில் ஆட்சேபித்த போதிலும் ஏனையோரின் வற்புறுத்தலுக்கு அமைய அதற்கு அவர் இணங்கினார்.

கட்சியின் பொதுச்சபையைக் கூட்டுவதற்கான திகதி குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. ஆனால், அடுத்த கூட்டத்தில் அதனை முடிவு செய்யலாம் என்று ஆனந்தசங்கரி தெரிவித்த கருத்து பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எதிர்வரும் 22ஆம் திகதி அக் கூட்டம் கொழும்பில் நடைபெறும்.

அம்பாறை கரையோரப் பிரதேச உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளை இடைநிறுத்தி, அதனை ஒத்தி வைக்கும்படி தேர்தல் ஆணையாளரைக் கோருவது எனவும் நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கூட்டணியின் தேர்தல் நியமனக் குழு உத்தியோகபூர்வமாக தெரிவு செய்யப்பட்டுவிட்டதால் -

இனிமேல் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பான சிக்கல், நீதிமன்றங்கள் மற்றும் மேன்முறையீடுகள் காரணமாக இழுபட்டு, கட்சி அமைப்புக்களின் கூட்டங்களைத் தொடர்ந்து கூட்டமுடியாத சிக்கல் நீடித்தாலும் -

பொதுத் தேர்தல் ஒன்று திடீரென வந்தால் உத்தியோகபூர்வமாக இயங்கக் கூடிய தேர்தல் நியமனக்குழுவின் உதவியோடு கட்சியின் செயலாளர்நாயகம் தேர்தல் பணிகளைத் தங்கு தடையின்றி முன்னெடுத்துச் செல்லலாம் எனவும், நியமனக்குழு சட்டப்பிரச்சினை ஏதுமின்றி வேட்பாளர்களைத் தீர்மானித்து அறிவிக்கலாம் எனவும் -

அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# இந்தியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்கருத்தை "வெறும் அபத்தம" என்று நிராகரித்த கதிர்காமர், "இப்படிப் பல முட்டாள்தனமான கதைகள் அடிபடுகின்றன. இது யதார்த்த நிலையை முற்றிலும் புரிந்துகொள்ள முடியாதவராக அவர்(அமைச்சர் டிரோன் பெர்ணாண்டோ) இருப்பதையே காட்டுகின்றது." என்றும் கூறினார்.

"பிணக்கை சுமுகமாகத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி தரப்பிலிருந்து நான்கு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், பிரதமர் அவை அனைத்தையுமே நிராகரித்துவிட்டார். அவர், நியாயமாகச் செயற்படவில்லை. அதானல், சமாதான முயற்சிகள் அஸ்தமிக்கும் கட்டத்தை அடைந்துவிட்டன. இந்த சமாதான முயற்சிகள் தொடர்பாக இருந்த நம்பிக்கைகள் இழக்கப்பட்டுவிட்டன.

1987 - 1990களில் ஏற்பட்ட விபாீத அனுபவங்களை இந்தியா மறந்துவிடவேண்டும். அவை பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன் நடந்தவை. முழு விவகாரத்தையும் இந்தியா புதிய நோக்கோடு பார்க்க வேண்டும். அதற்காக இந்தியா நேரடியாகத் தலையிடவேண்டும் என நான் கூறவில்லை. ஆனால், அதன் நலன்களை அது கவனிக்கவேண்டும் என்றே நான் கூறுகிறேன்.

"இந்தப் பிரதேசத்தில் பூகோள அரசியல் ரீதியில் இந்தியா முக்கியத்துவமானது. நாங்கள் அனைவரும் (ஏனைய நாடுகள் அனைத்தும்) இந்தியாவின் பாதுகாப்பு சிரத்தைகளை மதிக்கவேண்டும்.

"புலிகளின் தற்போதைய யோசனைகள் சமஷ்டித் தீர்வுக்கு அப்பால் சென்றுள்ளன. அது தொடர்பில் தனது நலன்களைக் கவனிக்கவேண்டிய தேவை இந்தியாவுக்கு உள்ளது.

"இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் இந்தியாவால்தான் ஒரு தீர்வை நிலைநிறுத்திவைக்க முடியும்.

"இந்தியா மௌனமாக இருப்பதால்தான் இலங்கை விவகாரத்தில் நோர்வேயின் அனுசரணையும் ஜப்பானின் தலையீடும் சாத்தியமாயிற்று.

"இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்தானதால் தமது இராணுவ சமநிலை பாதிக்கப்படும் என்று புலிகள் இயக்கம் கவலைப்படுகிறது.

"இந்தியாவின் அதிகளவு பங்களிப்பு இல்லாமல் இவ்விடயத்தில் முன் நகர்வதற்கு வேறு வழி ஏதும் எனக்குத் தென்படவில்லை" - என்றார் கதிர்காமர்.

# சு.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கைச்சாத்திடப்படும்.

ஐ.ம.சு. முன்னணியில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளின் முக்கியஸ்தர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொள்வர்.

தேசிய ஐக்கிய முன்னணி (நு.ஆ) தலைவி பேரியல் அஷ்ரப், சேகு இஸ்ஸதீன், எம்.ஏ.எம் ஹிஸ்புல்லா ஆகிய எம்.பிக்களும் இவ்வைபவத்தில் கலந்துகொள்வர்.


CCS
புதிய பிரிவுகள் ஆரம்பம் 05 & 07 feb
வார. வாரஇறுதி. காலை மாலை நேர [5PM-7PM] வகுப்புகள்
MS OFFICE XP
DESKTOP PUBLISHING
VISUAL BASIC
JAVA, C++
WEB DESIGNING(HTML)
FLASH MX-6
HARD WARE
FUTURE KIDS (Children)
அனுமதிகளுக்கு முந்துங்கள்
College of Computer Studies
302/1 Navalar Road
Anaipanthi
Jaffna
0777-279034

Lingam master - swiss
சுவிஸ் வாழ் தமிழர்களின் முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - swiss. (26642)(36-12)

eTouch COMPUTER SYSTEM
"The right way to touch IT"
UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA.
T.P.: 0214-590222 E-Mail: etouch@wow.lk
மிகவும் குறைந்த கட்டணத்தில் வார, வார இறுதி, மாலை நேர (4.00 p.m. to 7.00 p.m.) வகுப்புகள் ஆரம்பம்.

| COURSE NAME | COURSE FEES | DURATION |
|---|---|---|
| DIPLOMA IN PC HANDLING | FREE | 6 Weeks |
| DIPLOMA IN MICROSOFT OFFICE | 1500 | 3 Months |
| DIPLOMA IN INFORMATION TECHNOLOGY | 1500 | 3 Months |
| DIPLOMA IN MULTIMEDIA | 2000 | 3 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 2000 | 3 Months |
| DIPOLOMA IN ENGINEERING DRAWING | 2000 | 3 Months |
| DIPLOMA IN COMPUTER PROGRAMMING | 2000 | 4 Months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE | 2500 | 4 Months |
| SRI LANKA COMPUTER DRIVING LICENSE | 3000 | 4 Months |

REGISTRATION FEES 1100/=
- புதிதாகக் கணனி வாங்கிய ஒவ்வொருவரும் ஒரே மாதத்தில் கணனியிற் முழுமையாக அறிந்துகொள்ளும் Diploma in PC Handling (Online Class) பதிவுக் கட்டணம் மட்டுமே அறவிடப்படும்!!!
- GIT பாடவிதானத்தை உள்ளடக்கி பாடசாலை மாணவர்களுக்கான மாலை நேர (3.30 to 4.30) கற்கைநெறி - Diploma in Information Technology.
- இலங்கை அரசினால் நடத்தப்படும் கணனியில் தேசிய பயிற்சி சான்றிதழிற்கான (Sri Lanka Computer Driving Licence - SLCDL) வகுப்புகள்.

புதிய பிரிவுக்கான வகுப்புகள் ஆரம்பம்
05.02.2004 காலை - 10.00
(27942)(36-12)

உயர் கல்விக் கழகம் கண்டி வீதி, கைதடி.
A.L 2006, 2005, 2004 வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் : 03-02-2004 செவ்வாய் 4.00 மணி.
பொருளியல் திரு.உதயன் | வணிகக்கல்வி திரு.உமாகாந்த் | கணக்கீடு திரு.சதீஸ்
★ . A/L 2006, 2005 கலை, வர்த்தகப் பிரிவுகள் நடைபெறுகின்றன.
★ . A/L 2004 கலை, வர்த்தகப் பிரிவுகள் அலகுரீதியான துரித மீட்டல் வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. (27944)(30-13-14)

SUBRA
சித்தன்கேணி
(Gove- Reg.)
2006 A/L
கலை, வர்த்தக, கணித விஞ்ஞானப் பிரிவுகள் நடைபெறுகின்றன.
பேச்சு ஆங்கிலம்
By - BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்
6. 2. 2004 வெள்ளி மாலை 4.00
(அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை)
(C/33031)(30-13-14)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.